எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்கள் மேம்பாட்டு இதழ்

பன்மொழி மின்னிதழ்

மலர்-1 இதழ்- 9 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | மே 2025

சித்திரைச் சிறப்பிதழ்

கட்டுரை

சீர்மிகு சித்திரை - செ. ராஜேஸ்வரி

திருமாலும் திருமுருகனும் உறையும் அழகர் மலை - சந்திரிகா சுப்ரமண்யன்

தன்னை அறிந்து தலைசிறந்து வாழ்க! - ஜெயந்தி

மறுமணச் சிக்கல்கள் - ஜ. ஜான்சிராணி

சிறுகதை

மனோகரியின் துணிபு - சசிகலா விஸ்வநாதன்

புத்திசாலி மனைவி - மெய் சித்ரா

என் பல்ஸ்.....சர் - அர்ஷா

தனம்மா பாட்டி - வி.கலாவதி

கவிதை

ஒரு துளி! - வித்யா மனோகர்

அன்னை இல்லம் - கார்த்திகா கவின் குமார்

காதலியின் கனவுகளில் காகிதக் கப்பல்கள் - ஜெர்லின் பிரிஷா

கவிதை - நெல்லை க.சோமசுந்தரி

வேப்ப மாலை சூடிய பாண்டியர் பேரரசி மீனாட்சியம்மை

பொன் ஏர் பூட்டும் முன்பு ஏர் கலப்பைக்குப் பூசை செய்தல்

எங்கெங்கு காணினும் சக்தி
பெண்ணிதழ்

மலர்-1 இதழ்- 9 மே 2025

நிறுவனர் &
தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி [USA]

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா
சுப்ரமணியன்[சிட்னி]

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் [NJ]

Shakthi

Printed and Published by :
E.Satish Rajkumar [Advocate]

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 7871123226,
+91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில்
இடம்பெற்றுள்ளகருத்துகள்
அனைத்தும் கட்டுரையாளர்களின்
கருத்துகளே ஆகும். அவற்றுக்கும்
இதழாசிரியருக்கும் எந்தத்
தொடர்பும் இல்லை

உள்ளடக்கம்

1. **மரியாணாவின் காதல்** 2
- செ. ராஜேஸ்வரி

2. **சீர்மிகு சித்திரை** 3
- செ. ராஜேஸ்வரி

3. **காமம் உருட்டும் சகுனியின் சொக்கட்டான்கள்** 7
- ம.வீ. கனிமொழி

4. **புத்திசாலி மனைவி** 8
-மெய் சித்ரா

5. **கவிதை** 14
- அழகை ஹைருன்நிஷா

6. ***WOMEN IN INDIA FROM PAST TO PRESENT- CHANGES AND CHALLENGES*** 15
- V. Ananthi

7. **கவிதை** 27
- நெல்லை க.சோமசுந்தரி

8. **தன்னை அறிந்து தலைசிறந்து வாழ்க!** 28
- ஜெயந்தி

9. **ஒரு துளி!** 35
- வித்யா மனோகர்

10. **மனோகரியின் துணிபு** 36
- சசிகலா விஸ்வநாதன்

11. **மறுமணச் சிக்கல்கள்** 39
- ஜ. ஜான்சிராணி

12. **என் பல்ஸ்.....சர்** 41
- அர்ஷா

13. **கூத்துகள் கட்டுகிறது** 54
- வித்யா மனோகர்

14. **திருமாலும் திருமுருகனும் உறையும் அழகர் மலை** 59
- சந்திரிகா சுப்ரமண்யன்

15. **கதைகளின் வஞ்சம்** 79
- மெய் சித்ரா

16. **காதலியின் கனவுகளில் காகிதக் கப்பல்கள்.** 85
- ஜெர்லின் பிரிஷா

17. **வீதிகளில் உலாவும் மனித மனங்கள்** 86
- த.ஜான்சிபால்ராஜ்

18. **தனம்மா பாட்டி** 92
- முனைவர் வி.கலாவதி

19. **கேள்வியும் பதிலும்** 95
- சசிகலா விஸ்வநாதன்

20. **பொந்திடை மலர்ந்த பூக்கள்** 97
- வித்யா மனோகர்

21. **அன்னை இல்லம்** 100
- கார்த்திகா கவின் குமார்

மரியானாவின் காதல்

காதலுக்கோ கல்யாணத்துக்கோ அல்ல
கொடுப்பதற்கோ எடுப்பதற்கோ கிடையாது
நான் அவனைக் காதலிக்கிறேன்
அவன் என்னைக் காதலிக்கவில்லை
நான் அவனைத் தான் காதலிக்கிறேன்
என் இதயம் நொறுங்குகிறது

வசந்தத்தின் காட்சிகள் இனியன
வயலட் பூக்களின் அழகும் இனியது
காதலிப்பதும் காதலிக்கப்படுவதும்
இனிமையோ இனிமை
என் அறிவுக்கு எட்டாத நல் அறிவு இது

காதல் பெருமூச்சு விடக் கலங்குவோர் யார்?
அது ஓர் இன்பப் பெருமூச்சு
காதல் ஒரு பொக்கிஷம்
அதில் வீணாவது எதுவுமில்லை
காதலிக்கப்படுவதும் இனிமை
அதில் கணக்குப் பார்க்க வேண்டாம்
அளவு பார்க்காமல் காதலிப்பதே இனிமை

காதலிக்க முயன்ற அக்காதல் இனிமை
காதலித்துப் பெருமூச்சுவிட்ட அக் காதல் இனிமை
ஒரு முறை என்னைக் காதலித்து
எனக்காக பெருமூச்சு விடு
நீயே என் காதலன் உன்னைக் காதலித்து
உன் காதலுக்காக உயிர் துறப்பேன்.

- கிறிஸ்டினா ராசெட்டி

மொ.பெ., செ. இராஜேஸ்வரி

சீர்மிகு சித்திரை

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

தமிழ் மாதங்களில் முதல் மாதம் சித்திரை ஆகும். மதங்கள் முழுநிலவு தோண்டும் நட்சத்திரத்தின் பெயரால் அழைக்கப் பெறுகின்றன. பூமியின் சுழற்சியால் கதிரவன் நாள் மேஷ ராசியில் புகுமவதாகக் கணிக்கப்படும் நாள் சித்திரை மாதப் பிறப்பாகும். இம்மாதத்தில் பௌர்ணமி சித்திரை நட்சத்திரத்தன்று வரும். எனவே இம்மாதம் சித்திரை எனப்பட்டது.

அடுத்து சூரியன் ரிஷப ராசிக்கு மாறும். அப்போது பௌர்ணமி விசாக நட்சத்திரத்தன்று வரும். எனவே இம்மாதம் வைசாகம் ரணரும் வைகாசி என்றும் அழைக்கப்பட்டது.

சித்திரை முதல் நாள்

சித்திரை முதல் நாளன்று வேளாண் குடிமக்கள் பொன்னேர் பூட்டுவர். சில ஊர்களில் நாள் ஏர் பூ ட்டுதல் என்பர். பொன்னேர் பூட்டுவதற்கு முன்பாகத் தங்கள் வீடுகளில் பொங்கல் வைத்து குலதெய்வத்திற்கு வழிபாடு செய்வர். மாட்டு தொழுவத்திலும் பொங்கல் வைத்து மாடுகளை வணங்கி மாடுகள் மீது மஞ்சள் தண்ணீர் ஊற்றுவார்கள்

தார்க் குச்சி ஊர்வலம்

ஏர் பூட்டும் விவசாயிகள் தார்க் குச்சியோடு நீண்ட வரிசையில் ஊர்வலமாக வருவர்கள். வந்து ஊர்த் தெய்வக் கோவிலுக்கு வந்து சாமி கும்பிடுவார்கள். தங்கள் நிலங்களில் ஏர்பூட்டி உழுது விதை விதைத்து வீட்டுக்கு திரும்பி வருவார்கள். அப்போது முறைப் பெண்கள் வேளாண் குலத்தின் ஆடவர் மீது மஞ்சள் தண்ணீர் ஊற்றி விளையாடுவார்கள். குலவை இடுவார்கள். இந்நிகழ்ச்சி ஊர் நிகழ்ச்சியாக சிறப்பாக நடைபெறும்.

நாள் ஏர் பூட்டுதல்

மதுரையில் திருப்பரங்குன்றத்தில் தார்க் குச்சி ஊர்வலம் மலையைச் சுற்றி சிறப்பாக நடைபெறும். திருப்பரங்குன்றத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏழு பெரிய கண்மாய்கள் உள்ளன. இக்கண்மாய் நீரை தங்கள் நிலத்தின் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வேளாண் குடிப் பெருமக்கள் தார்க் தம்புடன் கிரிவலம் வந்து முருகனை வழிபடுவர். இதனை நாள் ஏர் வைப்பது என்று அழைப்பர். தங்கள் நிலங்களில் ஏர் உழுத பின்பு திருப்பரங்குன்றம்

மலையின் பின்பக்கம் உள்ள குகைக் கோவில் வளாகத்தில் கூடுவர். அங்கு ஊர்த் தச்சர், சலவையாளர், நாவிதர் மடைதிறப்போர் போன்றவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்வர். ஆண்டுக்கு ஒருமுறை இவ்வாறு கூலி நிர்ணயம் செய்வது உண்டு. அதன் பின்பு முருகனுக்கு சிறப்பு பூஜைகள் செய்வர்.

பொன் ஏர் பூட்டுதல்

மதுரையில் கள்ளந்திரிக்கு அருகே உள்ள பஞ்சந்தாங்கி பட்டி என்ற ஊரில் அழகி அம்மன், மந்தைக் கருப்பசாமி, நாகம்மாள் கோவில்கள் உள்ளன. அங்கு பொன் ஏர் பூட்டும் நாளான அன்று சித்திரை முதல் நாளில் வேளாண் குடி மக்கள் ஒன்று கூடி எள்,. கம்பு, பயறு, சோளம் ஆகிய வித்துக்களையும் கலப்பையையும் வைத்து வழிபாடு சிறப்பு வழிபாடுகள் செயவர். அதன் பின்பு தங்கள் கலப்பையைத் தோளில் சுமந்து கொண்டு வயலுக்குச் சென்று ஏர் பூட்டி உழுவர்.

வெள்ளலூர்

மதுரை மாவட்டத்தில் மேலூர் அருகே வெள்ளலூரைத் தலைமை ஊராகக் கொண்ட 300 கிராமங்கள் உள்ளன. இந்த 300 கிராம மக்களும் மந்தைக் கருப்பசாமி கோவிலில் சித்திரை முதல் நாள் கூடி வெற்றிலை பிரித்துத் தரும் விழா நடத்துவர். இதனை வெற்றிலை பிரி திருவிழா என்பர். இப்பகுதியின் முன்னூறு கிராமங்கள் ஐந்து மாகாணங்களாகவும் 11 கரைகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

வெற்றிலை பிரி திருவிழா

மந்தைக் கருப்பணசாமி கோவிலில் சிறப்பு வழிபாடுகள் செய்த பின்பு கோவிலின் பின்புறம் உள்ள கருங்கல் பாறையின் மீது ‘ வெள்ளலூர் நாட்டு அம்பலக்காரர் தலைமையில் 11 கரைகளைச் சேர்ந்த 22 அம்பலகாரர்களும் இளங்கட்சிகளில் உள்ள 500க்கும் மேற்பட்டவர்களும் ‘ப’ வடிவில் அமர்ந்திருப்பர். இவர்களுக்கு பிரித்து வழங்குவதற்காக அங்கு வெற்றிலை கவுளி கவுளியாக அடுக்கி வைக்கப்பட்டு இருக்கும். அவற்றை ஐந்து மாகாணங்களுக்கு பிரித்துக் கொடுப்பார். பின்பு ஐந்து மாகாணங்களுக்கு உரியவர்கள் 11 கரைகளுக்கும் பிரித்துக் கொடுப்பார்கள். 11 கரைகளுக்கு உரியவர்கள் பின்னர் 500 இளங்கச்சிகளுக்கு பிரித்துக் கொடுப்பார்கள். நிறைவாக 300 கிராமங்களில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வெற்றிலை பிரித்து கொடுக்கப்பட்டுவிடும்.

ஒவ்வொரு குடும்பத் தலைவரும் வெற்றிலையை வீட்டுக்குக் கொண்டு வந்து சாமி படத்தின் முன்பு வைத்து வணங்கிய பின்பு கலப்பை, மண்வெட்டி, தொழு உரம் ஆகியவற்றையும் வைத்து வணங்குவார்கள். பின்பு கலப்பையை எடுத்துக்கொண்டு தங்கள் நிலத்தில் ஏர் பூட்டி உழுவர்.

சித்ரகுப்தன் திருமண நாள்

சித்திரை முதல் நாள் அன்று சித்திரகுப்தனுக்கு சிறப்பு பூஜை நடைபெறும். சித்திரகுப்தன் என்பவன் எமதர்மனிடம் இருந்து மக்களின் நன்மை தீமைகளுக்கு ஏற்ப அவர்களின் ஆயுள் கணக்கை கணித்துத் தரும் கணக்கன் ஆவான். இவன் சிவபெருமானின் உத்தரவுப்படி எமனிடம் தலைமைக் கணக்கனாய் சேர்ந்திருந்தான். இதனால் சித்திரகுப்தனின் சிலையின் ஒரு கையில் பனை ஓலை சுவடியும் மறு கையில் எழுத்தாணியும் காணப்படும்.

காஞ்சிபுரம் நெல்லுக்காரத் தெருவில் சித்ரகுப்தனுக்குத் தனிம் கோவில் உண்டு. சித்திரகுப்தன் இந்திரனுக்கும் காமதேனு பக்கம் பிறந்தவன் என்றும் பார்வதி தேவி ஒரு சித்திரத்திற்கு உயிர் கொடுத்ததால் உருவானவன் என்றும் இரு வேறு கதைகள் வழங்குகின்றன. சித்ரா பௌர்ணமி அன்று சித்ரகுப்தனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் காலையில் நடைபெறும். அன்று மாலையில் கர்ணாம்பிகை உடன் சித்ரகுப்தனுக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

விளக்குமாற்றுப் பூசை

தேனி மாவட்டத்தில் தேனி மாவட்டத்தில் சித்திரை மாதம் சில வினோத வழிபாடுகளும் நடைபெறுகின்றன. ஆண்டிப்பட்டி வட்டத்தில் உள்ள மறவபட்டி என்ற ஊரில் முத்தாலம்மன் கோவிலில் சித்திரை மாதம் திருவிழா நடைபெறும். அப்போது மாமன் மச்சான் உறவு உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் விளக்குமாற்றால் அடித்துக் கொள்வார்கள். இதுவும் ஒருவகை வழிபாட்டுச் சடங்கு ஆகும். விளக்குமாற்றால் அடித்தால் அவரைப் பிடித்து இருக்கும் பேய் பிசாசு நோய் நொடி விலகிவிடும், என்பது ஒரு நம்பிக்கை. இதை விளக்குமாற்றுப் பூசை என்பர்

கத்தி வீச்சு வழிபாடு

தேனி அருகே பழனிச்செட்டி பட்டியில் உள்ள சவுண்டம்மன் கோவிலில் சித்திரை முதல் நாள் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். அன்று பக்தர்கள் தங்கள் மார்பில் கத்தியால் அடித்து காயப்படுத்தி இரத்தம் சிந்தி ஒரு வழிபாட்டுச் சடங்கை நிகழ்த்துவர். இதற்கு ஒரு வரலாறும் அவர்களுக்கு உள்ளது.

மண்டலப் புஷ்பம்

நாகை மாவட்டத்தில் அஷ்ட வீரட்டான தலங்களில் ஐந்தாவதாக விளங்கும் திருப்பயங்குடி ஆலயத்தில் சித்திரை மாதம் சிலத்தி மரம் என்ற மூலிகை மரம் பூக்கத் தொடங்கும். இத்தல விருட்மான

சிலத்தி மரம் சித்திரை முதல் நாள் தொடங்கி வைகாசி 18 வரை 48 நாட்கள் மட்டுமே பூக்கும். இது ஒரு மண்டலம் மட்டுமே பூக்கும் மண்டலப் புஷ்பம் ஆகும். இங்குக் கோயில் கொண்டிருக்கும் பயற்றிசருக்கு இக்காலகட்டத்தில் இம்மலர்களைப் படைத்து வழிபட்டால் ஏழேழு ஜென்மத்தின் பாவங்கள் நீங்கும் என்பது ஐதீகம்.

அமிர்த வர்ஷினி மரம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆழ்வார்குறிச்சிக்கு மேற்கே அத்திரி மலையின் மீது ஒரு சிவன் கோவில் உள்ளது. அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் பெயர் அத்ரி பரமேஸ்வரரணன். இக்கோயிலின் தலவிருட்சம் அமிர்தவர்ஷினி மரம் ஆகும். இம்மரம் ருத்ர விநாயகர் சன்னதிக்கு பின்புறம் உள்ளது. இம் மரத்தின் எல்லாக் கிளைகளில் இருந்தும் சித்திரை முதல் நாள் முதல் சித்திரை கடைசி நாள் வரை தண்ணீர் தெளித்து கொண்டே இருக்கும். இத்தண்ணீரை அமுதம் எனக் கருதுகின்றனர். அமுதத் துளிகளை பன்னீர் துளிகள் போல சிந்துகின்ற மரம் அமிர்தவர்ஷினி மரமாகும்.

சித்திரைக் கனி

தமிழகத்திற்கு அருகே உள்ள கேரள மாநிலத்தில் சித்திரை முதல் நாள் கனி காணும் நிகழ்ச்சி நடக்கும். இதை சித்திரை கனி என்பர். முதல் நாள் இரவில் ஒரு தாம்பாளத்தில் பல்வேறு கனிகளை வைத்து அதில் பொன் நகைகள், முகம் பார்க்கும் கண்ணாடி மற்றும் ரூபாய் நோட்டு, நாணயங்கள் ஆகியவற்றை வைத்து விடுவர். மறுநாள் காலை கண்விழிக்கும் போது இந்த மங்களப் பொருட்கள் இருக்கும் தட்டில் கண்விழிப்பர். இதுவே கனி காணும் நிகழ்ச்சியாகும்.

சித்திரைப் பூக்கள்

சித்திரை மாதத்தில் கொன்றை மரங்கள் பூத்துக் குலுங்கும். கொன்றை பூக்கள் அடர் மஞ்சள் நிறத்தில் கொத்துக்கொத்தாக பூக்கும். இப் பூவை மலையாளத்தில் கொன்னப்பூ என்பர். தமிழில் கொன்றைப் பூ என்போம். ஆங்கிலத்தில் பொன் மழை (கோல்டன் ஷவர்) என்பர்.

சித்திரை மாதம் வெப்பத்தைத் தணிக்க இளநீர், நுங்கு, வெள்ளரிக்காய் நிறைய கிடைக்கும். சித்திரை வெயிலுக்கு மல்லிகைப் பூ நிறைய பூக்கும்.

இந்திரனுக்குரிய சித்ரா பௌர்ணமி

சிலப்பதிகாரம், மணிமேகலை காலத்தில் சித்திரை பௌர்ணமி அன்று தொன்று தொட்டு நடந்து வந்த இந்திரவிழா பக்தி இலக்கியக் காலத்திற்குப் பிறகு பெருமாள் ஆற்றில் இறங்கும் வைபவமாக மாறியது. வைகை ஆற்றின் நெடுகிலும் சோழவந்தான், மதுரை, பரமக்குடி போன்ற ஊர்களில் அழகர் ஆற்றில் இறங்குவார். சிவன் கோயில்களில் சித்ரா பௌர்ணமி அன்று இந்திரன் சிவனை வழிபடும் முக்கிய நாளாகக் க்ருதப்படுகிறது.

சித்திரைத் தேர்

மதுரை, ஸ்ரீரங்கம் போன்ற சில ஊர்களில் சித்திரையில் தேர்த் திருவிழா நடக்கும். பொதுவாக பங்குனி உத்திரத்தன்று வசந்த விழா, இராமேஸ்வரம், திருப்பரங்குன்றம் போன்ற தெய்வத் திருத்தலங்களில் தெய்வத் திருமணங்கள் நடைபெறும். ஆனால் மதுரையில் மட்டும் சித்திரை மாதத்தில் மீனாட்சி - சொக்கர் திருக்கல்யாணம் நடக்கும். இவ்வாறு மண நாளை மாற்றி வைத்தவர் மதுரையை ஆண்ட மாமன்னர் திருமலை நாயக்கர் ஆவர். இதனை சித்திரையில் செல்ல கல்யாணம் என்பர். பொதுவாக தமிழ்நாட்டில் சித்திரையில் திருமணங்கள் நடத்தும் மரபு காணப்படவில்லை.

இவ்வாறு சித்திரை மாதம் பல்லாற்றானும் தமிழ்ப் பண்பாட்டில் இன்றியமையா இடத்தைப் பெற்றுள்ளது

காமம் உருட்டும் சகுனியின் சொக்கட்டான்கள்

நீண்ட இரவில்
கத்திக் கொண்டே இருக்கும்
சுவர்க் கோழி
காதில் மெல்ல உன் மூச்சுக் காற்றுப்
படரும்போது என் மெல்லிய அதிர்வுகளால்
மௌனமாகிப் போகிறது
சாளரம் வழியே படரும் நிலவொளி
பிணைந்திருக்கும் நம்மைக் கண்டு
அதன் நிழலால் போர்வை நெய்து
மேகத்திற்குள் நாணத்தால் ஒளிந்து கொள்கிறது
சில நேரம் எதைக் கொடுத்தால்
எதைத் திருடலாம் என நீ
நினைப்பதை என் மனப்பார்வை
காட்டிக் கொடுக்கிறது
காமம் உருட்டும்
சகுனியின் சொக்கட்டான்கள்
உன் விரல்கள்

- ம.வீ. கனிமொழி

புத்திசாலி மனைவி (கொரிய சிறுகதை)

–மெய் சித்ரா

மனைக்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (குறள் 51)

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன்கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகிறவளே வாழ்க்கைத்துணை ஆவாள்.

(மு வரதராசன்)

கொரிய நாட்டில் பாக் ஆங்ஜிப் என்பவன் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன். அந்தக் குடும்பத்தில் குழந்தைகள் அனைவருக்கும் பொழுது போக்க நிறைய நேரம் இருந்தது. அதனால் அவர்கள் நன்கு கற்று, அறிஞர்கள் ஆக வேண்டும் என்று குடும்பத்தில் பெரியவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் ஆங்ஜிப் படிக்க மறுத்தான். அவனது தந்தைக்கு இதனால் அவன் மேல் வெறுப்பு ஏற்பட்டது.

வீட்டில் இருப்பதால் தானே சொகுசாய் வாழ்ந்து கொண்டு, படிக்க மறுக்கிறான். அவனை வீட்டை விட்டு விரட்டிவிட்டால் வாழ்க்கை என்னவென்று புரியும் என்று எண்ணினார். பிச்சைக்காரனைப் போல் அலைந்து திரிந்தால், படிப்பின் மகிமை என்னவென்று அறிவான் என்றும் எண்ணினார்.

ஒரு நாள் அவரது சகோதரர் வீட்டிற்கு வந்தார். அவர் ஆங்ஜிப்பைப் பற்றி விசாரித்தார். அவனுடைய மந்தப் புத்தியைப் பற்றி கூறி, கவலை மிகக் கொண்டார்.

சகோதரர் அவருக்கு ஆங்ஜிப் திருந்துவான் என்று கூறி ஆற்றுப்படுத்தினார்.

அப்போது ஆங்ஜிப் தந்தைக்கு ஒரு யோசனை தோன்றியது.

“தம்பி எனக்கு ஒரு உதவி செய்கிறாயா? நீ ஆங்ஜிப்பை உன்னுடன் அழைத்துச் சென்று பார்த்துக் கொள்கிறாயா? அந்த முட்டாளைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. பதினான்கு வயதான போதும், இன்னும் எழுதப் படிக்க கற்காமல், வெட்டியாய் திரிந்து கொண்டு இருக்கிறான்,” என்றார்.

“அண்ணா... வருந்தாதீர்கள். அவன் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும், உங்களுடைய மகன் தானே, இப்படியெல்லாம் அவனை வெறுக்காதீர்கள்,” என்றார்.

"நீ அழைத்துச் செல்லவில்லையென்றால், நான் அவனை வீட்டை விட்டுத் துரத்துவதாய் உள்ளேன்," என்று முடிவாய்க் கூறினார்.

இறுதியில் சகோதரர், ஆங்ஜிப்பைத் தன்னுடன் அழைத்துச் சென்று பார்த்துக் கொள்ளச் சம்மதித்தார். அதற்கு முக்கிய காரணம் ஒன்று இருந்தது.

தோற்றத்தில் மிகவும் அழகனாய் இருக்கும் ஆங்ஜிப்பைக் கண்டதுமே, அவருக்குப் பிடித்துவிட்டது. எப்படியும் அவனைத் திருத்தி விடலாம் என்று நம்பினார்.

வீட்டிற்கு அழைத்துச் சென்ற அவர், ஆங்ஜிப்பை அன்புடன் கவனித்துக் கொண்டார். சில நாட்கள் போனதும், மிகவும் இனிமையாய்ப் பேசி அவனை வழிக்குக் கொண்டு வர முயன்றார். தினமும் சில மணி நேரங்கள் இருவரும் படிக்க அமர்ந்தனர். மிகவும் பொறுமையுடன் பாடங்களைக் கற்பித்தார். பல மாதங்கள் கழிந்த பின்பும், சிறுவன் எதையுமே சரியாய்க் கற்று நினைவில் கொள்ளவில்லை.

இறுதியில் அவர் தன் சகோதரன் ஆங்ஜிப்பைப் பற்றிக் கூறிய கருத்துக்களை உண்மை என்று உணர்ந்தார்.

"அடேய்... ஏன் இப்படிப் படிக்காமல் ஊர் சுற்ற எண்ணுகிறாய்?" என்று சிறுவனிடம் கோபத்துடன் கேட்டார்.

"எனக்கு சிறுவயதிலிருந்தே படிக்கப் பிடிக்கவில்லை. படிக்க உட்கார்ந்தால் தலைவலி வரும். இல்லையென்றால் தூக்கம் வரும். என்ன செய்வது?" என்றான்.

"அப்படியென்றால் கதை கேட்க மட்டும் பிடிக்குமா?" என்று கேட்டார்.

"ஆமாம்... ஆமாம்... எனக்குக் கதை கேட்க மட்டும் ரொம்பவும் பிடிக்கும்," என்றான்.

"எனக்கு இருக்கும் பல வேலைகளில் உனக்குக் கதை எப்படிச் சொல்வது? உன்னை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லையே?" என்று மிகவும் வருத்தப்பட்டார்.

அவனை அவனது தந்தையிடமும் அனுப்ப இயலாது யோசிக்கத் துவங்கினார்.

ஆங்ஜிப் படிக்க கற்கவில்லையென்றாலும், மற்ற விடயங்களில் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டான். பணிவுடன் இருப்பான். அன்பாய் நடந்து கொள்வான். எப்போதும் தூய ஆடையை அணிந்து கொள்வான். பண்பாய் நடந்து கொள்வான். அதனால் அவருக்கு எத்தனை வருத்தம் இருந்தபோதும் ஆங்ஜிப் மீது கூடுதலான பாசமும் இருக்கவே செய்தது.

சில வருடங்களில் ஆங்ஜிப் நல்ல பலசாலியான அழகான இளைஞனாய் வளர்ந்து நின்றான். அவனுக்கு மணம் முடிக்கும் வயதும் ஆனது. அதனால் நல்ல குடும்பத்தில் பிறந்த

மிகுந்த அழகான அறிவான பெண்ணைத் தேடி அவனுக்கு மணம் முடிக்க வேண்டும் என்று அவர் பெரிதும் விரும்பினார்.

உற்றார் உறவினர்களிடமும் நண்பர்களிடமும் விசாரித்த போது, காங் குடும்பத்தில் ஒரு நல்ல அழகான பெண் மண வயதில் இருப்பது அவருக்குத் தெரிய வந்தது.

ஆங்ஜிப்பைக் காங் குடும்பத்தினருக்கு அறிமுகப்படுத்த எண்ணினார். அதற்காக விருந்து ஒன்றையும் ஏற்பாடு செய்தார். காங் அவர்களை வருமாறு அழைப்பு விடுத்தார்.

விருந்திற்கு வந்த காங்கிடம், ''காங் அவர்களே உங்களுக்குத் திருமண வயதில் அழகிய மகள் இருப்பதாய்க் கேள்விப்பட்டேன். எனக்குத் தெரிந்த ஒரு நல்ல இளைஞன் அவளுக்குக் கணவனாகும் தகுதியோடு இருக்கிறான்,'' என்றார்.

''அப்படியென்றால் மிகவும் நல்லது, மாப்பிள்ளையைப் பற்றி விவரங்களைக் கூறுங்கள்,'' என்று கேட்டார்.

''அவன் சியோல் நகரில் வசிக்கும் என்னுடைய சகோதரனின் மகன்,'' என்றார்.

''அப்படியா? சியோல் நகரில் இருக்கும் பாக் குடும்பத்தைச் சேர்ந்தவனா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

பாக் குடும்பத்தினர் மிகவும் வசதியான, பாரம்பரியம் மிக்க, மதிப்பு மிக்க குடும்பத்தினர் என்று பெயர் பெற்று இருந்ததால், அவர்களைப் பற்றிப் பலரும் அறிந்திருந்தனர். அத்தனைப் பெருமை மிக்க குடும்பத்தினர் தன்னைப் போன்ற சாதாரண குடும்பத்தின் மகளை எப்படி மருமகளாய் ஏற்க விரும்புகின்றார்கள் என்ற ஐயம் காங் அவர்களுக்கு ஏற்பட்டது. மாப்பிள்ளை குருடோ செவிடோ. இல்லை. உடல்நலம் இல்லாதவனோ என்ற எண்ணம் கூட அவருக்கு ஏற்பட்டது.

காங் அவர்களின் எண்ண ஓட்டத்தை அறிந்த சகோதரர், ஆங்ஜிப்பை அழைத்து அறிமுகப்படுத்தினார்.

ஆங்ஜிப் மனதைக் கவரும் வகையில் உடை அணிந்து கொண்டு, மிகவும் பணியுடன் வந்து நின்றான்.

''ஆங்ஜிப், இவர் தான் காங்,'' என்று அறிமுகம் செய்தார்.

''மகிழ்ச்சி, எப்படி இருக்கிறீர்கள்?'' என்று ஆங்ஜிப் மிகவும் தெளிவான குரலில் உறுதியுடன் கேட்டான். காங் அவர்களுக்கு ஆங்ஜிப்பின் உருவத்தைக் கண்டதுமே மனதுக்குப் பிடித்துப் போனது.

"நீங்கள் ஏன் என் மகளை மணக்க விரும்புகிறீர்கள்? நாங்களும் மதிப்பு மிக்க குடும்பத்தினரானாலும், நீங்கள் இன்னும் பல மடங்கு மதிப்பு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆயிற்றே?" என்று கேட்டார் காங்.

அப்போது சகோதரர், "ஆங்ஜிப்பிற்குப் படிப்பதற்கு விருப்பமிருக்கவில்லை. அதனால் அவனுடைய தந்தை அவனை என்னுடன் அனுப்பிவிட்டார்," என்று சொன்னார்.

இதைக் கேட்டதும், காங் காரணத்தைப் புரிந்து கொண்டு, திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார். ஆங்ஜிப் படிக்கவில்லையென்றாலும், மிகவும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனாய் இருக்கிறான். பெண்ணையும் மருமகனையும் வைத்துக் காப்பாற்றும் அளவிற்குத் தன்னிடம் வசதி இருந்ததால், ஒப்புக் கொண்டார்.

ஆங்ஜிப்பிற்கும் காங்கின் மகளுக்கும் திருமணம் நடந்தது. இருவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாத குறையொன்றைத் தவிர, வேறெந்த குறையும் இருக்கவில்லை.

திருமணமான சில நாட்கள் கழித்து, மனைவி தன் கணவனிடம், "நீங்கள் ஏன் எழுதப் படிக்க கற்காமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"படிப்பதைப் பற்றி மட்டும் என்னிடம் பேசாதே. படிக்க வேண்டும் என்று சொன்னாலே எனக்குத் தலைவலி வந்து விடும்," என்றான்.

மனைவிக்கோ, கணவருக்குக் கல்வி கற்பிக்காமல் தன்னுடைய மண வாழ்க்கை, சிறப்பாய் அமையாது என்று தோன்றியது. அதனால் தினம் அவனுக்கு எதையாவது கற்றுத் தர முயன்ற வண்ணம் இருந்தாள்.

அப்படி இருந்தும், சில மாதங்கள் கழிந்த பின்பும், அவன் எதையும் கற்காமல் இருந்தான். இறுதியில் அவளுக்கு ஒரு யோசனைத் தோன்றியது.

"என்ன செய்கிறீர்கள்?" என்று ஒரு நாள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை" என்றான்.

"அப்படியென்றால் நாம் ஒன்று செய்யலாம்"

"என்ன?"

"நாம் இருவரும் சில கதைகளை ஒருவர் மற்றவருக்குச் சொல்ல வேண்டும்," என்றாள்.

"கதையா... கதையென்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்," என்று ஆவலுடன் கூறினான். அன்று மனைவி பல மணி நேரம் பல கதைகளைச் சொன்னாள். ஆங்ஜிப் அவற்றை மெய் மறந்து கேட்டான்.

"நீ நன்றாய் கதை சொல்கிறாய்," என்று புகழ்ந்தான். ஒவ்வொரு கதை முடிந்த பின்னரும், அந்தக் கதைகளை, திரும்பச் சொல்லச் சொன்னாள். எல்லாக் கதைகளையும், சிறிதும் தயக்கமின்றி, சொல்லுக்குச்சொல் அப்படியே திரும்பிச்சொல்லி, அசத்தினான். அவனுடைய ஞாபகச் சக்தி கண்டு மனைவி அதிசயித்தாள். அடுத்த நாளும், இரவு வரையிலும் பல கதைகளைச் சொன்னாள்.

அவற்றையும் அவன் நினைவில் வைத்துக் கொண்டான்.

சுவாரசியமான கதைகளைக் கேட்டு, கேட்டு, ஆங்ஜிப் மறுநாள் மனைவியிடம், "இந்தக் கதைகள் எங்கிருந்து வந்தன?" என்று கேட்டான்.

"நான் படிக்கும் புத்தகத்திலிருந்து தான்," என்று சிறிதும் தயக்கமின்றிக் கூறினாள் மனைவி.

"புத்தகங்களில் இவ்வளவு நல்ல சுவையான கதைகள் இருக்கும்போது, எனக்கு மட்டும் படிக்க வேண்டுமென்றால் ஏன் தலைவலி வருகிறது?" என்று கேட்டான்.

"படிப்பது என்பது நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு கூடுதலாய்ப் படிக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு சுவையானது. சுவை கூடக் கூட, படிப்பது எளிதாகி விடும்," என்றாள்.

"அப்படியென்றால் நான் படிக்கக் கற்றுக் கொள்கிறேன்," என்று முதன்முதலாய் ஆர்வத்துடன் கூறினான்.

அன்று முதல், மனைவி கதைகளைக் கொண்டே படிக்கும் அடிப்படையைக் கற்பிக்கத் துவங்கினாள்.

ஆங்ஜிப் மிகவும் புத்திசாலியாய் இருந்ததால், மிக விரைவிலேயே படிக்கக் கற்றுக் கொண்டான். படிக்கும் பழக்கம் ஏற்பட்டதுமே பல விடயங்களை அறியும் ஆவல் கூடியது.

மனைவி அவனுக்கு நல்ல வழிகாட்டியாய் இருந்து, நிறைய புத்தகங்களை வாசிக்க வைத்தாள். மிகக் குறைந்த நாட்களிலேயே, இலக்கியங்கள் அனைத்தையும் வாசித்து முடித்தான்.

மனைவி ஒரு நாள், "நீங்கள் வாசிக்கக் கற்றுக் கொண்டு விட்டீர்கள். இன்று முதல் எழுதக் கற்றுத் தருகிறேன்," என்றாள்.

ஆங்ஜிப் உடனே ஒப்புக் கொண்டு, எழுதுவதையும் முழு மூச்சுடன் கற்றான்.

வெகு விரைவிலேயே அவன் பல விடயங்களைக் கற்று, அறிஞர்களுக்கு இணையான அறிவைப் பெற்றான்.

அந்தச் சமயத்தில், அந்நாட்டின் அரசர், சான்றோருக்கான முக்கியமான தேர்வு ஒன்றை நடத்த எண்ணி, அதற்கான அறிவிப்பை வெளியிட்டார். ஆங்ஜிப்பை அந்தத் தேர்வை எழுத அவனது மனைவி ஊக்குவித்தாள்.

''எனக்குத் தேர்வில் விருப்பமில்லை,'' என்றான்.

''இருந்தாலும், நீங்கள் இந்தப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்று, பெயர் வாங்கினால், உங்கள் குடும்பத்தினர் உங்களை மீண்டும் சேர்த்துக் கொள்வார்கள்,'' என்றாள்.

ஆங்ஜிப் சியோல் நகருக்குத் தேர்வு எழுதச் சென்றான். தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டது. ஆங்ஜிப் சிறந்த முறையில் தேர்வு பெற்று, அனைவரின் பாராட்டைப் பெற்றான். இதைக் கண்டு அவனும், அவனது மனைவியும் பெரிதும் மகிழ்ந்தனர்.

தேர்வின் முடிவை அறிந்தவர்கள், ஆங்ஜிப்பின் தந்தையிடம் சென்று தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவிக்கச் சென்றனர்.

''பாராட்டுக்கள், உங்கள் மகனின் வெற்றி மிகவும் சிறப்பானது. அவன் எங்கே கல்வி கற்றான்?'' என்று கேட்டனர்.

''இத்தனை வருடங்களாய் நீங்கள் அவனை வெளியே காட்டவேயில்லையே. இப்படித்தான் அவனை ஊக்குவித்தீர்களோ?'' என்று கேட்டனர்.

தந்தைக்கோ ஒன்றுமே புரியவில்லை. அவருக்கு நண்பர்கள் என்ன பேசுகிறார்கள், கேட்கிறார்கள் என்றும் புரியவில்லை.

சகோதரரும், மனைவியும் சொன்னதன் பேரில், ஆங்ஜிப் தன்னுடைய பெற்றோரைக் காணச் சென்றான்.

தன்னுடைய மனைவி கதைகள் சொல்லி எப்படித் தன்னை எழுதவும் படிக்கவும் தூண்டினாள் என்பதை விளக்கினான். இதைக் கேட்ட தந்தைக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

''அப்படியென்றால் என்னுடைய மருமகளைத் தான் முதலில் நான் பாராட்ட வேண்டும். அவளை உடனே அழைத்து வரச் சொல்லுங்கள்,'' என்றார்.

மருமகளை வரவேற்க, பெரிய விருந்தும், விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

மகனும் குடும்பத்தினருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சாதனைச் செய்திருப்பதைக் கண்டு, அவனைப் பாராட்டிக் கொண்டாடினார்.

ஆங்ஜிப்பின் தனித்திறமையால், அவன் தன் பெற்றோருடன் வாழத் துவங்கிய சில வருடங்களிலேயே, முதன் மந்திரியாய் ஆனான்.

அவன் எவ்வளவு வெற்றியைப் பெற்றாலும், அதற்குக் காரணமாய் இருந்த மனைவிக்கு, அவற்றை அர்ப்பணிக்காமல் இருந்ததில்லை.

திருக்குறள் வழி குறிப்பு

அறிவில்லாத தன் கணவனை, நற்பண்பு கொண்ட பெண், தொடர்ந்து முயற்சி செய்து, சிறந்த அறிஞனாய் மாற்றிய இக்கதை வள்ளுவர் கூறும் வாழ்க்கைத் துணைக்குச் ஒரு சான்றாய் அமைகிறாள்.

மணி அதிகாலை முணு
கூச்சடிக்கிற சத்தம் காதுகளை மிரட்ட
ஒரு கவளம் சோறு
பழைய மீன் குழம்பின் ருசி,
மீதம் சோற்றில் தயிர் ஊற்றி பிசைந்து
சாப்பிட்ட போது
மணி நாலு
தேத்தண்ணீல டீ கூடா குடிச்சிட்டு
ஒரு டம்ளர் தண்ணீர்ல
நோன்பு வச்சாச்சு
மீதம் இருக்கும் பகலில்
எந்த வாசமும் எந்த நெடியும்
எதுவுமே
நம் நாவை எச்சில் நனைய செய்யவில்லை
காரணம்
நோன்பு இது
இறைவன் இதயத்தில் இருக்கும் போது
உனக்காய் ஆன மாதம் இது
வெறும் குடலோடு,தண்ணீர்
அருந்தாத நாவோடு
இரவென்ன பகலென்ன
எல்லாமே நீதானே என் இறைவா!
குர்ஆனை ஓதிட்டு,தொழுதிட்டு
மனதை
நிலைபடுத்த,பொறுமை என்னவென்று அறிய
நிலவான மாதமிது
நிம்மதி கற்றுணர கற்கண்டு மாதமிது
கடல் கூட தோத்திடுமே
கருணை கொண்ட மாதமிது
கண்ணாடி உடஞ்சாலும்
பசியில் நாம் உடையாமல்
நன்மை தேடும் மாதமிது

கவிஞர்
அழகை ஹைருன்நிஷா

WOMEN IN INDIA FROM PAST TO PRESENT – CHANGES AND CHALLENGES

Dr. V. Ananthi
Assistant professor (Head of the department) Dyal Singh evening College Delhi University.

Abstract: Women in India from Past to Present: Changes and Challenges

The status of women in India has undergone significant transformation from ancient times to the present. Historically, women held respected positions in society, participating in education, politics, and cultural activities. However, with the advent of patriarchal structures, their roles became restricted, leading to centuries of oppression, gender discrimination, and social marginalization. The colonial era witnessed some progressive reforms, with social movements advocating for women's rights in education, widow remarriage, and property ownership.

Post-independence, constitutional provisions and legal reforms have significantly improved women's rights, ensuring equality, access to education, and workforce participation. Women have excelled in various fields, from politics and business to science and the arts. However, persistent challenges remain, including gender-based violence, wage disparity, limited political representation, and societal expectatiOns that reinforce traditional gender roles. The emergence of feminist movements, legal interventions, and increasing awareness has strengthened women's agency, yet deep-rooted issues continue to hinder true gender equality.

This paper explores the evolution of women's status in India, examining the socio-cultural, economic, and political changes that have shaped their roles. It also critically analyzes the ongoing challenges and suggests ways to foster an inclusive and equitable society where women can thrive. Women are the backbone of society, excelling in various fields while balancing multiple responsibilities. Today, let's reflect on their contributions across different eras and how they continue to shape the world.

Women in India have been progressing gradually, though not always in sync with the ttimes Yet, every step forward marks a significant achievement in their journey toward empowerment. This progress can be better understood when examined through different historical phases. By categorizing it into four distinct eras—Ancient, Medieval, Modern, and Future—we can gain deeper insights into their challenges and triumphs.

Additionally, by exploring the future, we can understand how women should shape their lives in the years to come. This will help us envision a society where women thrive with equality, dignity, and opportunities

In recent years, the country has seen significant progress in the recognition, empowerment, and participation of women in virtually all fields. Yet, to understand the depth of this change, we must first appreciate the historical context of women's roles in Indian society. Let us explore how women, often underestimated or relegated to secondary roles in the past, have fought hard to create a New India where their contributions are recognized, celebrated, and essential to the country's development.

Women in India Ancient period:

In ancient time women were highly respected and given immense importance this is evident from the way our Nation is called motherland. Even river like Ganga Yamuna and Saraswati bear women's name and female deities like Durga Lakshmi and Saraswati were worshipped. Women were not only considered sacred but were also warriors scholars and rulers. During the Sangam era, female poets stood on par with their male counterparts, showcasing remarkable literary excellence. Historical records indicate that over 30 female poets contributed to Tamil literature during this period. Among them, Avvaiyar holds the foremost position. Other notable female poets include Nallanthuvanar, Venni Kiuyaarthiyaal, Vellivethiya, and Aadhimandhi.

Among these poets, works attributed to Avvaiyar alone exceed 59 compositions. This highlights the significant literary contributions of women even in ancient times. She was respected advisor to Kings like Adhiyamaan and played a roll in shaping Tamil literature and culture her legacy continuous to inspire generations.

Aandal is the only female Alvar saint in Tamil Vaishnavism. Born in Thiruvilliputhur, she dedicated her life to unwavering devotion to Lord Vishnu. She composed the Tiruppavai and Nachiyar Tirumozhi, two significant devotional works expressing her deep love and surrender to the divine. Aandal wished to marry Vishnu himself, considering him her eternal consort. Even today, Tiruppavai is widely recited, especially during the Tamil month of Margazhi. Her legacy continues through the Thiruvilliputhur Aandal Temple, a testament to her devotion and literary brilliance. Another brilliant women

Karaikal Ammaiyar is one of the 63 Nayanmars and among the earliest female Tamil poets. She was a devoted Shaivite saint who celebrated Lord Shiva's cosmic dance with deep reverence.

As a reward for her unwavering devotion, she renounced her physical beauty and took on a skeletal form. She later resided in Thiruvalangadu, where she composed hymns like "Peyarazhagu" and "Arpudha Thirumurai", praising Shiva's divine dance.

Her verses glorify Shiva's dance and pure devotion. Known as "Peyaatthi" (divine spirit woman), she is revered for her ascetic life and intense spiritual surrender.

They are opinion bear valved in society and they enjoyed equal rights in marriage and social life the power education plus AP and social status remain in ancient times for truly for remarkable

Women enjoyed freedom during Sangam period there are minimal restrictions on their social behaviour based on the observation it can be said that co selection took place and party on the basis of self will

A material society prevailed in Japan until the 14th century.

The Historical Context: From Struggle to Progress

India has rich history of powerful women who co-selections, warriors and scholars. most of us remain unaware of the countless brave souls who dedicated their lives to the service of our motherland. Now is the time to honour and remember them and some heroes and heroines who fought with unwavering courage

Yes signing example of this Velu nachiyar the first Queen to fight against British rule as early as the 18th century Rani Velu nachiyar was born in 1730 to king chellamuthu Sethupathi and sakkati muthathal of the Ramanadha Kingdom, she was the only daughter of the only daughter of the royal family

The royal couples had no male heirs . King chellamuthu Sethupathi wished to raise her daughter like a son; due to this reason, she was trained with weapon and also in material art like veleri , silambam horse riding, elephant riding and archery.

The royal couple had engage the teachers to teach her many languages like Tamil Telugu English Urdu French Malayalam Kannada etc Velu nachiyar was well versed in all this arts during herp early days.

Therefore Velu nachiyar (1730-1796) was there queen of Sivaganga and the first Indian women to fight against British colonial rule. After the British and the nawab of our card killed her husband, Muthu vaduka nada Periya, Udaya Devar, she Soutght refugee in Dindigul under Hyder Ali's protection. With is support she formed an army Including a woman regiment led by the queen and successfully recaptured her Kingdom in 1780 she is known for her star strategic warfare and is celebated as a brave and visionary leader in Indian history

Here are a few remarkable women who played a significant role in India's fight for freedom:

Rani Abbakka (Karnataka): A fearless queen of the 16th century, she valiantly fought against the mighty Portuguese and successfully defended her kingdom.

Jhalkari Bai: A brave woman soldier who rose to bBecome a key advisor to Rani Lakshmibai of Jhansi. She played a pivotal role in the First War of Indian Independence in 1857.

Matangini Hazra (Bengal): A courageous freedom fighter who actively participated in the Quit India Movement and laid down her life for the nation.

Parvati Giri (Odisha): Known as the "Mother Teresa of Western Odisha," she played a crucial role in the Indian independence movement and dedicated her life to social service.

Chakali Ilamma (Telangana): A revolutionary leader who fought against the feudal system and inspired many to join the struggle for justice and independence.

Aruna Asaf Ali: A prominent leader of the Indian freedom struggle, she is remembered for hoisting the Indian National Flag during the Quit India Movement in 1942, defying British rule.

These extraordinary women, along with many others, played a crucial role in shaping India's history. Their sacrifices and contributions must never be forgotten.

Rani Durgavati* and *Rani Laxmibai of Jhansi* led wars and defended their kingdoms; *Maitreyee* and *Vishwamitra's wife*, *Gargi*, were philosophical figures whose wisdom is recorded in the Vedas. *Maitreyee's* thoughts on human life and soul, for example, are considered groundbreaking in the realms of philosophy.

Novel and shart stories:

To dismantle male dominance, it is essential to understand women's struggles through novels and short stories. Many female writers have expressed these hardships through their literary works, shedding light on issues such as gender oppression, patriarchal norms, and societal constraints on women. Their writings have played a crucial role in challenging the status quo and advocating for women's rights.

Aphra Behn (1640-1686)

Aphra Behn, one of the first professional female writers in English literature, used her plays and novels to critique the restrictions imposed on women. Through her works like The Rover and Oroonoko, she highlighted issues of forced marriages, sexual exploitation, and the limited autonomy of women. Her bold narratives questioned societal norms and paved the way for future feminist discourse.

Lucy Stone (1818-1893)

Lucy Stone was not only an activist but also a writer who used her speeches and essays to advocate for women's rights and the abolition of slavery. She strongly believed that literature and public discourse could be powerful tools in shaping a society where men and women were equal. She encouraged women to break free from societal expectations and assert their independence.

Other Influential Women Writers

Several other women writers used literature as a medium to challenge patriarchal structures:

Christabel Pankhurst: Through her writings and activism, she fought for women's suffrage and gender equality.

Olive Schreiner: Her novel The Story of an African Farm addressed gender roles and women's independence.

Virginia Woolf: She emphasized the importance of women's financial and intellectual independence in A Room of One's Own.

Through novels and short stories, these women not only documented the injustices faced by women but also inspired generations to fight for their rights. Their literary works remain significant in the ongoing struggle For gender equality.

Women in the medieval period:

Yet, during the medieval period and into the colonial era, women in India faced significant marginalization. The impact of British colonial rule led to the institutionalization of certain patriarchal norms, and Indian society, particularly in rural areas, embraced practices such as child marriage, purdah, and dowry, which restricted women's roles

Religious and political changes: invasions and rules by Arabs, Mughals, and later European colonizers restricted women's freedoms.

Law and social constraints:

And marriage practices of chastity Daniel of female education and legal suppression were prevalent.

Cultural norms:

The concept that demand should be confirmed by the household emerged limiting access to education employment and property rights Despite these restrictions, notable women like Mirabai, Russia Sultana and

Rani Lakshmi Bai defeated social norms and made significant historical contributions. During the medial period when your sperms of social operations were prevalent including the explosion of labours, gender based which wage disperity lack of safety for women and the object defecation of women and then child marriage and to significant social practices that sparked major debate and social changes .

Female infanticide: (பெண் சிசுக்கொலை)

Female infanticide the deliberate killing a female infants was another weds spread social evil during the medial period

*Reference for male children: due to pet riarchal norms, families preferred male heirs for inheritance and social security.

*Dowry system: the financial burden of dowry made daughter scenes like a liberty leading some families to kill female in pens.

*Lack of women's rights: girls wear after considered a burden and the survival was seen as unnecessary in a society that they need them independents.

However, as the struggle for independence gathered momentum, women emerged as formidable figures in the national movement. Sarojini Naidu, Kamini Roy, Kasturba Gandhi, and Bina Das—to name just a few—stood shoulder to shoulder with men to fight for the country's freedom. These women were not mere participants in the struggle; they were central figures, known for their leadership, courage, and sacrifices.

When India gained independence in 1947, the post-independence period saw the establishment of policies that enshrined gender equality as a core principle. Yet, even in this environment of optimism, the systemic discrimination and social challenges facing women continued. However, the 21st century has heralded a new era for women in India, one defined by resilience, progress, and an unstoppable drive for empowerment.

Present Achievements and Challenges*

But women's Day is not just about remembering the past it is also about celebrating the present. Today, women have broken barriers and excelled in every field imaginable. From science to politics business to sports arts to technology there is no domain untouched by women's achievements.

As we have women's Day left recognise both the courage of those who fought for changes and the power of the women shaping a world today. It is a reminder that the journey to work equalities on going and that every woman who rises inspires countless others to follow.

I. Women in Education: Shaping Minds and Futures

The role of women in India's educational sector is one of the cornerstones of the country's future development. Education is the fundamental tool for social change, and women are taking the lead in ensuring that education is accessible to everyone, irrespective of gender.

Savitribai Phule (1831-1897): India's first female teacher and Pioneer in women's education and social reform she along with her husband Jyoti why pole started the first school for girls in 1848.

Historically, access to education for women was severely limited, with women's primary role seen as that of the caregiver and homemaker. However, the picture has drastically changed. Today, India has produced many world-renowned women scholars, scientists, and educators.

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு எழுமையும் ஏமா புடைத்து:

It means the learning that occurred in one birth with surely help in all the seven birth.

The meaning highlights those significance of education and its true such learnings that women have been able to achieve remarkable milestones in modern Times. Sur passing even men in various fields.

Education is the foundation of empowerment and the role of women in teaching research and activism has been pivotal. The literacy rate among Indian women has significantly improved over the years and more girls are now enrolling in higher education than ever before.

Initiative like a Beti Bachao Beti Padhao have helped change society mind sets encouraging education and economic independence for women.

The voice of women in literature and arts have shaped the cultural fabric of India Mahasweta Devi, Amrita Pritam, vaidehi half captured the struggles and aspiration so women through their the contribution of Miss Subbulakshmi in music and Lata Mangeshkar in playback singing remain immortal in India's artistic heritage.

Consider the achievements of Dr. Indira Nath, a renowned immunologist, or Dr. Rukmini Banerjee, a scholar and educationist working to reform primary education in India. Dr. Nath's work in medicine has saved countless lives, while Dr. Banerjee's efforts have redefined how children, especially those in rural India, learn.

Women are also at the helm of institutions of higher learning. Dr. Kiran Bedi, India's first female officer in the Indian Police Service (IPS), not only led with integrity and strength but has also dedicated herself to educating people about rights, self-discipline, and empowerment. Women activist and educators are driving social transformation. The fight for women's rights, education and legal reforms has been led by remarkable women who are shaping inclusive and just society. The rice and female literacy in women's participation in law making is building a more powered Nation.

II. Women in Business and Entrepreneurship

The emergence of women as leaders in the business sector is a testament to India's evolving economic landscape. Women entrepreneurs in India are breaking glass ceilings, leading multinational companies, and founding successful startups across diverse sectors. India's startup ecosystem has seen an encouraging rise in women-led businesses, and today, many women are not just participants but are driving innovation in business and technology.

Women are no longer confined to the domestic sphere. They are entrepreneurs, CEOs, and innovators. Women-led startups are reshaping the Indian economy. They are not only contributing to the GDP but also creating employment opportunities.

Women entrepreneurs are redefining India's economic landscape. Leaders like Falguni Nayar (Nykaa) and Vineeta Singh (Sugar Cosmetics) have built billion-dollar businesses, proving that women are shaping India's entrepreneurial future. Government initiatives like Startup India and Mudra Yojana have encouraged more women to step into business leadership.

Falguni Nayar, the founder of Nykaa, has revolutionized e-commerce in India's beauty sector, turning Nykaa into a billion-dollar business. Richa Kar, the founder of Zivame, has similarly transformed the lingerie market by promoting body positivity and empowering women to embrace their bodies with confidence.

Another notable name is Kiran Mazumdar-Shaw, the founder of Biocon, one of India's largest biopharmaceutical companies. Through her leadership, Biocon has become a global player in the pharmaceutical industry. Kiran Mazumdar-Shaw is a trailblazer, not only in business but also in fostering research that benefits millions globally.

Women like Vani Kola, managing director of Kalaari Capital, have paved the way for women in venture capital and tech startups. These women exemplify the entrepreneurial spirit that is shaping New India.

III. Women in Science, Technology, and Space Exploration

Women have always contributed to scientific advancements in India, but in recent years, they have played increasingly prominent roles in sectors such as space exploration, biotechnology, and information technology.

Dr. Tessy Thomas, often called the "Missile Woman of India," is a shining example. As the director of the Agni program at DRDO (Defence Research and Development Organisation), Dr. Thomas was instrumental in developing India's indigenous Agni-V missile. Her work has not only bolstered India's defense capabilities but has also shattered the gender barriers in science and defense technology.

Similarly, Dr. Kalpana Chawla, the first woman of Indian origin in space, and Dr. Sunita Williams, who completed multiple space missions for NASA, have become symbols of woMen's achievement in aerospace technology. These astronauts, through their hard work and determination, have inspired countless young girls in India to pursue careers in science and engineering.

The Indian Space Research Organization (ISRO), under the leadership of K. Sivan has seen a growing number of women engineers and scientists playing critical roles in missions such as the Mars Orbiter MisSion (Mangalyaan) and the Chandrayaan lunar missions. Dr Ritu kharidaal and M. Vanitha are key figures behind ISRO'S Chandrayaan and Mangalyaan mission.

Women have always contributed to scientific advancements in India but in recent years they have played prominent roles in sectors such as biotechnology, information technology and innovation

They are also making remarkable contributions to medicine and research. Dr. Gagandeep Kang, all leading biologist has played a key role in vaccine development in India. Many women are now heading medical research institutions and contributing to the fight against global health challenges

IV. Women in Sports: Redefining Strength and Excellence

Women in sports have continually challenged stereotypes, broken barriers, and redefined the meaning of strength and excellence. Historically, women faced numerous obstacles, including societal restrictions, lack of opportunities, and unequal recognition. However, over the years, female athletes have proven their capabilities, excelling in various sports and inspiring future generations.

From pioneers like Serena Williams in tennis, Mary Kom in boxing, and PT Usha (known as the Queen of India track and field) in athletics to modern-day stars like Simone Biles in gymnastics and Megan Rapinoe in football, women have showcased incredible talent, resilience, and determination. Their achievements highlight not only physical strength but also mental toughness and perseverance.

Hima Das-"dhying express" Hema became the first Indian women to win gold at the IAAF world U 20 championship (2018).

Despite progress, challenges remain, such as gender pay gaps, media bias, and limited representation in leadership roles. However, movements advocating for gender equality in sports continue to gain momentum, pushing for fair treatment, better funding, and equal opportunities.

Women in sports are not just competing—they are redefining what it means to be strong, capable, and successful. Their journey is a testament to the power of dedication and the changing landscape of athletics, proving that excellence knows no gender.

They have showcased that women can excel at the highest level in sports, much like their male counterparts.

V.Women in politics and leadership:

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம் யாவுல முன் நிற்பவை

It means if the minister process in herent intelligence added with well occurred knowledge whats before him to restrain?.

Women have always had a critical role in politics, but their visibility has steadily increased over the past few decades. As we look toward the leaders of New India, we must recognize that many have risen to the highest offices despite the socio-cultural barriers that still persist.

One of the most iconic figures is Indira Gandhi, the first and only female Prime Minister of India. Her tenure as Prime Minister (1966–1977 and 1980–1984) was marked by significant political reforms, economic strategies, and international diplomacy. Indira Gandhi's leadership during the 1971 war and her role in the creation of Bangladesh stands as one of the most important achievements of modern India's history. She was a symbol of determination, often being called the "Iron Lady" of India for her political acumen and her ability to steer the country through crises.

In more recent years, political leaders such as Sushma Swaraj, Nirmala Sitharaman, and Smriti Irani have made significant strides, not only for women's participation in governance but also in leadership roles that directly affect national policies. Sushma Swaraj, as India's foreign minister, showcased India's diplomatic strength, while Nirmala Sitharaman made history as the first woman to hold the office of Finance Minister, overseeing the country's budget during a critical phase in its economic journey.

At the state level, women like Mamata Banerjee, Mayawati, and J. Jayalalithaa have reshaped regional politics, advancing policies that support social welfare, women's rights, and economic empowerment. Their leadership challenges the stereotypical perceptions of what women can achieve in power and governance.

On a more grassroots level, the PanPanchayati Raj Act of 1993, which mandated a one-third reservation for women in local bodies, has empowered women in rural and semi-urban areas to assume leadership roles in governance. This decentralization of power has allowed women to become key players in decision-making processes at the local level.

i.Women in Education: Shaping Minds and Futures

The role of women in India's educational sector is one of the cornerstones of the country's future development. Education is the fundamental tool for social change, and women are taking the lead in ensuring that education is accessible to everyone, irrespective of gender.

Historically, access to education for women was severely limited, with women's primary role seen as that of the caregiver and homemaker. However, the picture has drastically changed. Today, India has produced many world-renowned women scholars, scientists, and educators.

Consider the achievements of Dr. Indira Nath, a renowned immunologist, or Dr. Rukmini Banerjee, a scholar and educationist working to reform primary education in India. Dr. Nath's work in medicine has saved countless lives, while Dr. Banerjee's efforts have redefined how children, especially those in rural India, learn.

Women are also at the helm of institutions of higher learning. Dr. Kiran Bedi, India's first female officer in the Indian Police Service (IPS), not only led with integrity and strength but has also dedicated herself to educating people about rights, self-discipline, and empowerment.

Moreover, initiatives like the Beti Bachao, Beti Padhao program and various government schemes have encouraged parents to Educate their daughters and ensure their academic advancement. The results are evident in the growing number of women in STEM fields, with notable figures like Gagandeep Kang, who became the first Indian woman to be elected to the Royal Society for her work in medical research.

ii. Women in Business and Entrepreneurship

The emergence of women as leaders in the business sector is a testament to India's evolving economic landscape. Women entrepreneurs in India are breaking glass ceilings, leading multinational companies, and founding successful start-ups across diverse sectors. India's startup ecosystem has seen an encouraging rise in women-led businesses, and today, many women are not just participants but are driving innovation in business and technology.

Falguni Nayar, the founder of Nykaa, has revolutionized e-commerce in India's beauty sector, turning Nykaa into a billion-dollar business. Richa Kar, the founder of Zivame, has similarly transformed the lingerie market by promoting body positivity and empowering women to embrace their bodies with confidence.

Another notable name is Kiran Mazumdarar-Shaw, the founder of Biocon, one of India's largest biopharmaceutical companies. Through her leadership, Biocon has become a global player in the pharmaceutical industry. Kiran Mazumdar-Shaw is a trailblazer, not only in business but also in fostering research that benefits millions globally.

Women like Vani Kola, managing director of Kalaari Capital, have paved the way for women in venture capital and tech startups. These women exemplify the entrepreneurial spirit that is shaping New India.

Women have played a crucial role in shaping societies and driving social change throughout history. Their contributions span across various fields, including education, politics, activism, and community development. By challenging traditional norms and advocating for justice, equality, and human rights, women have become powerful agents of transformation.

From historical figures like Rosa Parks, who ignited the Civil Rights Movement, to Malala Yousafzai, who continues to fight for girls' education, women have consistently pushed boundaries. Feminist leaders and grassroots activists have worked tirelessly to dismantle oppressive systems and empower marginalized communities.

Medha Patkar, an environmental and social activist, is known for her work in the Narmada Bachao Andolan movement, while Aruna Roy, a prominent social activist, fought for the enactment of the Right to Information Act (RTI), empowering ordinary citizens to access government data.

Women have been the driving force behind movements such as #MeToo in India, which has raised awareness about sexual harassment and has led to greater accountability in various sectors, including entertainment, politics, and academia.

iii.Challenges and Roadblocks

Despite the remarkable progress, there remain challenges that must be overcome. Women in India still face societal discrimination, gender-based violence, economic inequality, and limited access to resources. Patriarchal norms often restrict women's freedom of movement, decision-making, and participation in various sectors.

While the legal framework has improved, there are still gaps in the effective implementation of laws meant to protect women. Furthermore, the wage gap between men and women persists, and women are often underrepresented in leadership roles across many sectors.

While these challenges persist, progress is being made through education, activism, legal reforms, and global awareness campaigns. Women's empowerment initiatives, gender-sensitive policies, and support from allies play a crucial role in breaking down these barriers.

By addressing these roadblocks, societies can create a more inclusive and equitable world where women can achieve their full potential.

Women in the future:

Future holds immense potential and transformative changes for Indian women.

Equal opportunities,general equality and opportunities for women to achieve the dreams will be realised.

Technology advancement : women will lead in artificial intelligence and global innovation

Boundless identities : women will established their identities and lead in influential roles.

Challenges: adapting to modern challenges acquire skill to face contemporary issues

Technology adaptation: developing proficiency in emerging technologies.

Driving social change: overcoming social resistance to progressive changes

The need for change for the challenges ahead: traditions and social norms outdated cultural norms against women must be reformed

Future protection and dream World for women and girls

Self protection:

In the future we envision of world were women and girls are well protected and empowered their safety should be ensured through

1. Strict laws: that should be severe legal consequences for any injustice or violence against women

2. Building self confidence: women should develop self defence skills technology and legal awareness.

3. Enhanced public safety: increase security in streets public transport schools colleges and work places

4. Technological support: emergency alert app Smart watch alarms and other safety gadgets can be beneficial

5. Social change: society should create an environment where women can live fearlessly

The World women want to see in future

- A world with true gender equality
- Equal opportunities in education career and society
- A safe and happy life without fear
- Women fullfilling their dreams without any obstacles
- Society with children grow up safely and joyfully

This vision is achievable with the collective effort of individuals community in government ensuring a future where all women and girls can thrive in safety and equality.

Ensuring women safety night and day shifts.

Women today are marking remarkable progress in various fields including science and technology. many women from rural areas are also stepping into these domains demonstrating their skills and expertise. however one of the major concerns remains their safety especially when working night shifts

Approaches for womens advancement and safety

1.Strong workplace policies

Organisations must implement strict anti harassment policies

Emergency helpline number should be easily accessible

Surveillance cameras should be installed in workplaces and transit areas

2.Safe transportation facilities

Companies should arrange secure transport for women working late hours

Vehicles must have GPS tracking and emergency alert systems

Female security personal should be present in transport services

3.Awareness and self defence training

Women should be trained in self-defense techniques

Awareness programs about workplace rights and legal protection should be conducted

4 flexible workers and hybrid work models

employers should provide flexible work hours, allowing women to choose suitable shifts

Hybrid work models can help reduce late night travel risks

5 Government and community support

Government should enforce strict laws when sure women safety at work

Community driven initiatives can help create safe and environment for working women

Ensuring women safety in both day and night shifts is crucial for the empowerment. A collective effort from society, employers and the government can create a secure and supportive environment where women can work without fear.

It is needless to say how the situation of women is in today's Era

We see how many news reports emerge in the media each day raises questions whether we are able to function smoothly in education, employment, home, child care etc

All the women are progressing in all fields and getting all privileges but the condition of women in the bottom of the society is deplorable and you can see there is no change in the corruptions like dowry etc

Confusion:

In a world that is rapidly advanced in it is essential to ensure that women or not lived behind., even in the 21st century many women or they need basic freedoms weather it is the right to education, the right to work, are the right to make decisions about their own lives, gender discrimination persists.

Equality is not just about treating everyone the same but ensuring that everyone has equal opportunities. Women should have the freedom to dream, aspire and achieve just like men. This is not just about justice; it is

about progress. Societies that empower women or proven to thrive economically, culturally, socially.

Empowerment is the key to breaking the chains of oppression. When women are educated, they become leaders. When they are financially independent, they uplift entire families. When they are given your voice, they inspire change.

But empowerment cannot be given; must be climbed. We must create an environment were every woman feels confident to assert her rights. This weekends with education, awareness and a change in mind set.

Let's break stereotypes, let's challenge prejudices. Let's build a world where women walk with dignity, respect, and power.

All the women how to that-no your worth, demand you are rights, and never settle for less than you deserve. And to everyone else-part of this change

Let's try for your world where rights or equal, 4 month is anniversary and every women is truly free.

As we look to the future, let us remember that empowering women is not just about ensuring their rights; it is about ensuring the prosperity and strength of India itself. The women of today are the architects of tomorrow's New India. Let us work together to build a society where every woman can thrive, contribute, and lead with the same freedom and dignity as any man.

எத்தனை ஒளி ஆண்டுகள்
கடந்து வந்த பாதை
புள்ளியாய்...
மறையவில்லை!

பெருவெளியெங்கும்...
எதையோ தேடுகிறது
சிறகுகளற்ற ஒரு பறவை!

நீண்ட நாள் கழித்து
தோட்டத்தில்
பூத்திருக்கும்...
மயில் மாணிக்க
பூவிற்கு ...
உந்தன் சாயல்!

தீட்டாத சொற்களில்
வந்து விழும்
மழலை மொழியாய்
ஒத்திருக்கும்
மனது!

உப்புக் காற்று
சொல்லப் படாத
ஆழிப் பேரலைக்குள்
தான்...
மௌனத்திருக்கிறது!

விடையறியாத
கேள்விக்குள்...
புதிரென தொடர்கிறது
இப்பிரியம்!

நெல்லை க.சோமசுந்தரி.
சென்னை -122.

தன்னை அறிந்து தலைசிறந்து வாழ்க!

முனைவர் ஜெயந்தி,
சென்னை

எல்லாவற்றையும் புறத்தே பார்த்து வியக்கும் மனிதனை தன்னையே திரும்பிப் பார்க்க வைக்கும் உயர்நிலை அறிவுதான் தன்னிலை விளக்கமாகும். மனம் எப்பொழுதும் புறஉலக ஆராய்ச்சியிலேயே இயங்கிக் கொண்டு இருப்பதால்தான் அமைதி இழக்கிறது.

ஒவ்வொருவரும் நான் யார்? என்று தன்னைத்தானே வினவி அறிந்துக் கொள்ளும்போது மனதிற்கு நுட்பமும் அமைதியும் கிடைக்கிறது.

'தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்.' திருமந்திரம். 2355

என்பார் திருமூலர்.

நான் யார்?

நான் யார்? என்னும் வினா ஒருவரின் அறியாமையை நீக்கும் மிகச் சிறந்த வினாவாகும்.

"ஒருவன் தான் யார்? என்றும், தான் எங்கிருந்து வந்தோம்? அடுத்து எங்கே போகிறோம்? என்றும் தெரியாத நிலையில் அவன் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? இந்த அடிப்படையான அறியாமையால் அவனுக்கு ஆயிரக்கணக்கான துன்பங்கள் ஏற்படுகின்றன" என்கிறார் சிந்தனையாளர் ஓஷோ.

'நான் யார்? என்ற வினா மிகவும் ஆழ்ந்த கருத்துடையது. தன்னை அறியத் தகுதியுள்ள அளவுக்கு உயரும்போது இந்த வினா எழும்.'

'உடலாக, அறிவாக, உயிராகத் தன்னிலே தலைவனாக உள்ள மெய்ப்பொருளை உணர்வதே" தன்னிலை விளக்கமாகும்.

'தனி மனித அமைதிக்கு தன்னிலை விளக்கம்
சமுதாய அமைதிக்கு அறநெறி வாழ்வு
உலக அமைதிக்கு ஓருலக ஆட்சி முறை'

என்பதால் உலக அமைதிக்கு அடிப்படையாவது தன்னிலை விளக்கமாகும் என்பார் வேதாத்திரி மகரிசி.

தன்னை அறியும் அறிவு:

திருவண்ணாமலை இரமண முனிவர், தன் சீடர்களிடம் 'நான் யார்?' என்று தன்னையே வினவி, அறிந்துவரக் கூறினார்.

தன்னில் ஆழ்ந்து விளக்கம் பெற்றவர்கள் மற்றவர்க்கும் வழிகாட்டியாகத் திகழ்கின்றனர்.

'தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே' (திருமந்திரம் 2611)

என்பார் திருமூலர்.

துன்பத்துக்கு காரணம் ஏமாற்றம். ஏமாற்றத்திற்குக் காரணம் எதிர்பார்ப்பு. எதிர்பார்ப்பிற்கு காரணம் ஆசை. ஆசைக்கு காரணம் ஒப்பீடு. ஒப்பீட்டுக்கு காரணம் எண்ணம். எண்ணத்திற்கு காரணம் மனம் என்று பகுத்துப் பார்ப்பர்.

மனம் இயங்கும் படி நிலைகள் பத்து:

1. உணர்ச்சி, 2. தேவை, 3. முயற்சி, 4. செயல், 5. விளைவு 6. அனுபோகம், 7. அனுபவம் 8. ஆராய்ச்சி, 9. தெளிவு, 10. முடிவு

முதல் ஏழு நிலைகள் அனைத்து உயிரினங்களுக்கும் உரியது. ஆராய்ச்சியும், தெளிவும், ஆறாவது அறிவு பெற்ற மனிதனுக்கு உரியவை. தன்னை அறியும் ஆராய்ச்சி அறிவால், விளக்கம் பெற்றவர்கள் நிறைவோடு வாழ்வர்.

ஆன்மிக அறிவே அமைதி நல்கும்:

மனம் எல்லை கட்டிய நிலையில், தான், குடும்பம், சுற்றம் என்று எண்ணி, எண்ணி இன்பம், துன்பம், கீழ், மேல், சிறிது, பெரிது, லாபம், நட்டம்; என எல்லாவற்றிலும் சிக்கி திகைப்படையும். தனக்குள் விளங்கும் மெய்ப்பொருளை உணர்ந்தால் நிறைவும் அமைதியும் பெறும்.

'வரைகடந்த மெய்ப்பொருளாம் அகத்துணர்ந்தால்

அல்லலற்று அறிவு விழித்தும் விரிந்தும்

அறிவறிந்த மனநிலையில் அமைதி காணும்'

என்பார் வேதாத்திரி மகரிசி.

தானே தனக்குத் தலைவனுமாமே:

தன்னிலை விளக்கம் உயர்வை அறிக்கும். காரணமில்லாமல் எந்தக் காரியமும் இல்லை என்பதை உணர்த்தும்

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்,
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினை பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே' திருமந்திரம் 2028

என்பார் திருமூலர்.

'நன்னிலைக் கண்தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும் நிலையினும்
மேம்மே லுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.' நாலடியார் 248

என்கிறது நாலடியார்.

எனவேதான், 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்றார்
கணியன் பூங்குன்றனார்.

உயர்ந்த உள்ளம் பெற வைக்கும் தன்னிலை அறிவு

'வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.' திரு. 595

என்பார் திருவள்ளுவர்.

அகத்தவத்தால் தன்னுள் அறிவாக விளங்கும் இறையை உணரலாம்.

'தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்ஐயும் சார்தற்கு அரியவே' திருமந்திரம் 2349

என்பார் திருமூலர்.

ஐ - தலைவன், அரசன், கடவுளைக் குறிக்கும்.
'தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே
தந்திரம் ஒன்று சொல்ல வேண்டும் வெண்ணிலாவே'

என்றார் இராமலிங்க வள்ளலார்.

‘கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்;
தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள்;
உங்களுக்குத் திறக்கப்படும். (ம. 77)

என்று கூறினார் ஏசுநாதர்.

‘தன்னை அறிந்து அருளே தாரகமாய் நிற்பதுவே;
உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே.

என்றார் தாயுமானவர்.

அறிவே ‘நான்’ தெய்வம்:

‘நான் யார்?’ என்ற கேள்விக்கு விடை கண்ட முன்னோர்கள், அறிவுதான் அது. அதுவே தெய்வம் என்றார்கள். ஆராய்ந்து கண்ட உண்மையை உலகுக்கு அளித்தனர்.

எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே’ (திருமந்திரம். 2596)

என்றுரைத்தார் திருமூலர்.

‘நான் எனது என்பது அஞ்ஞானம். ஆராய்ந்து அறிய முற்பட்டால், எதை ‘நான்’ ‘நான்’ என்று சொல்கிறாயோ அது. ஆன்மா தவிர வேறொன்றுமில்லை என்பதைக் காண்பாய்.’

‘‘நான் என்பதைச் சற்று தேடிப்பார். நானை தேடிப் போனால் கடைசியில் இறைவனே வெளிவருகிறார். நான் கருவி, அவர் இயக்குபவர். இறைவன் தான் கர்த்தா, நீ செய்பவன் அல்ல என்பதை அறிந்து கொண்டு, செயலுக்குப் பொறுப்பானவன் போல் வேலைகளில் ஈடுபடு’ என்பார் இராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

தூய அறிவு வடிவான இறைநிலையை வணங்குவதே கற்றலின் பயன் என்றார் திருவள்ளுவர்.

கற்ற தனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்? (திரு. 2)

‘தெய்வம் நீ என்றுணர்!’ என்றார் பாரதியார்

‘தேடித்தே டொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்’
என்றார் திருநாவுக்கரசர்

‘அறிவேதான் தெய்வம்’ என்றார் தாயுமானார்
‘அஞ்சுவதேன் துணிந்துரைப்போம் அறிவே நான் தெய்வம்’

என்று அதற்கு விளக்கம் அளித்து, அறிவுத்திருக்கோயில் உருவாக்கி உலக அமைதிக்கு வழிகாட்டினார், வேதாத்திரி மகரிசி.

தன்னிலை விளக்கம் (*Self realisation*)

இறைநிலையே தன் மாற்றத்தில் அமைந்த பெரும் சிறப்பு ‘தான்’ என்பதாகும்.

மெய்ப் பொருளே ஐம்பூதங்களாகி, ஓர் அறிவு முதல் ஆறு அறிவு வரை அனைத்து உயிர்களாகவும் உள்ளதை உணர்வதே மெய்யறிவு.

“உபநிடதங்கள் ‘தானே அது’ என்னும் ஒருமைக் கொள்கையை (அத்வைதம்) அறிவுறுத்துகின்றன.

அனைத்திலும் இறைவனைக் காண்பதே வேதாந்தத்தின் சாரம். நாமே கடவுள் என்ற உண்மையை உணரும் போது மகிழ்ச்சியும் நிறைவும் அடைகிறோம்.”

என்பார் சுவாமி விவேகானந்தர்.

ருக்வேதம் – ‘ப்ரக் ஞாநமே பிரம்மம்’‘உணர்வே தெய்வம்’‘யஜுர் வேதம் - அஹம் ப்ரம்மாஸ்மியே பிரம்மம் ‘அகமே தெய்வம்’

‘ ஸாம வேதம்’ - ‘தத்வமஸி’ ‘நீயே அது’
‘அதர்வண வேதம்’ – ‘அயமாத்மாவே பிரம்மம் ’ ‘உயிரே தெய்வம்’

அறிவையே பிரம்மமாக குறிப்பிடுதல் காணலாம்.

சிறிதும் ஐயமின்றி தன்னுள், இறையை உணர்ந்தவரை தெய்வமாகவே கருத வேண்டும்.

‘ஐயப்படாது அது அகத்து உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்ப கொளல் திரு. 702

என்பார் திருவள்ளுவர்.

அவனே தானே ஆகியது:

தேடியவனே தேடப்பட்டவன் ஆயினான். இறைநிலையே நானாக உள்ளது என்பதை உணர்ந்து வாழ்வோருக்குத் துன்பமில்லை.

'அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலம் மாயை தன்னெறி வல்வினை இன்றே'

என்கிறது சிவஞான போதம்

தானே அதுவான தத்துவத்தை

அறிதலே மனிதனின் சிறப்பு.

"நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்றும்
அன்றென்று மாமென்று மாகாதே - நின்றநிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்" நல்வழி - 39

என்பார் ஔவையார்.

நீயே நான்! இருப்பது ஒன்றே!

தனக்குள் விளங்கும் இறையை உணர்ந்தவருக்கு தெவிட்டாத இன்பம்.

'நானேநீ! நீயே நானாம்! இரண்டும் ஒன்றானால்
தேனின் ருசியதுபோல் தெவிட்டாய் நீ பூரணமே'
என்கிறார் பட்டினத்தார்
'சீரண்டம் அகிலாண்ட பிரமாண்டங்கள்
செனித்தவகை உயிர்தோறும் நீயாய் நிற்பாய்!'

என்பார் சித்தர் காகபுசுண்டர்

'நான் என்பதை துருவித் தேடினால் நீ வந்து விடுகிறது. அதாவது நமக்குள் இறைவனின் சக்தியைத் தவிர வேறு எதுவும் இல்லை. நான் இல்லை அவர் மட்டுமே'

'இருப்பது ஒன்றுதான். பெயரில்தான் வேறுபாடு. யார் பிரம்மமோ அவரேஆன்மா. அவரே பகவான். ஞானியின் பிரம்மம், யோகியின் பரமாத்மா, பக்தனின் பகவான் எல்லாம் ஒருவரே.'

'நான் முக்தன் என்று நினைப்பவன் முக்தனாகிறான். நான் கட்டுண்டவன் என்று நினைப்பவன் கட்டுண்டவனாகிறான்."

என எடுத்துரைக்கிறார் இராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

அறிவை அறிந்த தெளிவு:

உள்ளதை உள்ளபடி உணர்த்தும் அறிவின் தெளிவே உண்மை விளக்கம்.

'வேதாந்தத்தின் குறிக்கோளை ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், மனிதனை உள்ளது உள்ளபடி அறிவது என்பதே.'

'சுதந்திரர்களாக இருங்கள். யாரிடமிருந்தும் எதையும் எதிர் பார்க்காதீர்கள். உங்கள் கடந்தகால வாழ்க்கையைச் சற்று திரும்பிப் பார்ப்பீர்களானால், கிடைக்காத உதவியைப் பிறரிடம் எதிர்பார்த்து, ஏமாந்தது உங்கள் நினைவிற்கு வரும். வந்த உதவிகள் எல்லாம் உங்களுக்குள் இருந்து வந்ததே. செய்தசெயலின் பலனையே நீங்கள் பெறுகிறீர்கள். ஆனாலும் மற்றவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்க்கிறீர்கள். என்ன விநோதம்! நமது வாழ்க்கையும் வாழ்நாளெல்லாம் எதிர்பார்த்து எதிர்பார்த்து முடிவில்லாத எதிர்பார்த்தலிலேயே கழிந்து விடுகிறது.''

''எதிர்பார்ப்பதை விட்டுவிடு என்கிறது வேதாந்தம். நீ ஏன் எதிர்பார்க்கிறாய்? உனக்கு எல்லாம் இருக்கிறது. இல்லையில்லை, நீயே எல்லாமாய் இருக்கிறாய்.''

'வெளிப்பட்டு நிற்கும் கடவுளாகிய உங்கள் சகோதர மனிதனை வழிபடவில்லை என்றால் வெளிப்பட்டுத் தோன்றாத கடவுளை எப்படி வழிபட முடியும்?'

என்பார் வீரத்துறவி சுவாமி விவேகானந்தர்.

இறை உணர்வு:

இயற்கையோடு விரிந்து, ஆழ்ந்து ஒன்றும் போது பெறுவது, இறை உணர்வு, அதன் மூலம் அடைவது,

1. விளக்கம்

அறிவைப் பற்றிய விளக்கம். இறைநிலையே அறிவாக உள்ளதை உணர்தல்.

2. விழிப்புநிலை

வினைப்பதிவுகள் உண்டாகாமல் எண்ணம், சொல், செயலில் விழிப்புடன் இருத்தல்

3. அன்பு

அறிந்தது சிவம், மலர்ந்தது அன்பு. எல்லா உயிர்களிடத்தும் இறையே அறிவாக இயங்கும் உண்மை அறிவதால் மனம் விரிந்த நிலை.

4. கருணை

அனைத்து உயிர்களிடத்தும் இரக்க சிந்தனையுடன் இருத்தல் இயல்பாகிறது.

5. ***மகிழ்ச்சி***

உண்மையை உணர்வதால் கிடைக்கும் இன்பநிலை.

6. அமைதி

புலன்வழி செயல்பாட்டால், உணர்ச்சிவசப்பட்ட நிலை மாறி மனம் அமைதி பெறும்.

7. நிறைவு

முழுமையை நோக்கிய பயணத்தில் மெய்ப்பொருளை உணர்வதால் பெறுவது.

'தன்னிலை விளக்கம் பெற்று, இறை உணர்ந்து வாழ்பவருக்கே, அனைத்துயிரும் இறையே என்ற அடிப்படையில் கடமையாற்றும் அன்பும் கருணையும் உண்டாகும். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற இயற்கை நீதி விளங்கும் அறநெறியில் வாழும் பண்பு ஓங்கும். வாழ்வின் நோக்கம், வாழும்முறை விளங்கும். பிறர் துன்பம் போக்கும் தூய மனம் வளரும்' என்பார் வேதாத்திரி மகிரிசி.

முன்னோர் ஆராய்ந்து கண்டநெறியின் சிறப்புணர்ந்து, தன்னை அறிந்து தலைசிறந்து வாழ்க!

ஒரு துளி!

கோடரிகள்
மரங்களின்
மார்புகளைப்
பிளக்கையில்
மலைகள்
அலறித் துடிக்கும்
ஒலியின்
ஒரு துளி!

இரசாயன
உரங்கள்,
பூச்சிக்கொல்லிகள்
மண்ணைப்
புண்ணாக்கிட ...
நொந்து
வெதும்பும்
விவசாயியின்
விழி நீரின்
ஒரு துளி!.
காற்றை
மாசுபடுத்தி...
உணவுப் பண்டங்களில்
கலப்படம் செய்து...
தலைமுறைக்குத்
தீங்கிழைக்கும்
அவலத்தின்
ஒரு துளி!
துளித்துளியாய்ச்
சேர்த்த
துயரங்களின்
ஊடே...
இன்னமும்
துளிர்த்தபடியே
மனிதத்தின்
மீதான
நம்பிக்கையின்
ஒரு துளி...

– *வித்யா மனோகர்*

மனோகரியின் துணிபு

சசிகலா விஸ்வநாதன்

மனோகரி திட்டமாகச் சொன்னாள்." ஸ்ரீ காந்த்! இதை நீ திறந்த மனத்துடன் பார். அப்போதுதான் நான் சொல்வது உனக்கும் புரியும். நீதான் உன் பேரன்ட்ஸ்ஸை பார்த்துக்கணும்" என்கிறாய். சரியாகத்தான் நினைக்கிறாய். உன் அக்கா நாராயணியும் அமெரிக்காவில் புலம் பெயர்ந்துள்ளதால், முழுப் பொருப்பும் உன்னிடம் தான் உள்ளது. நான் இதை முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். உன் கடமையை ஆற்ற, உன்னோடு என் மனமும் கைகளும் எப்போதும் துணை நிற்கும்."

"என் பேரன்ட்ஸை யார் கவனிப்பார்கள்? அது என் பொறுப்பு தானே! நம் திருமண சமயத்தில் என் வீட்டில் நாங்கள் கூட்டுக் குடும்பமாக இருந்தோம். அடுத்தடுத்து என் சிற்றப்பா பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் திருமணமாகி அவர்கள் தன் பெற்றோரை தங்களுடன் அழைத்துக் கொண்டு போக, இப்போது தாய்க் கூட்டில் என் பெற்றோர் மட்டும். என் குடும்பத்திற்கு என் கடமைகளை சரிவர நான் செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது. என் பெற்றோருக்கு நான் ஒரே மகள். மகன் ஆற்றும் கடமைகளை நான் ஆற்ற வேண்டும். அவர்களை பார்த்துக்கொள்ள வேண்டுமல்லவா? நீ என் கூட நிற்பாய் , அல்லவா?"

ஸ்ரீ காந்த்துக்கு ஒன்றும் புரியவில்லை." நீ என்ன சொல்கிறாய் , மனோ! வாட் ஆர் யு அப்டு? வாட் டு யு வான்ட் மீ டு டூ"

மனோகரி இந்த எதிர்வினையை எதிர்பார்க்கவில்லை.'சுர்' என்று பொங்கி வந்த கோபத்தை இரண்டு நிமிட மௌனத்தில் கரைத்து அடக்கினாள்." நீ ஒன்றும் செய்ய வேண்டாம். நான்தான் செய்வதாக இருக்கிறேன். அதற்கு நீ ஒத்துழைத்தால் போதும்."என்ற பதில் வந்ததும் சற்று அமைதியானான் , ஸ்ரீ காந்த்.

வார இறுதியில் வழக்கம் போல் மனோகரியும், ஸ்ரீ காந்தும் குழந்தை ஸ்ரீ கரியுடன் புரசை வாக்கம் சென்றனர்.திங்கள் கிழமை காலையில் அங்கிருந்தே அலுவலகம் சென்று திங்கள் கிழமை மாலைதான் கெல்லீஸ் வருவர். இந்த வாரம் மனோகரி தன் அப்பாவை மருத்துவரிடம் கூட்டிப் போக வேண்டியிருப்பதால் புரசைவாக்கத்தில் தங்குவதாக தொலைபேசினாள். அவன் அம்மா சிவசங்கரிக்கும் தகவல் சொல்லிவிட்டாள். இப்படியே அந்த வாரம் கழிய; வார இறுதியில் ஸ்ரீ காந்த் புரசைவாக்கம் சென்றான். மனோகரியையும், ஸ்ரீ கரியையும் ஒரு வாரம்

பிரிந்து இருந்ததில் மிகவும் தடுமாறித்தான் போய் விட்டான். இந்த வாரம் ஞாயிறு அன்றே கிளம்பி கெல்லீஸ் வந்தனர்

இந்த வாரம் மனோகரி தன் பெற்றோரை தான் கவனிக்க வேண்டிய நிலையில் இருப்பதால்,தான் இனிமேல் புரசைவாக்கத்தில் பெற்றோருடன் தங்குவதாக திட்டமிட்டு இருப்பதாகச் சொல்லவும், ஸ்ரீ காந்த் திடுக்கிட்டு விட்டான். " என்ன முடிவு; இது! அபத்தம்! நான் இங்கு தனியாக எப்படி இருப்பது? ஸ்ரீ கரி எங்கே இருப்பாள்?நான் அங்கே வந்து தங்கினால் என் பெற்றோரை எப்படி கவனிப்பது. அங்கு வந்து தங்குவது என்னால் ஆகாது. உன் மனம் போல் நீ செய்." என்று சற்று உரத்த குரலில் சொல்லி விட்டான். மனோகரி அதற்கு பதில் சொல்வதற்குள் அறைக் கதவை எவரோ தட்டும் ஓசை கேட்டது கதவைத் திறந்தவுடன் உள்ளே வந்தார்கள், சிவசங்கரியும், கனக சபேசனும்

" என்னடா! அவளிடம் குரல் உயர்த்திப் பேசுகிற பழக்கம்? என்ன பிரச்சினை? மனம் விட்டு பேசுவோம், வாங்கள் வெளியே." என்று அழைத்தார்.

ஸ்ரீ காந்த் கலங்கிய கண்ணுடனும், கலவர மனத்துடனும், வெளியே வந்தான். மனோகரியும் அவனைப் பின் தொடர்ந்து வந்தாள்.

ஸ்ரீ கரி இந்த களேபரத்தில் உணவருந்தாமல் உறங்கி விட்டது; பாட்டி சிவசங்கரிக்கு வருத்தமாக இருந்தது. பெரியவர்கள் பிரச்சினை,சிறு குழந்தைக்கு பாதிப்பை உண்டாக்குவது, அவள் மனம் விரும்பவில்லை.

ஸ்ரீகாந்த் மௌனமாக இருக்க, மனோகரியே பேச ஆரம்பித்தாள். " மாமா! என் பெற்றோருக்கு வயதாகிவிட்டது. உங்களை விடவும் அவர்கள் வயதில் பெரியவர்கள்.இவன் எப்படி உங்களைப் பார்த்துக் கொள்ள நினைக்கிறானோ; அதேபோல் நானும் அவர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டாமா? என் சிற்றப்பாக்களை, திருமணமான அவர்கள் குழந்தைகள் கூட்டிச் சென்று விட்டார்கள், என்பது; நான் என்ன செய்ய வேண்டும், என்பதை எனக்குச் சொல்கிறது. அவர்கள் நம்முடன் இங்கு வந்து இருக்க விரும்பவில்லை. நாம் எல்லோரும் புரசைவாக்கத்தில் போய் இருக்க முடியுமா; என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்" என்றதும் சிவசங்கரி இடை மறித்து,"அது சரிவராது. உன் வீட்டு பழக்க வழக்கங்கள், எங்களுக்கு சரிவராது. உனக்கே இது தெரியும், மனோ! வீணான முயற்சி !சம்பந்திகள் வரப் போக இருக்கலாம். ஒரே குடித்தனமாய் இருப்பது இடைஞ்சலிலும், மன உளைச்சலிலும் தான் இது கொண்டு விடும். வேறு வழி யோசிப்போம்நீ என்னடா சொல்கிறாய்!"என்று மகனைக் கேட்க, அவன் தன் மௌனத்தையே பதிலாக அளித்தான்"அவன் ஒன்றும் சொல்ல மாட்டான். கல்லுளி மங்கனாக இருந்து என் உயிரை எடுப்பான். அல்லது கோபத்தில் கத்துவான். தன் நல்ல பெயர் கெடக் கூடாது.அது ஒன்றுதான் அவனுக்கு பிரதானம்.இது இயலாத நிலையில் நான் அங்கு போய் இருக்கத்தான் வேண்டும். ஸ்ரீ காந்த் அவன் சௌகரியம் போல். இங்கும் அங்குமாக இருக்கட்டும். இதைவிட வேறு நல்ல தீர்வு இருந்தால் சொல்லுங்கள்." என்று பொறிந்தாள்; மனோகரி. சிவசங்கரி உதட்டின் மேல் விரலை வைத்து அவளைப் பொறுமையாக இருக்க சமிக்ஞை செய்ய; ஸ்ரீ காந்த் எழுந்து அறையிலிருந்து வெளியே கிளம்ப; கனக சபேசன் " உட்கார், இங்கே. இங்கு

தீவிரமான விவகாரம் பற்றிப் பேசி முடிவெடுக்க வேண்டியுள்ளது. நீ பேசாமல் எழுந்து போவது எனக்கே கோபமூட்டுகிறது. மனோகரிக்கு கோபம் வருவதில் ஒரு நியாயம் உள்ளது. மனோகரி! நீ விவேகமாக சிந்திக்கவில்லை. இரு குடும்பங்களும் வேறு ஊர்களில் இருந்தால் இந்த முடிவு சரியாக இருக்குமா? மனவெழுச்சியில் எடுக்கும் முடிவு பாதிப்பைத்தான் தரும்"

என்று சற்று கடுமைமாகச் சொல்ல, மனோகரியின் கண்களில் சுய பச்சாபத்தில் கண்ணீர் துளிர்த்தது." சிவசங்கரி தன் பெற்றோர் தென்திருப்பேரையில் முதுமையில் தனியே இருந்தது நினைவில் வந்து போயிற்று. வருடம் ஒரு முறை அவர்களைப் போய் பார்த்து வருவதற்கே,தன் மாமியார் முகம் பார்த்து, மாமனார் மனம் கோணாமல் கனக சபேசனை சரிக்கட்டி போய் வருவதற்குள்,படாத பாடு ஆகிவிடும். அவர் கொடுக்கும் ஐநூறுடன் தன் சிறு வாட்டு பணம் ஐநூறும் சேர்த்து கொடுப்பதுடன், கண்ணில் பொங்கும் நீருடன் திருப்தி பட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. சொந்தமாய் சம்பாதிக்கும் மருமகளுக்கு என்ன தீர்வு சொல்லப் போகிறார்; இவர்?

சிவசங்கரி இப்போது மிக்க ஆர்வமானாள்.

"வருத்தப்படாதே. நான் ஒரு யோசனை சொல்கிறேன். சரியாய் இருக்குமா என்று பாருங்கள். ஸ்ரீ கரியின் ஸ்கூல் அருகில் நிறைய அடுக்குமாடி குடியிருப்பு உள்ளன. அதில் கூடியவரை பக்கத்தில் இரு வீடுகளை வாடகைக்கு எடுக்கலாம். இரு குடும்பங்களும் அங்கே குடி போகலாம். அவரவர் சௌகரியம் போல் அவர்கள் வீட்டில் இருக்கலாம். மனோகரியும் நீயும் பேத்தியும் இங்கும் அங்குமாக இருக்கலாம். உங்களுக்கு எங்கள் இருவரையும் பார்த்துக் கொள்ளும் நிறைவும் இருக்கும். நாங்களும் ஒருவர்க்கு ஒருவர் ஆதரவாய் இருப்போம். காதல் திருமணம் செய்து கொண்ட நீங்களும் தனித்தில்லாமல் சேர்ந்தே வாழலாம்.இதற்கு உன் பெற்றோர் ஒப்புக் கொள்வார்களா? ஸ்ரீ காந்த் நீ இந்த ஏற்பாட்டை அவர்களுக்கு நீ எடுத்துச் சொல். இது அவர்களுக்கு ஒரு நிறைவைத் தரும்." என்று சொல்ல மூவர் அகமும் மனமும் மலர்ந்தன.

தானும் ஏதாவது வேலை பார்த்து சம்பாதித்து கொண்டிருந்தால்; இவரும் தனக்கு கூடுதலாய் அனுசரித்திருந்திருப்பாரோ; என்ற நினைப்பை சிவசங்கரியால் தவிர்க்க இயலவில்லை. கொடுத்து செலவழிப்பதற்கும், எடுத்து செலவழிப்பதற்கும், இருக்கும் வித்தியாசம், அவளுக்கு துல்லியமாக புலப்பட்டது.

கனக சபேசன் சொல்லாமல் விட்ட ஒரு விஷயம் ஒன்றுள்ளது. சென்ற வாரத்தில் கனக சபேசன், மனோகரியின்அப்பாவுக்கு உடல் நலம் பற்றி விசாரிக்க; தான் நன்றாக இருப்பதாகவும், அடுத்த மருத்துவ பரிசோதனைக்கு இன்னும் இரண்டு மாதம் இருப்பதாகவும் சொல்லியிருந்த நிலையில; மனோகரி அப்பாவை மருத்துவரிடம் கூட்டிப் போக வேண்டியுள்ளது என்று சொல்லி அங்கேயே தங்கிவிட்டது; ஒரு நெருடலாக இருந்தது. இன்று இந்த விஷயத்தை பேசும் சமயம் மனோகரியின் மனதைப் புரிந்துகொண்டு அவர் இந்த முடிவை எடுத்தபோது, அவள் அப்பாவிடம் தான் தொலைபேசியதை சொல்லாமல் விட்டதும் சரிதானே.

மறுமணச் சிக்கல்கள்

முனைவர் ஜ. ஜான்சிராணி
ஆய்வு வளமையர், *உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை*

பெண்கள் கணவனை இழந்தபின் மறுமணம் செய்வது சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக இருந்தது. மனைவி இறந்தவுடன் ஆணொருவன் மறுமணம் செய்வதை ஏற்றுக்கொள்ளும் இந்தச் சமுதாயம் பெண்ணுக்கு அந்த உரிமையை அளிக்கவில்லை. பலரின் போராட்டத்திற்குப் பின்னேதான் மறுமணம் என்பது கணவனை இழந்த பெண்ணுக்குச் சாத்தியமானது.

> "வாடாத பூப் போன்ற மங்கை நல்லாள்
> மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?"52

என்றார் பாரதிதாசன். பெண்களின் உரிமைக்காகப் போராடிய பெரியாரால் 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் 'விதவை மறுமணத்'தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இப்படிப் பலரின் போராட்டத்தாலும் முயற்சியாலும் பெண்கள் மறுமணம் செய்துகொள்வது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக மாறினாலும் அதனால் ஏற்படும் நன்மையும் தீமையும் பெண்ணைச்சார்ந்ததாகவே இன்றும் உள்ளது. அவ்வாறு மறுமணத்தால் ஏற்படும் சிக்கல்களை மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் காணமுடிகின்றது.

எழுத்தாளர் ஆதிலட்சுமியின் 'மறுமணம்' என்னும் சிறுகதையில் கணவனை இழந்த ஒரு பெண் இன்னொருவரை மறுமணம் செய்து கொள்வதால் அவள் சந்திக்கும் சிக்கல்கள் முதல் கணவரின் குழந்தைபடும் வேதனை ஆகியவை ஆழமாகச் சொல்லப்பட்டுள்ளன.

பானுமதி, செல்வத்தைத் திருமணம் முடித்து இரண்டு ஆண்டுகள் ஆன நிலையில் ஒரு விபத்தில் செல்வம் இறந்துவிட கைக்குழந்தையுடன் தனிமையாகிறாள். அவளின் மாமனார், மாமியார் அவளுக்கு வேறொரு பையனைப் பார்த்து மறுமணம் செய்ய முயற்சிக்கின்றனர். இதற்குப் பானுமதியின் தாய், தந்தையும் உடன்படுகின்றனர். மகளாயிருந்தாலும் கணவனை இழந்த பெண்ணை உடன் பிறந்தவர்களோடு தங்கள் வீட்டில் வைத்திருப்பதில் உள்ள சிக்கல்களை அவர்கள் உணர்ந்திருந்தனர்.53

கணவனை இழந்த ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை தருவது ஒப்பற்ற செயல் என்று மகாத்மா காந்தி கூறியிருக்கிறார். அத்தகைய ஒப்பற்ற செயலுக்குரியவனாக தினகரன்

முன்வருகிறான். இரண்டாவதாக மணமேடை ஏறும் தன் மருமகளுக்கு அவளின் முன்னால் மாமியாரே பொட்டிட்டு ஆசி கூறி அனுப்புகின்றார்.

பானுமதிக்குத் தற்போது இரண்டு பெண் குழந்தைகள். முதல் கணவரின் மகள் துளசி. தினகரனின் மகள் உமா. தன் பாட்டியிடம் வளர்ந்த துளசி பாட்டியின் இறப்பிற்குப் பிறகு பானுமதியிடமே வளரவேண்டிய சூழல் ஏற்பட்டது. துளசியைத் தினகரனுக்கு ஏனோ பிடிக்கவில்லை. தன் மகள் உமாவிடம் காட்டும் பிரியத்தைத் துளசியிடம் காட்ட அவனுக்கு மனம் வரவில்லை. இந்தப் பிரிவினை துளசியின் மனதிலும் காயத்தை ஏற்படுத்தியது. "அப்பா தன்னிடம் மட்டும் அன்பாக இருக்க மாட்டேன்" என்கிறார் என்ற கேள்வி அவளுக்குள் எழாத நாளில்லை.

நாள்கள் நகர்ந்தன. துளசிக்கு உண்மை தெரியவருகிறது. தன் அப்பா தினகரன் இல்லை என்பதும் அவர் இறந்துவிட்டார் என்பதும். துளசியின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவித்தாள் பானுமதி. "ஏன் பாகுபடுத்திப் பார்க்குறீங்க?" என்று தினகரனிடம் கேட்டால், "அவள் என்ன நான் பெத்த பிள்ளையா?" என்று தினகரன் கத்துவதைக் கேட்டு அதற்குமேல் எதுவும் பேசி வம்பை வளர்க்காமல் பானுமதி மௌனமானாள்.54

தினகரன் தீபாவளி நேரம் ஒருமுறை உமாவிற்கு நெக்லஸ் வாங்கி வந்திருந்தான். அதைப் பார்த்த துளசி தனக்கும் வேண்டுமென்று அழுதாள். அதைத் தன் அம்மா கண்டுகொள்ளவில்லை என்றவுடன் அவளது அழுகை ஆத்திரமாக, அடம்பிடிக்கிறாள் துளசி. "அப்பன் எப்படிப்பட்டவனோ... அதான் புள்ளையும்... சீ..." என்று தினகரன் திட்டியதும் துளசி, தன் அப்பனின் முகத்தைக் கூடப் பார்க்காமல் அவரோடு தன்னை ஒப்பிட்டுப் பேசியதைப் பொறுத்துக் கொள்ள முடியாது கூனிக்குறுகிப் போனாள்.55

அதன்பின் அவள் நகைக்காக அழவில்லை. தனக்கும் தங்கைக்குமான அறையில் நுழைந்து படுத்துக்கொண்டாள் பானுமதி தன் கணவனின் கோபத்திற்குப் பயந்து அவனோடு ஒரு அறையில் உறங்கச் சென்றாள். நடுநிசிக்கு மேல், "எனக்கும் கொடு... எனக்கும் கொடு..." என்ற உமாவின் அழுகைக்குரல் கேட்டும் அலுப்பின் காரணமாக "என்ன உமா சத்தம்?" என்று கேட்டுவிட்டுப் பானுமதி உறங்கிப் போனாள்.56

மறுநாள் காலையில் பள்ளிக்கு அனுப்ப அறையின் கதவைத் திறந்து இருவரையும் எழுப்பச் சென்றாள் பானுமதி. அங்குத் தினகரன் தன்னோட நிலத்தில் விவசாயப் பயன்பாட்டிற்காக வாங்கி வைத்திருந்த பாஷாணத்தைத் துளசி குடிக்க அதைக் கேட்ட உமா தனக்கும் வேண்டுமென்று அடம்பிடிக்க அப்பா, அம்மா எழுந்துவிடுவார்கள் எனப் பயந்து தன் தங்கைக்கும் பங்கைக் கொடுக்க பாராகுவாட் என்ற பாஷாணம் அவர்களின் உயிரைக் குடித்திருந்தது.

மறுமண வாழ்க்கை என்பது ஒரு பெண்ணின் வாழ்வில் எவ்வளவு வேதனையையும் சிக்கலையும்தருவதாகஉள்ளதுஎன்பதைஇந்தச்சிறுகதைஅழுத்தமாகஎடுத்துரைக்கின்றது.

என் பல்ஸ்.....சர்

அரீஷா

அவசர அவசரமாக எலுமிச்சை சாதமும் உருளைக்கிழங்கு பொரியலும் விழுங்கி முடித்து, பையை தூக்கிக்கொண்டேன். வண்டி சாவியை எடுத்துக்கிட்டு, ஹெல்மெட்டை மாட்டிக்கிட்டு, பானுமதிகிட்ட "போய்ட்டு வரேன்"னு சொல்லிட்டு வாசலைத் தாண்டினேன்.

எங்கள் அப்பார்ட்மெண்டில் மொத்தம் ஆறு வீடுகள். எல்லாவீடுகளுக்கும் ஒரே அம்மாதான் கோலம் போடுகிறார்— ஒரே மாதிரியான புள்ளிகள், ஒரே மாதிரியான கோடுகள், ஒரே மாதிரியான சுழற்சிகள். உணர்வில்லாத இயந்திரம் போல் உருண்டு விழும் மாவுக் கோலங்கள். அதைக் காப்பாற்ற கையை வைத்துக் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. யாரும் அதை மிதிக்காமல் நகர முடியாது; எப்போதும் அது சிதைந்து கிடப்பதுதான் வழக்கம்.

பார்க்கிங் எல்லோருக்கும் அந்த ஒரே சின்ன சந்துக்குள்தான். அந்தச் சதுரத்துக்குள், போர்க்களத்திலிருந்து காயங்களுடன் மீண்டுவந்த வீரனைப்போல், என் வண்டி நின்றிருந்தது — முழுக்க முழுக்க உருக்குலைந்தபடி. நேற்று இரவு நடந்த அமளியின் சாட்சியாய், இருக்கைகள் கிழிந்து, பஞ்சுகள் வெளியே வெடித்திருந்தன. ஒவ்வொரு பாகமும் ஒரு கதை சொல்லும் வண்ணம் சேதமடைந்திருந்தது. போரில் சிதறிய ஆயுதங்களைப் போலவும்; வண்டியின் மேல் படிந்த கீறல்கள், வீரனின் உடலில் படிந்த தழும்புகளைப் போலவும் தெரிந்தன.

"அடப்பாவிகளா! என் வண்டியை இப்படி ஆக்கிட்டாங்களே!" என மனம் மொறையாய்க் குமுறியது.

கோபம், ஆற்றாமை, துக்கம் — மூன்றும் கலந்து, ஒரு பெரும் பாரமாக நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்தன.

வண்டியை ஸ்டார்ட் செய்ய முயன்றேன். நகர மறுத்தது.

"பெட்ரோல் காலியா?" — அந்த சின்ன சந்தேகமே ஒரு நிமிஷம் புயலாகப் பெரிதெடுத்தது. ஆனா அதுக்கே வாய்ப்பில்லை. நேத்துத்தான் ஐந்நூறு ரூபாய்க்கு நிரப்பியிருந்தேன்.

ஒரு பெருமூச்சு... எப்போதும் போலவே, ஸ்டார்ட் செய்யும் ஒவ்வொரு முறையும், வண்டி என்னை ஏமாற்றம் கலந்த நிசப்தத்துடன் பார்த்தது போலத்தான் இருந்தது. அதனுடைய

“கிரர்ர்... கிரர்ர்...” எனும் பரிதாப ஒலி, என் உள்ளம் உருகும் ஒலியாகவே காதில் விழுந்தது. அது என் இதயத்தின் வேதனையைத் துளைக்கும் மறு ஒலி போல இருந்தது.

அலுவலகம்!

தாமதம்!

முக்கியமான மீட்டிங் நினைவுக்கு வந்தது. ஏற்கனவே பல வேலைகள் காத்திருக்கின்றன. இப்போயதும் லீவ் போட்டா? — ஆயிரம் விளக்குகள் அணைந்துபோன தருணம்.

என் மூத்த அக்கா மங்கைக்கா வந்திருந்தாள். உறையூரில் இருந்து வந்தாலே ஒரு வாரம் மருத்துவமனைக்கும் வீட்டுக்கும் மாறி மாறிப் போவது அவளுக்கு வாடிக்கை. அவளைப் பார்ப்பது சந்தோஷமாக இருந்தாலும், அவளால் ஒரு வாரத்திற்கு மேலாக அலுவலகம் நேரத்திற்கு செல்லவில்லை. என் வேலை போய்டுமோ ஐயோ அப்படியானால், நகைக் கடனையும் எப்படி அடைப்பது? வாடகை வேறு கொடுக்க வேண்டுமே! நடு ரோட்டில் யாருமற்ற அனாதையாக நிற்கப் போகிறேனோ ஆண்டவா! “இதுல இது வேற. அய்யோ கடவுளே! நான் என்னத்த பண்ணுவேன்?” என்று தலையைப் பிடித்துக் கொண்டு தவித்தேன்.

தெருமுனையிலிருந்த சாய்பாபா மோட்டார் ஒர்க் ஷாப்புக்கு வண்டியைத் தள்ளினேன். பால்காரர், பேப்பர்காரர், வாக்கிங் போகும் ஆன்ட்டி-அங்கிள்... அவர்களோடு கக்கா போகும் நாய்களும் வரிசையாக வர நானும் இணைந்தேன்! இது ஒரு ஊர்வலம் போல் தோன்றியது. எல்லோரும் அவரவர் வேலைகளைச் செய்ய, நான் மட்டும் என் வண்டியைத் தள்ளிக்கொண்டு என் கஷ்டத்தை சுமந்து சென்றேன்.

அந்த நேரத்தில், பின்னணியில் எம்.ஆர். ராதாவின் குரலில், “பெட்ரோல் காலியா, சார்?”

அடடா! இது... ஹவுஸ் ஓனர் தாணு கிருஷ்ணன்! நடுத்தர வயதுடையவர், எப்போதும் வெள்ளை வேட்டி சட்டை. கையில் நீல நிறப் பால் பாக்கெட்டுகளையும், புரூ காபி ரீஃபில் பாக்கெட்டுகளையும் ஒரு டஜன் வாங்கி, அவற்றை ஒன்றாகப் பிடித்திருந்தார். வெற்றிலை மென்று சிவந்த உதடுகள், மெல்லிய புன்னகையைத் தவழவிட்டன. அவரது முகத்தில் எப்போதும் ஒருவித அலட்சியம் இருக்கும். யார் என்ன கஷ்டத்தில் இருந்தாலும் கண்டு கொள்ள மாட்டார்.

கண்ணாடிக்குள்ளிருந்த கூர்மையான பார்வையை வெளிப்படுத்தும் கண்களை உயர்த்தி, மீண்டும் “பெட்ரோல் காலியா?” என்று கேட்டார். அவரது கேள்வி என்னை மேலும் எரிச்சலடையச் செய்தது.

“எலி... எலி காலி பண்ணிடுச்சு. உங்க வீட்டு எலி” என்று மனதுக்குள் கத்தினேன். என் கோபத்தை அடக்கிக் கொண்டு, முகத்தில் சாதுவான புன்னகையை வரவழைத்து, “இல்லைங்க, வண்டி ஸ்டார்ட் ஆக மாட்டேங்குது” என்றேன்.

"ஓ அப்படியா? முருகன் கடைக்குப் போனால் சரி செய்துவிடுவான்."

இந்த நேரம் கடை இருக்குமா...? நான் நம்பிக்கையிழந்து கேட்டேன்.

"அவன் இருப்பான், போங்க."

அவர் வழிவிட,

வண்டியைத் தள்ளிக்கொண்டு முருகன் கடையை அடைந்தேன். தெருவோரத்தில், துருப்பிடித்த தகரக் கூரையுடன், பெயிண்ட் உரிந்த சுவர்களுடன், 'முருகன் மோட்டார் ஒர்க்ஸ்' என்ற பழைய விளம்பரப் பலகையுடன் அந்தக் கடை இருந்தது. அந்தக் கடையைப் பார்த்ததும் என் நம்பிக்கை மேலும் குறைந்தது. இவ்வளவு மோசமான கடையிலா என் வண்டி திருந்தப் போகிறது? உள்ளே இருண்ட, சிறிய அறையில், எண்ணெய் மற்றும் அழுக்கு படிந்த கருவிகளும் தொங்கிக் கொண்டிருந்தன.

முருகன், கையில் கறை படிந்த துணியுடன், ஒரு பழைய டிஸ்கவர் வண்டியின் இன்ஜினைப் பிரித்துச் சரி செய்து கொண்டிருந்தார். அவர் ஒரு இயந்திர மனிதன் போல் தனது வேலையில் மூழ்கியிருந்தார். நான் வந்ததைக்கூட அவர் கவனிக்கவில்லை. மினுமினுப்பற்ற மினிப்பற்ற கருவிகள், எண்ணெய் வாசனை, அந்த கடையின் வாசல் அனைத்தும் அவரோடு பழகிப் போன பழைய கதைகள் போல இருந்தன.

"சார்" என்று அழைத்தேன். பதில் இல்லை. "வணக்கம் சார்" என்றேன் சற்றே உரக்க. அப்போது நிமிர்ந்தார். ஒரு பழைய பஜாஜ் பல்சரின் இன்ஜினை மெதுவாகப் பிரித்து பார்த்துக் கொண்டிருந்தார். அவரது முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை.

"ஸ்டார்ட் ஆகல சார்' என்றேன்

"வண்டியை விட்டுட்டு போங்க. பார்க்கலாம்."

"ஐயோ! ஆபீஸ் போகணுமே!" நான் அவசரப்படுத்தினேன்.

அவரிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை. வண்டியை நெருங்கியவர், பஜாஜ் டிஸ்கவர் என்எஸ் 125-ன் பெட்ரோல் டேங்கை திறந்து பார்த்தார். ஸ்பார்க் பிளக்கை கழற்றி தீப்பொறி வருகிறதா எனச் சரிபார்த்தார். அவரது ஒவ்வொரு அசைவும் நிதானமாகவும், அனுபவம் மிக்கதாகவும் இருந்தது.

"சீக்கிரம் சரி பண்ணுங்க சார். ஆபீஸ் போகணும்." என பதறினேன்

அவரோ... அதே ரிதத்தில்.

அவர் வண்டியுடன் பேசுவதைவிட, வண்டி அவருடன் பேசுவதுபோல் இருந்தது.

வண்டியைப் பிரித்து வயர்களைச் சரிசெய்தவர்,

“சிடி மாற்றணும். 1500 ஆகும்." சொன்னார்.

“ஐயோ!” என்று சொல்லும் முன் அவர் திரும்பி வண்டியிலேயே மூழ்கிவிட்டார். அவர் சொன்னதெல்லாம் என் காதில் சரியாகப் படவில்லை.

“1500-க்கு ஒரு ரூபாய் கூட குறையாது. ஓகேன்னா சொல்லு."

“என்கிட்ட அவ்வளவு காசு இல்ல சார்...” —

நான் தயங்கினேன்.

“விடு, GPay பண்ணிக்கலாம்."

“இல்ல சார்... பழசு இருந்த போடுங்க.” என்றேன்.

“இருக்கானு பார்க்கணும்... வெயிட் பண்ணு."

அவர் சொன்னபோதே, நான் அப்படியே சிலை போல் நின்றேன்.

ஜிபே — இது ஒரு தொல்லை

காசு கைல இருக்கவும் விடாது,

பேங்க்ல வைக்கவும் விடாது.

கேட்டா — ‘டிஜிட்டல் இந்தியா’வாம்!"

அப்படி போடு போடு போடு,

அசத்தி போடு கண்ணாலே!

இப்புடி போடு போடு போடு,

இழுத்து போடு கையாலே!

முருகன் தன் காதருகில் அலறிய அலைபேசியைப் பார்த்தார்.

அவர் முகத்தில் எரிச்சல் படர்ந்தது. அணைத்து தூக்கி போட்டார்.

வண்டியை துயில் உரிந்து,

ஒன்றரை மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு,

புகை மண்டலத்தைக் கிழித்துக்கொண்டு

என் பஜாஜ் டிஸ்கவர் என்எஸ் 125 உயிர்த்தெழுந்தது.

***"வூம்!"** என்ற அந்த சத்தம்,*

ஒரு நல்ல காப்பி சாப்பிடும் சந்தோஷத்தை

என் உள்ளுக்குள் ஊற்றியது.

''அப்பாடா!''

என்று பெருமூச்சு விட்டேன்.

"எவ்வளவு சார்?"

"அறுநூறு."

"ஏன் சார்?"

"ஓயில் மாத்தி இருக்கேன்

சிடிஐ (CDI) போயிடுச்சு. அதையும் மாத்தி இருக்கேன்."

"புதுசா?"

"புது சிடிஐனா இந்த விலைக்கு வராது.

பழைய சிடிஐ தான் போட்டிருக்கேன்."

''போதுமடா சாமி...''

என்று ஓட்டம் பிடித்தோம்.

மணி 9:55.

*அலுவலகத்திற்குச் சென்று **இரண்டு மணி நேரமாகி இருக்க வேண்டிய நேரம்** இது. இப்போ தான் கிளம்பினாலும், **ஒரு மணி நேரம்** அதற்கே ஆகும். **ஆக இன்று மூன்று மணி நேரம் தாமதம்.***

அடுத்த நொடியே என் அலைபேசி அலறியது.

ஹலோ சார், கொளத்தூர் இந்தியன் வங்கிலிருந்து பேசறேன்... உங்க நகைக் கடன் மார்ச் 25-க்குள்ள முடிஞ்சிடுச்சு. நாங்க ஒரு வாரமா try பண்றோம் சார், நீங்க பதிலுக்கே phone எடுக்கல. இது ஏப்ரல் 2 ஆகிவிட்டது... தயவுசெய்து வந்து கடனை ரின்யூ பண்ணுங்க இல்லனா 'overdue' ஆகிடும் சார்..."

என்றார் மறுமுனையில்.

அவரது குரலில், ***'அழகு பிடிக்காத கடமை'*** *சேர்த்த ஒரு அலுவலகத் தொனி அமைதியா ஓடினது.*

"ஐயோ சார், இப்ப அலுவலகம் போய்ட்டு இருக்கேன்!"*என்று பதறியபடியே சொன்னேன்.*

"கொளத்தூரா? டீ நகர், எக்மோர், புரசைவாக்கம், பெரம்பூர், கொளத்தூர்... எத்தனை மணிக்குத் தரிசனம் குடுப்பீங்க?"*அவர் கேள்வி கேட்பது போல இல்ல,* ***வழக்கு விசாரிப்பது மாதிரி*** *இருந்தது. அதே சப்தத்தில் அதிகாரமும் கலந்திருந்தது.*

அந்தக் கேள்வி கேட்டவுடன் என் பிரமாதமான நாளே பிசுங்கி போச்சு.

தலையை அடித்துக்கண்டேன்.

"சார், பணம் ஏற்பாடு பண்ணணும், கையில இல்லை. ரீன்யூ பண்றதுக்கு பணம் தேவை இல்லையா? நாளைக்கு வரலாமா? ஆனால், ஆசாரி நாளைக்கு இருப்பாரா? செவ்வாய்க்கிழமை வரமாட்டாரே...

அவர்கிட்ட கேட்டுப் பாருங்க!"

அவர் என்ன சொல்றாரோ முழுசா புரியல. ஆனா, ***"இன்னைக்கு மூணு மணிக்குள்ள வந்துட்டா பாக்கலாம்... இல்லனா அடுத்த வாரம்தான்."****என்று ஒரு 'நியாயம் இல்லாத முடிவு' மாதிரி கூறி, call-ஐ முடிச்சுட்டார்.*

அவரது குரலில் ஒரு துளி இரக்கமும் இருக்கல.

அலுவலகத்துக்கு கிளம்பி ரெண்டு கிலோமீட்டர் தூரம் வந்திருந்தேன். ***வேற வழி இல்லாம****, மீண்டும் திரும்பி அதே வழியே வீட்டுக்குத் திரும்பினேன். வண்டியும் என்னை புரிந்துகொண்ட மாதிரி அமைதியாய் வந்தது.*

"என்னங்க, மறுபடியும் வந்துட்டீங்க? என்ன ஆச்சு?"

"உள்ள வா, சொல்றேன்."

பானுமதிக்கு ஆச்சரியமும் கவலையும் கலந்தது. அவள் கண்களில் பத்து கேள்விகளுக்கும் பதில்கள் தேடும் பதட்டம் தெரிந்தது. கதவை மெதுவாக தாழிட்டு, உட்புறம் வந்து நின்றாள்.

தண்ணீர் பாட்டிலைக் கொடுத்தாள். அதைக் குடித்தேன் — மடக்கென்றோ அல்லது மோசமா என்று அர்த்தமில்லாமல் அருந்தினேன்.

அவள் என்னை பார்த்துக்கொண்டே நின்றாள்.

பின், ஒரு கணம் பார்த்துவிட்டு, பான் ஸ்விட்ச்-ஐ அழுத்தினாள்.

"வண்டி மறுபடியும் தகராறு பண்ணிடுச்சா?"

"ச்சீ... ஆமா! நாசமாப்போன எலி வயிறெல்லாம் கடிச்சிருக்கு. காலையிலேயே ஆயிரம் ரூபா போச்சு!"

ட்ரிங் ட்ரிங் ட்ரிங்... அலைபேசி அடிக்க.

பேச்சைத் துண்டித்து, ஹலோ என்றேன். மறுமுனையில் என் மேனேஜர்.

"குட் மார்னிங் சார்..."

"குட்மார்னிங் சார். எங்க இருக்கீங்க?"

"நுங்கம்பாக்கம், சார்."

"சரி... 'மண்ணடி'ல ஒரு பார்சல் கலெக்ட் பண்ணனும்."

"பாரிசா, சார்?"

"எஸ், எஸ்... லொகேஷன் அனுப்புறேன். கலெக்ட் பண்ணிட்டு நேரா குடோனுக்கு வந்துடுங்க."

பதிலுக்குக் காத்திருக்காமல் துண்டித்துவிட்டார்.

பானுமதி கேட்டாள், **"பாரிஸ் போகணுமா இப்போ?"**

"இல்ல, அதுக்கு முன்னாடி கொளத்தூர் போனும்... பேங்க்குக்கு...

நகை ஞாபகம் வந்ததுபோல் பதறினாள்.

"அய்யோ, நகை என்னாச்சு?"

"கைய மீறிப் போயிடும் போலிருக்கு. உடனே வந்து திருப்பி வைக்கச் சொல்றாங்க."

"ஐயோ! ஏழரை சவரன் அப்படியே... அதுலயும் அந்த ஜிமிக்கி வாங்கி, ஒரு நாள்கூட போடலையே!"

அவளது குரலில் ஏக்கம் பெருகியது. ஜிமிக்கியை நினைத்து அவள் கண்கள் கலங்கியது என் மனதைப் பிழிந்தது.

“சரி, நீ ஆரம்பிக்காத! நான் கிளம்புறேன். அந்த லோன் கார்டு எடுத்துட்டு வா."

அவள் தலையசைத்து அலமாரிக்குப் போனாள். ஜன்னல் வழியாக வெளிச்சம் அறையில் ஒளியூட்டியது. வீடு அமைதியாக இருந்தது. அந்த அமைதிக்குள் ஒரு சத்தமில்லாத வேதனை நுழைந்தது.

அவள் சிவப்பு பூ வைத்த பச்சை நைட்டி, அதன் மேல் சாய்ந்த பழுப்பு சால், கால்களில் கொஞ்சம் ஒலிக்கும் கொலுசு — அனைத்தும் ஒரு மென்மையான தளர்வை பேசின. அவள் அலமாரி கதவை மெதுவாகத் திறந்து கைகளை நீட்டி தேடினாள்.

“மேல ஓரத்துல இருக்குமே... ரெட் காலர் கவர் ல பாரு."

“இப்போ பார்த்துட்றேன்... உள்ளே போயிட்டுருக்கு!"

அவள் விரல்களை நீட்டியபோது, ஒரு கார்டும் அதனுடன் சில பழைய ரசீதுகளும் சிக்கின. அவற்றை கையாளும் போது, அவள் கண்களில் ஒரு மங்கிய நினைவு தோன்றியது. நாங்கள் முதன்முதலில் நகை வாங்கிய நாள் போல.

அவள் மெதுவாக என்னைப் பார்த்தாள்.

“இதோ... எடுத்துக்கோங்க." அவளது குரலில் சோகமிருந்தது. கார்டை கொடுக்கும்போது அவளது கைகள் சிறிது நடுங்கின.

அதை வாங்கிக்கொண்டு, அவளை ஒரு கணம் பார்த்தேன்.

“வண்டி எங்க?”

“அதான் சொன்னேன்ல... செய்தாச்சு. நல்லா ஓடுது."

“கொளத்தூர் போயிட்டு, அப்புறமா பாரிஸ்.

“நான் கிளம்பறேன்!"

“பத்திரமா போயிட்டு வாங்க!" அவள் அக்கறையுடன் சொன்னாள்.

அவள் என்னை வாசல் வரை பின்தொடர்ந்தாள். நான் திரும்பிப் பார்த்தபோது, அவள் இன்னும் என்னைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். கண்களில் கவலையா? எதிர்பார்ப்பா? எனத் தெரியவில்லை. ஆனால் அந்த பார்வையில் ஒரு முக்கியமான தருணம் உறைந்தது போலிருந்தது. அந்த பார்வை என் மனதைக் கிழித்துவிட்டது.

வண்டி மெதுவாக வேகம் எடுத்து நகரத் தொடங்கியது.

புளியமும் வேப்பமும் கலந்து சாலையின் இருபுறத்திலும் ஒரு புடைசாலை போல நீண்டுகிடந்தன. அந்த மரங்கள் என் உள்ளத்தில் பரவியிருந்த சஞ்சலத்தை ஒவ்வொரு கிளையிலும் பிரதிபலிக்க முயன்றன. வலது பக்கம் புதிதாக திறந்திருந்த ரயில்வே கேன்டீனிலிருந்து வெளிப்பட்ட தேயிலை வாசனை மனதிலிருந்து நேராக மூக்கை வந்தடைந்தது.

வண்டி புகைக் கக்கியபடி வங்கியின் முன் நின்றது. அந்த மெல்லிய புகையோடு நானும் – வங்கியின் கண்ணாடி கதவுகளைத் தள்ளிச் சென்று உள்ளே நுழைந்தேன். குளிர்சாதன வசதி இருந்தும், கூட்டத்தின் நெரிசலில் வியர்வை வழிந்தது.

வியர்வை நாற்றம் கலந்த காற்று, பணம் எண்ணும் இயந்திரங்களின் சத்தம், வாடிக்கையாளர்களின் புலம்பல்கள், பரிவர்த்தனையின் பீக் நேர இரைச்சல்—அவை அனைத்தும் சேர்ந்து ஒரு அதிர்ச்சியடைய வைக்கும் அலையை உருவாக்கின.

அந்த இரைச்சலுக்குப் பின்னாலிருந்து என் மேனேஜர் கொடுத்த வேலையின் குரல் துளைத்துச் சத்தமிட்டது. என் கன்னத்தில் சுத்தியால் ஒருமுறை அறைந்ததுபோல் இருந்தது.

"சார்..."

"ஜுவல் லோன்."

"நகை கடனா? ஆறாவது கவுண்டருக்கு போங்க."

ஆறாவது கவுண்டரை நோக்கி நடந்தேன். அங்கு ஏற்கனவே நீண்ட வரிசை.

"சார், வரிசையில வாங்க."

"என்ன சார், நானும் வரிசையிலதானே வர்றேன்?"

"இல்ல சார், நாலு நாளா வர்றாரு. கொஞ்சம் அவரோட வேலையை முடிச்சுட்டு வந்துடறேன். பொறுங்க சார்."

நாலு நாளா வருவாருக்கா முன்னுரிமை? நானோ நாலு நிமிஷம் தாமதமாகப் போனாலே ஆபீஸ்ல சம்பளத்தைக் கடிக்கிறாங்க. என் கோபம் வாய்க்குள்ளேயே முணுமுணுத்து தேங்கியது.

என் கையில் இருந்த டோக்கனும், அதன் மீது எழுதப்பட்டிருந்த LED எண் – 32. அதுவே என் நம்பிக்கையும்.

"சார், இந்த ஸ்லிப்ப் எழுதிக் கொடுங்க."

“சார், அக்கவுண்ட் மாத்தணும்.”

“ஆதார் கார்டு எடுத்துட்டு வாங்க.”

அந்த இடையில் அவர் சொன்ன “நெக்ஸ்ட்” என் காதில் விழவில்லை.

“நெக்ஸ்ட்...!” என்று உரக்கக் கேட்டதும், இரண்டாக மடிக்கப்பட்ட என் கார்டை நீட்டினேன். அதில் ஆறு இலக்க எண் ஒன்றை எழுதி வட்டமிட்டுக் கொடுத்தார்.

“சார், வட்டி எவ்வளவு வரும்?”

“அப்படித் தனியா பார்க்க முடியாது சார்.”

“ஏன்?”

“நாலாவது கவுண்டர்ல விசாரிங்க.”

மீண்டும் நாலாவது கவுண்டரா?

வாசல் வரை நீண்ட வரிசை. மனம் புலம்பியது: ***“வேணாம்... போயிடலாம்..."*** *ஆனால் வேறு வழியில்லை.*

“கணக்கை முடிச்சிடலாமா?”

“இல்ல சார், திருப்பி வைக்கணும்.”

“அப்போ வெயிட் பண்ணுங்க...”

பொலித்தீன் பைகளில் அடைத்துப் பதுக்கப்பட்ட நகைகள், லாக்கரில் வாய்த்தபடி என் கண்களைக் கடத்தியது.

சரி. அப்போ ஒண்ணும் பண்ண முடியாது.

என் நகையை எடுத்துப் பார்த்தேன். ஜிமிக்கி வளைந்திருந்தது.

“என்ன சார், ஜிமிக்கி இப்படி வளைஞ்சிருக்கே?”

“நீங்க பாக்ஸ்ல குடுக்கலையா?”

அறிமுகமில்லாத ஒரு நடுத்தர வயது பெண்மணியின் குரல்:

“இதோ பாருங்க, பாக்ஸோடதான் கொடுத்தேன்.”

"எனக்கும் இப்படித்தான் ஒரு தடவை ஒடிஞ்சு வந்துச்சு. அதுக்கப்புறம் பாக்ஸ்லதான் குடுக்குறேன்."

தன் புத்திசாலித்தனத்திற்கு பாராட்டு நாடும் பேச்சு.

அது என் மனத்தில் ஒரு எரிச்சலாய் நுழைந்தது.

"இப்ப ஒண்ணும் பண்ண முடியாது சார். ஆசாரி நாளைக்குத்தான் வருவார்."

"நாசமாப் போச்சே..."

என் மனம் மட்டும் கேட்டுவிடும் வஞ்சனையான உரை.

புது கார்டு – இனி இன்றிலிருந்து பதினோரு மாசம் கவலை இல்லாம இருக்கலாம்.

தொண்டை வறண்டு, வெளியே வந்தேன்.

தர்பூசணி வண்டி கண்ணில் பட்டது. ஆனால் நேற்றைய செய்தி ஞாபகம் வந்தது – ***"எலி கடித்த பழங்களை வெட்டி விற்கும் சாலையோர வியாபாரிகள்."*** *பசியை மறந்துவிட்டு, மனம் மூடி விட்டது. இடது பக்கம் திரும்பினேன். கரும்பு ஜூஸ் கடை.*

"சார், பிளைனா? மசாலாவா?"

"மசாலா கொடுங்க."

இருபதை நீட்டினேன்.

"சார், இன்னும் ஐந்தருபாய் கொடுங்க."

"இருபது ரூபாய்தானே போட்டிருக்கு?"

"அது பிளைன் சார்..."

மசாலாவுக்கு ஆசைப்பட்டு ஐந்தருபாய் போச்சு. *கப்பை நசுக்கி, அருகிலுள்ள குப்பைக்குழியில் எறிந்தேன். வண்டியை கிளப்பினேன். நகரவில்லை. அருகிலிருந்தவர் சற்று உதவினார். பயனில்லை.*

"நேரா போங்க சார்... இடப்பக்கம் திரும்பீங்கனா, ஒரு பிரிட்ஜ் கீழே... அப்படின்னு டூவீலர் ரிப்பேர் கடை வரும்."

கோடைக்காற்று கூட வியர்வையாக கசிந்தது. ஒரு கிலோமீட்டர் நடந்து சென்றேன். கடை மூடியிருந்தது. யாரும் இல்லை.

“போனை போட்டுப் பார்ப்போம்...”

*ஐயோ! இல்லை. **எங்கே விட்டேன்?***

தலை சுற்றியது. பதற்றத்தில் கைகள் நடுங்கின. நெற்றியில் வியர்வை புள்ளிகள். இதயம் வெறித்து அடிக்கத் தொடங்கியது. ஸ்டாண்டுபோட்டு நிறுத்தினேன். ஓடினேன். கரும்பு கடையை அடைந்தேன்.

என் மொபைல்... கரும்புச் சாறு நனைந்த சக்கை குவியல்களில் நடுவே கிடந்தது. பாய்ந்துஎடுத்துகொண்டு மறுபடியும் அங்கிருந்துஓடினேன்.

சட்டை நனைந்து, உடம்பில் ஒட்டிக் கிடந்தது

சுருள் முடியுடன், வெண்மையான தாடியுடன், கிட்டத்தட்ட ஐம்பது வயதைக் கடந்த ஒருவர் அங்கு இருந்தார். கூடவே அவருக்கு உதவியாக இருபது வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞனும் இருந்தான்.

‘‘சார், வண்டி ஸ்டார்ட் ஆகலை. கொஞ்சம் பாருங்க,’’ என்று நான் கூறினேன்.

மறுபடியும், வண்டியை முழுவதுமாகப் பிரித்துப் பார்த்தார்கள்.

‘‘இது இங்கே சரி பண்ண முடியாது சார். வயர் போயிருச்சு. சிடிஐ மாத்தணும்,’’ என்றார் அந்த ஐம்பது வயது நபர்.

சார் கலையிலதான் போட்டேன்

குழப்பியவர்கள் மறுபடியும் பார்த்தார்கள் சார் பழசை இருக்கு என்றார்கள் பழசுதான் ஆனா இன்னைக்கு தா போட்டேன்

பழசு சரிவராது சார் புது ..... ஒன்னு வாங்க போட்ட வண்டி ஓடும்

இல்ல சார் வேறு என்ன பிரச்சினையுனு பாருங்க

இல்ல சார் அதான் பிரச்சினை

எனக்கு அவர்களை நம்பவா என்ன சொல்ல யோசிக்க தெரியல.

சரி முருகனுக்கு போன பிட்டு கேக்கலாம் னு விசாரிரித்தேன்.

வண்டிய உட்டு நீ வா சார்....நைட்ட்டு நானும் வாறன் பார்க்கலாம். கிளம்பி வா சொல்லிட்டு கட் பண்ணிட்டான்.

"சார், வண்டி இங்கேயே இருக்கட்டும். நானும் என் மெக்கானிக்கும் ராத்திரி வந்து எடுத்துக்கிறோம்."

"இல்ல சார். வண்டி இங்கே நிறுத்தக் கூடாது."

அங்கு ஓரமா நிருதலாம் னு எதிர்பக்கத்தில் கையை காட்டினார்

ஏற்கனவே அங்கு ஒரு காய்கறி வண்டி முழுவதும் பல நிற பிளாஸ்டிக் சீட்டுகளை கொண்டு மூடி ஓரமாக நிறுத்தப்பட்டு அதன் அருகில் ஒரு ஹீரோ ஹோண்டா நின்றது.

சாலையைக் கடந்து, ஓரம் கட்டி நிறுத்தினேன் வண்டியில் இருந்த சில டாக்குமெண்ட்ஸ் எடுத்து பைக்குள்ள வைத்துக்கொண்டு திரும்பி கடைக்காரரைப் பார்த்தேன். அவர் கடைக்குள் போயிருந்தார். அவரது அலட்சியம் என்னை மேலும் எரிச்சல் படுத்தியது.

என் உள்ளத்தில் ஓர் இருள் காத்திருந்தது என்பதை என்னால் உணரமுடியவில்லை.

ராப்பிடோ புக் பண்ணி நேரத்துக்கும் முன்னே போனேன். *மானேஜர் சொன்ன லொகேஷன் மூடப்பட்டிருந்தது. அவரை பலமுறை அழைத்தேன் – பதில் கிடைக்கவில்லை.*

அந்த ஊமையான கட்டிடங்களின் நடுவே, நான் மட்டும் தான் ஒவ்வொரு கட்டமாய் விழுந்துக்கொண்டிருந்த ஒரு கூவிய ரங்கம் போல...

அங்கிருந்து நேராக அலுவலகத்துக்கே கிளம்பினேன். அங்கே வந்ததும் என்னைப் பார்த்த ஒவ்வொரு பார்வையும் ஒரே கேள்வியை எழுப்பியது: ***"இவனுக்கு இன்னும் தெரியலையா?"*** *என்று.*

அந்த காட்சி... வழக்கம்போல் என் மொபைலை மேசைமீதே வைத்தேன். அது தான் என் கடைசி செயல் என்று எனக்குத் தெரியாது.

முதலாளி வந்தார்.

*ஒரே வரி மட்டும் "**நாளைல இருந்து நீ வேலைக்கு வர வேண்டாம்.***

இதுவரைக்கும் வந்ததுக்கான சம்பளம் உன் அக்கவுண்டுக்கு வந்துடும்."

அந்த ஒரு வரி... *ஒரு பட்டாம்பூச்சி இறக்கிற சத்தமில்லாத சப்தம் போல... நான் அதை கேட்டபடி நின்றேன். என் கால்கள் தரையைத் தொட்டிருந்தனவா என தெரியவில்லை.*

"சார்... சார்..." என்றேன். அவர் என் அருகே நின்று, ***என்னை பார்வையால் கூடக் கொஞ்சமாவது தொடாமல்****, லிஃப்டுக்குள் நுழைந்து, அவரது வெள்ளை கார் அந்த பாதையில் ஓர் ரேகையாக மாயமானது.*

நான் செய்வதறியாது அப்படியே சிலை போல் நின்றேன். **அலுவலகம் அமைதியாயிருந்தது,** அந்த அமைதி எனக்குள் கத்திக்கொண்டிருந்தது. ஆபீஸைப் பூட்டும் நேரம் வரை முதலாளி திரும்பி வரவில்லை. "நாளைக்கு வந்து பார்க்கலாம்" என்ற நம்பிக்கையற்ற எண்ணத்துடன் அங்கிருந்து ஒரு ராபிடோ புக் செய்து முருகன் கடைக்கு வந்தேன்.

"கொளத்தூர் போகணும். வண்டி எடுக்குறதுக்கு வரேன்னு சொன்னீங்களே?" என்று கேட்டேன்.

"11 மணிக்கு மேல போகலாம், இரு" என்றான் அவன் சாவகாசமாக.

மணி 12:15. முருகனோட ஹோண்டா பைக், என் வண்டி நிறுத்தியிருந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தது. அங்கே என் வண்டி நிறுத்தியிருந்த இடத்தில்...

முற்றும்

கூத்துகள் கட்டுகிறது

காலம்
எந்நேரத்தில்
எப்பாத்திரத்தில்
எவரையிருத்துமோ
யாரறிவர்?

ஆடரங்கில் நிற்பேனோ
அம்பலத்தில் அமர்வேனோ
பொருமுக எழினியொன்று
கனாவில் வந்து வந்து
மூடுவதும் திறப்பதுமாய்
யாததன் காரணம்
அறிந்திலேன்...
ஒப்பனைகளற்ற
முகத்தில்
ஒட்டிக்கொண்டிருக்கும்
இப்புன்னகையோடே
இவ்வாழ்வைக்
கடந்தால் போதும்
என்றாகிறது
வேறென்ன வேண்டும்!?

வித்யா மனோகர்
27-03-2025
#உலக_நாடக_நாள்!#

மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின் நூல் விலைப்பட்டியல்

Mob.: 7010997639

வ. எண்	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	200
	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்	
2.	உன்னோடு உரையாடுதல்	100
3.	காதல் மொழி	80
4.	பார்வையில் பூத்த நிலா	100
5.	தேனடையும் வரலாறு	100
6.	நுண்கலை மருத்துவன்	200
7.	தொடரும் புழுதிக்கால்கள்	100
	முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்	
1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	*தலைமை பொறுப்பேற்கலாம்*	*120*
2.	*இணையத் தமிழ்*	*150*
3.	*ஊடகச் சட்டங்கள்*	*250*
4.	*ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்*	*200*
5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*100*
6.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	*50*

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	*பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்*	*300*
11	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*300*

சமய விளக்க நூல்கள்

1	*சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)*	*300*
2	*விரதங்களின் விளக்கம்*	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*பயணக் கவிதைகள்*	*100*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக் கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
7.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
8.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)*	*300*
9.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*

10.	*Translating Tamil poetry*	*300*

சிறு கதை நூல்

1.	*அமராவதியின் காதல் - சத்யப்பிரபா*	*120*
2.	*ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)*	*100*
3.	*மகிழ் பேரின்பம் (poems)*	*200*
4.	*பொன் வேலி (poems) நூல்கள்*	*200*
5.	*திருக்குறள் கதைகள் - பகை மாட்சி*	*100*

தே.ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*Emerging Mallarism*	*100*
2.	*Festival of lord Indra*	*250*
3.	*Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)*	*200*
4.	*Re reading of Pallu literature (in print)*	*300*
5.	*Mallariyan Literature (in print)*	*200*
7.	*Frontyard without My Dad (Poem)*	*200*
2.	*Emerging Mallarism*	*100*

English Novel Part

1.	*Aranyani – Vijeni*	*300*
2.	*Genetic traits of Vengai anchor by Tamilmagan*	*250*
1.	*Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)*	*500*

Tamil Classics in English (Selected Poems)

1.	*Ainkurunuuru*	*200*
2.	*Kurunthokai*	*200*
3.	*Puranaanuuru*	*200*
4.	*Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)*	*300*
5.	*A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)*	*300*
6.	*Songs of Classic Tamil Poetess Avvai*	*300*

Didactic Literature

1.	*Naaladiyaar*	*200*
2.	*Aacharak Kovai*	*200*

Medievel Literature

1	*A peasant with two wives (Mukoodal Pallu)*	*300*
2	*A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)*	*300*
3	*One line guidelines in Tamil*	*200*

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	*200*
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	*200*

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	*200*

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	*300*

ஜோதிட நூல்கள்

1.	மேஷ ராசி சூட்சும ரகசியம்
2	ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்
3	நவரத்தினமும் உபரத்தினமும்
4	மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

திருமாலும் திருமுருகனும் உறையும் அழகர் மலை

பேராசிரியர் முனைவர் சந்திரிகா சுப்ரமண்யன்

மதுரைக்கு அருகில் அமைந்துள்ள மிகவும் பழைமையான திருக்கோயில் அழகர் மலையில் உள்ள சுந்தரராஜப் பெருமாள் திருக்கோயிலாகும் .அழகர் மலை எனும் கள்ளழகர் திருத்தலம் எப்பொழுது தோன்றியது என்ற சொல்ல முடியாத பழமை உடையது. தமிழகத்தின் பழமை வாய்ந்த விழாக்களில் ஒன்று, அழகர் ஆற்றில் இறங்கும் சித்திரைத் திருவிழாவாகும் .

மூன்று அழகர்கள்

மதுரையைச் சுற்றி மூன்று அழகர்கள் இருக்கிறார்கள். ஒன்று மாலிருஞ்சோலை அழகர். இன்னொன்று திருமோகூர் அழகர். மூன்றாவது மதுரையிலேயே இருக்கக்கூடிய கூடல் அழகர் -. **விழாக்களின் நகரம்**

தூங்கா நகரம் மதுரைக்கு "விழாக்களின் நகரம்" என்றும் ஒரு பெயர் உள்ளது. ஆண்டு முழுவதும் ஏதேனும் ஒரு விழா நடந்து கொண்டே இருக்கும். அப்படி நடக்கின்ற விழாக்களில் மிக முக்கியமான விழா, மதுரை மீனாட்சி அம்மன் கோயில் திருவிழா மற்றும் அழகர் வைகை ஆற்றில் இறங்கும் சித்திரைத் விழா. அழகர் ஆற்றில் இறங்குவதைக் காணுவதற்கு உலகெங்கிழும் இருந்து லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள். ***ஆற்றைப் பார்த்தாயா? எம் அழகரைப் பார்த்தாயா?*** என்ற சொலவடையும் உண்டு.

வேறு பெயர்கள்

அழகர்மலை, திருமாலிருஞ்சோலை, உத்யானசைலம், சோலைமலை, மாலிருங்குன்றம் , வனகிரி, விருஷபாத்திரி அல்லது இடபகிரி முதலிய வேறு பல பெயர்களாலும் அழைக்கப்படும். ரிஷபம் என்றால் காளை. கம்பீரமான காளை மாடுபோல இருக்கும் மலை என்று பொருள்.

எமன் சாபம் நீங்கிய தலம்

ஒரு சமயம் எமதர்மனுக்கு சாபம் ஏற்பட்டது. இந்த சாபத்தைப் போக்க பூலோகத்தில் தற்போது உள்ள அழகர் மலை விருசுபகிரி என்னும் இம்மலையில் தவம் புரிந்தார். இது ஏழு மலைகளை கொண்டது. எமதர்மனின் தவத்தை மெச்சி பெருமாள் காட்சி கொடுத்தார். பெருமாளின் திருவருளால் எமதர்மனின் சாபம் நீங்கிய இடம் இது. எமதர்மனின்

வேண்டுதலுக்கு இணங்க பெருமாள் இங்கே கோயில் கொண்டதாகப் புராணங்கள் சொல்கின்றன.

இறைவனின் கருணையைப் போற்றும் விதமாக எமதர்மன் பெருமாளிடம் தினமும் உங்களை ஒரு முறையாவது பூஜை செய்ய வரம் தர வேண்டும் என்று கேட்டார். பெருமாளும் அவ்வாறே வரம் தர, இன்றும் இக்கோயிலில் தினமும் அர்த்தஜாமப் பூஜையை எமதர்மனே நடத்துவதாக ஐதீகம்.

சுதபஸ் முனிவர் திருமாலின் சோலையில் உள்ள கங்கை ஆற்றில் நீராடும்போது துர்வாசகர் முனிவர் கோபமுற்று சுதபஸ் முனிவரை மண்டூகமாக தவளை மாறும்படி சாபம் விட்டனர். முனிவரின் சாபம் நீங்க வைகை ஆற்றில் மண்டூக வடிவில் நீண்ட காலம் தவமின்றி திருமாலால் சாபம் நீக்க பெற்றார். முனிவர் வழங்கிய உருவமே அழகர் மாலிருஞ்சோலை நம்பி என்றும் தமிழில் அழைக்கப்பட்டது. துர்வாச முனிவரிடமிருந்து சுதபஸ் முனிவர் பெற்ற சாபத்தைப் போக்க பெருமாள் கள்ளழகராகத் தோன்றியதாக நம்பப்படுகிறது.

நூல்கள் போற்றும் அழகர் மலை

அழகர் பற்றி தமிழ் நூல்களிலும் வடமொழிப் புராணங்களிலும் கூட பெருமை பேசப்பட்டிருக்கிறது. இங்கே உள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவை பற்றி வராக புராணம் , பிரம்மாண்ட புராணம், வாமன புராணம் , நயன புராணம் போன்றவற்றில் மிகவும் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அழகர் எழுந்தருளியிருக்கும் மலை, அழகர் அல்லது சுந்தரராஜரின் பெருமை, நூபுரகங்கையின் சிறப்பு போன்றவை வாமன புராணத்தில் சொல்லப்படுகின்றன

மூலவர் ஸ்ரீ பரமசுவாமி என்றும் அழைக்கப்படும் அழகர் பஞ்சாயுதங்களோடு இங்குக் காட்சியளிக்கிறார் .ஸ்ரீ தேவியும் பூதேவியும் இரு புறமும் நிற்க இவர் நின்ற திருக்கோலத்துடன் திவ்யாலங்கார சேவையில் இருக்கிறார்.மற்ற திருமால் தலங்களில் இருப்பது போல அல்லாமல் இங்கு மூர்த்தியின் கையிலுள்ள சக்கரம் பிரயோக நிலையில் (இயங்கத் தயார் நிலையில்) இருக்கிறது.

அழகர் கோயிலின் உற்சவ மூர்த்தி தமிழில் அழகர் என்றும் , அழகர் என்பதற்கு அழகானவர் என்று பொருள்படும்படி வடமொழியில் சுந்தரராஜர் என்றும் திருநாமங்களால் கொண்டாடப்படுகின்றார். திருமாலுக்கும், அவருடைய அவதாரமாகிய

இராமபிரான் போன்ற அவதார மூரத்திகளுக்கும் அழகர் என்னும் பெயர் பழைய தமிழ் நூல்களிலேயே வழங்கப்பட்டிருக்கிறது குறிப்பிடத்தக்கது .

ஒரு கல்வெட்டு , திருமாலிருஞ்சோலை ஆழ்வார் எனவும் இக் கோயிலில் உள்ள இறைவன் பெயரைக் குறிப்பிடுகிறது. பல கல்வெட்டுகள் திருமாலிருஞ்சோலை பரமசுவாமி என்ற பெயரைக் குறிப்பிடுகின்றன. கி.பி.1342 ல் எழுந்த விஜயநகர மன்னர் காலத்திய கல்வெட்டு ஒன்றில் இக்கோயிலின் கருவறை நாதர் அழகர் என்ற பெயரால் குறிப்பிடப்படுகிறார் . பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் அழகர் என்ற பெயரை மட்டுமே குறிப்பிடுகின்றன. பக்தர்களும் அழகர் என்றே வழிபடுகின்றனர்.

சோலைமலைக்கரசர் என்று திவ்ய பிரபந்தம் போற்றுகின்றது . வட மொழி புராணங்களில் அழகர் விருஷபாத்ரீசர் என்றும் விருஷபாத்ரிநாதர் என்றும் அழைக்கப்படுகிறார் . நித்தியோத்ஸவர் , நலம் திகழ் நாரணன் என்றும் அறியப்படும் அழகருக்கு வைணவ ஆகம விதிப்படி உற்சவங்களின் போது யாக சாலைக்கு எழுந்தருள யாகபேரர் என்ற மூர்த்தி தோற்றுவிக்கப்பட்டது. அந்த யாக பேரர் ,சுந்தரத் திருத்தோளுடையான் என்றும் பொதுவாக அழைக்கப்படுகின்றார். இரத்தினம், கல், தாமிரம், வெள்ளி, தங்கம் அல்லது மரம் ஆகியவற்றில் அமையும் மூர்த்தியாக கௌதுக பேரராகவும் அமைந்து ஏறு திருவுடையான் என்றும் அழைக்கப்படுவர் .

கோயிலின் தென்பிராகாரத்தில் மூலவர் சந்நிதிக்கு அடுத்தபடியாக கல்யாண சுந்தரவல்லி தாயார் சந்நிதி இருக்கிறது. கல்யாண சுந்தரவல்லி என்னும் பெயருக்கேற்ப தாயார் அழகிய தேவியாக விளங்குகின்றார். இத் தாயாருக்கு ஆறுகாலப் பூஜை நடைபெறும். இங்குப் பக்தர்களுக்கு மஞ்சள் பிரசாதம் வழங்குகின்றனர். அழகர் கோயிலைச் சுற்றி கருங்கல்லாலான மதில் சுவர் காணப்படுகின்றது. ஏழடுக்கு ராஜகோபுரத்தைக் கொண்ட இக்கோயில் ஒரு பெரிய கோட்டையால் சூழப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதி பாழடைந்துள்ளது.

கோபுரங்கள்

அருள்மிகு கள்ளழகர் கோயிலின் இராஜ கோபுரத்தைக் கட்டியவர் கிருஷ்ணதேவராயர். கோவிலின் இராஜ கோபுரம் கதவுகள் அடைக்கப்பட்டு அங்குப் பதினெட்டாம் படி

கருப்பண்ண சாமி சன்னதி அமையப் பெற்றுள்ளது. வலதுபுறத்தில் திருமலை நாயக்கர் **கட்டிய** பரமபத வாசல் கோபுரம் அமைந்துள்ளது. இக் கோபுரம் பாண்டிய மன்னர்கள் ஆட்சிக்கு பின் கட்டப்பட்டது. செலுவத்தூருடையர் காலிங்கராயர் கட்டிய தொண்டைமான் கோபுரம் பிரதான நுழைவு வாயிலாக அமையப் பெற்றுள்ளது. இக்கோயிலின் மூலவரின் வட்டவடிவக் கருவறைமேல் வட்ட வடிவில் அமைந்துள்ள விமானத்தைக் காணலாம். இவ்விமானத்துக்குச் சோமசந்த விமானம் என்பது பெயர். சோமனை - சந்திரனைப் போல வட்ட வடிவிலிருப்பதால் இப்பெயர் ஏற்பட்டதெனக் கொள்ளலாம்.

இக்கோயிலில் மூலவர் சுந்தரராஜப் பெருமாள் சன்னதிக்கு மேல் உள்ள தங்க விமானம் பாண்டிய மன்னன் வழங்கிய பொற்கிழியை கொண்டு பெரியாழ்வார் நிறுவினார் என்பது வரலாறு.

தல விருட்சம்

இக்கோயிலுக்குத் தல விருட்சம் ஜோதி மரமாகும்.

தீர்த்தங்கள்

அருள் மிகு கள்ளழக கோயிலின் முக்கிய தீர்த்தம் நூபுர கங்கை தீர்த்தம். அழகர் கோயிலிலிருந்து வடக்கு வாசல் வழியாக சென்றால் மலை மேல் எட்டு மைல் தூரத்தில் அமைந்துள்ள நூபுர கங்கை தீர்த்தத்தை அடையலாம்.அதன் உற்பத்தி இடம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதன் தீர்த்தம் யானை துதிக்கை போன்ற தடித்த , கோமுசியின் வழியாக, மாதவி மண்டபத்துக்குள் வந்தடைவதைப் பார்க்க முடியும். இத் தீர்த்தத்தில் இரும்புச்சத்தும் தாமிரச்சத்தும் அதிகம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இது நோய்களைத் தீர்க்கும் குணமுடையது. இத்தீர்த்தம் தெற்கு நோக்கி பாயும்போது சிலம்பாறு என்று பெயர் பெற்று, அழகர் அல்லது சுந்தரராஜரின் அடிகளை நீராட்டிக் கொண்டு, கடைசியாக ஏரிகளில் நிறைந்து வயல்களுக்கு வளமூட்டுகின்றது .

அபரஞ்சி என்னும் உயர்ந்த தங்கத்தினால் செய்யப்பட்ட இந்த மூர்த்திக்கு நூபுரகங்கை நீராலேயே திருமஞ்சனம் செய்யப் படுகின்றது. வேறு நீரால் அபிஷேகம் செய்தால் விக்கிரகம் கருப்பாக மாறிவிடுமாம் .

சித்திரைத் திருவிழா

கள்ளழகருக்குரிய திருவிழாக்களில் சித்திரைத் திருவிழா மிகவும் முக்கியமானது . மதுரை மீனாட்சிக் கோயிலில் தொடங்கும் சித்திரைத் திருவிழாவும் இவ்விழாவும் ஒரே சமயத்தில் நடக்கின்றன. திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்பு இந்த இரண்டு உற்சவங்களும் வெவ்வேறு மாதங்களில் நடந்தன. முன்பு அழகரின் உற்சவம் சித்திரை மாதத்திலும் மீனாட்சிக்கோயில் உற்சவம் மாசி மாதத்திலும் நடந்தன.

இதனால்தான் மாசி மாதத்தில் நடக்கும் இத் திருவிழாவில் மீனாட்சி சுந்தரேசுவரர்களுடைய இரதம் செல்லும் வீதிகளுக்கும் மாசி வீதிகள் என்று பெயர் ஏற்பட்டது. திருமலைநாயக்கர் காலத்திற்கு முன்பு அழகர் சித்திரை மாதத்தில் அலங்காநல்லூர் , தேனூர்வழியாக வந்து வைகை ஆற்றில் இறங்கி, வண்டியூரில் தங்கியிருந்து, மீண்டும் அழகர் மலையை சென்றடைவது வழக்கம். திருமலை நாயக்கர், இந்த இரண்டு விழாக்களையும் ஒன்றாகச் சேர்த்தால் இவ் விழா மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கருதி அப்படியே செய்தார். அந்த ஏற்பாட்டின் படியே இப்பொழுதும் நடந்து வருகிறது.

நாட்டுப்புறக் கதைகள்

சித்திரைத் திருவிழாவின் தோற்றம் குறித்த மதுரை வாழ் மக்களிடம் ஒரு நாட்டுப்புறக் கதை வழக்கில் உள்ளது. இக்கதைக்கு சாத்திர, புராண ஆதாரம் ஒன்றும் இல்லை. ஆகையால் பொதுவாக சைவ, வைணவ மதங்களை ஐக்கியப்படுத்தும் ஒரு முயற்சியாகவே இதைப் பார்க்க வேண்டும் . தன் தங்கை மீனாட்சிக்கும் சுந்தரேசுவரருக்கும் கல்யாணம் நடக்கப்போகும் செய்தியைக் கேள்விப்பட்டு திருமால், அத் திருமணத்தைப் பார்க்க தன் இருப்பிடத்தை விட்டு மதுரையை நோக்கி வருகிறார் என்பது கதை. அவ்வாறு வரும் அழகரை மக்கள் சென்று சேவிப்பார்கள், இதுவே எதிர் சேவை எனப்படும். இந் நிகழ்வு தல்லாகுளம் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோவிலில் நடைபெறும். அழகர் அங்கிருந்து அதிகாலையில் தங்கக் குதிரை வாகனத்தில் புறப்பட்டு வைகையை நோக்கிச் செல்வார். அவர் புறப்படும் முன்பு ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சூடிக்கொடுத்த நாச்சியராகிய ஆண்டாளின் மாலையைச் சாற்றிக் கொள்கிறார் .

தன் தங்கை மீனாட்சிக்கும் சுந்தரேசருக்கும் கல்யாணம் நடக்கும் செய்தியைக் கேள்விப்பட்டு வந்த அழகர், தங்கையின் திருமணத்தைக் காண முடியாமல் வைகை வடகரை வழியாக செல்கிறார் என்பது ஒரு கதை .

சுதபஸ் என்ற முனிவர், நூபுரகங்கையில் தீர்த்தமாடி, பெருமாளை நோக்கித் தவமிருந்தார். அந்தச் சமயத்தில் துர்வாச முனிவர் , தன் பரிவாரங்களோடு அவ்வழியாக வந்தார். பெருமாளையே நினைத்துக் கொண்டிருந்த முனிவர், துர்வாச முனிவர் வந்ததைக் கவனிக்காமலிருக்கவே ஆத்திரமடைந்த துர்வாசர் 'மண்டூகோ பவ' என சாபமிட்டார். உடனே தவளையாகிப் போன சுதபஸ், சாபவிமோசனத்துக்கு வழிகேட்டபோது, 'விவேகவதி தீர்த்தக்கரையில் (வைகை) நீ தவம் பண்ணிக்கொண்டிரு. சித்திரை மாதப் பௌர்ணமிக்கு மறுநாள் அழகர் அங்கு வந்து உனக்கு சாபவிமோசனம் கொடுப்பார்' என துர்வாசர். சொன்னதன் படி வைகைக் கரையில் தவம் பண்ணிக் கொண்டிருந்த சுதபஸ் முனிவருக்கு, விமோசனம் கொடுக்க அழகர் மதுரைக்கு வந்தார். இது இன்னொரு கதை .

அழகர் ஆற்றுக்குச் செல்லும் பொழுது முதலில் வெட்டிவேர் சப்பரத்திலும். பிறகு மைசூர் மண்டபத்துக்கு முன்பு ஆயிரம் பொன் சப்பரத்திலும் எழுந்து, பின் ஆற்றில் எழுந்தருள்வார். அங்கு எழுந்தளியதும் மதுரை வண்டியூர் வீரராகவப் பெருமாள் அவரை

எதிர்கொண்டு அழைக்கிறார். இந் நிகழ்வு அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் எனக் கொண்டாடப் படுகின்றது.

அழகர் வைகை ஆற்றின் வடகரை வழியாக வண்டியூருக்குப் போகிறார். அங்கு அன்றிரவு தங்கி இளைப்பாறிச் சந்தனக் காப்பு அலங்காரத்துடன் மறுநாள் காலை சேஷ (நாக) வாகனத்தில் எழுந்தருளி தேனூர் மண்டபத்தை அடைகிறார். அங்கு தங்கக் கருட வாகனத்தில் காட்சி கொடுத்து மண்டூக மகரிஷிக்கு மோட்சமளிக்கிறார். பிறகு அன்றிரவு ராமராயர் மண்டபத்தில் தசாவதார சேவை நடக்கும். மறுநாள் மாலை அழகர் மோகனாவதார கோலத்தில் ஆனந்தராயர் பல்லக்கில் புறப்பட்டு இராமநாதபுர சேதுபதி மண்டபத்துக்கு வருகிறார்.

இங்கிருந்து அதிகாலை இரண்டு மணியளவில் கள்ளழகர் திருக்கோலத்துடன் பூப் பல்லக்கில் புறப்படுகின்றார். மறுநாள் காலையில் அழகர் அப்பன்திருப்பதிக்குச் சென்று அழகர் மலையை அடைவார்.

இதிகாச புராணங்களில் அழகர்

வால்மீகி இராமாயணம், வியாசர் எழுதிய மகாபாரதம், சுகரின் மகாபாகவதம் முதலிய வடமொழி இதிகாச புராணங்களில் அழகர் மிகவும் போற்றப்படுகிறார். வால்மீகி முனிவர் இராமாயணத்தில் இராமனும், இலக்குவனும், சீதை சித்திரகூட மலையில் தங்கியிருந்த கட்சியை வர்ணிக்கும்போது, அம்மலையின் பெருமைக்கு அழகர் திருமலையை உவமையிட்டுக் குறிப்பிடுகிறார் வால்மீகி முனிவர்.

மகாபாரதத்தில் வனபர்வத்தில் தருமபுத்திரர் அழகர்மலைக்கு யாத்திரை மேற்கொண்டு வந்தது வியாச முனிவரால் குறிப்பிடப்பட்டுள்ளது. புலத்தியர் பீஷ்மருக்குச் சொன்ன தீர்த்த வருணனையை நாரதர் பீஷ்மருக்கு விளக்கியபோது, அழகர் மலை விருஷப பர்வதம் என்றும், பாண்டிய தேசத்தில் உள்ளதென்றும் கூறுகிறார்.

பிரம்மாண்ட புராணம் குப்ஜ பாண்டியனுடைய செய்திகளையும் விரிஷபாத்ரியின் மகாத்மியத்தையும் நூபுரகங்கையின் சிறப்புகளையும் கூறுகிறது. மற்றும் வராக புராணத்திலும் இம்மலையின் பெருமையும் இதிலுள்ள தீர்த்தங்களின் பெருமையும் விளக்கப்படுகின்றன. அர்ச்சுனன் இங்கு தீர்த்தயாத்திரை மேற்கொண்டு வந்ததாக ஆக்நேய புராணம் கூறுகின்றது. இதில் 'ஹாலாஸ்ய (மதுரை) தலத்திற்கு வடக்கே சுந்தரராஜர் எழுந்தருளியுள்ள விருஷபாத்ரி, மிகப் பெருமை வாய்ந்தது' என்று கூறப்படுகிறது. இந்த தலத்தின் பெருமை பற்றி வில்லிபுத்தூரார் தல புராணத்திலும், ஜகன்னாத க்ஷேத்திர மகாத்மியத்திலும், சனத்குமார சம்ஹிதை, பிரம்ம சம்ஹிதை போன்ற புராணங்களிலும் சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

கோதாபரிணயம் என்னும் வட மொழி நூலில் பெரியாழ்வார் மகள் கோதை எனும் ஆண்டாளுடன் இத் திருமாலிருஞ்சோலை மலைக்கு வந்ததாகவும் , தன் மகளுக்கு இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமாளின் பெருமையைச் சொன்னதாகவும் குறிப்பிடப்படுள்ளது

இராமானுசருடைய அந்தரங்க சிஷ்யரான ஸ்ரீவத்சாங்கர் என்ற இயற் பெயர் கொண்ட கூரத்தாழ்வார் மிகுந்த தனவந்தனாகவும், ஞானம் பொருந்தியவராகவும் காஞ்சிபுரத்தை அடுத்த கூரம் என்னும் ஊரில் வாழ்ந்தவர். இராமானுசரை விட எட்டு வயது மூத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது மனைவியின் பெயர் ஆண்டாள் . இவருடைய இரண்டு பிள்ளைகள் பராசரப்பட்டர், வியாசப்பட்டர். உறையூர்ச் சோழன், இராமானுசரைக் கைது செய்ய ஆணையிட்டான். கூரத்தாழ்வார் தம் குருவைப்போல் வேடம் தரித்துக்கொண்டு அரசனிடம் சென்றார். முடிவில், அரசன் ஆணையால் கூரத்தாழ்வாரின் கண்கள் தோண்டப்பட்டன. கண்களை இழந்து திருமாலிருஞ்சோலைக்குப் புகலிடம் தேடித் தமது குடும்பத்துடன் வந்து தங்கியிருந்தார் பன்னிரெண்டு ஆண்டுகள் இதே நிலையிலேயே இம் மலையில் வாழ்ந்து வந்தார்.

கூரத்தாழ்வார் அழகர் மீது 'சுந்தரபாகுஸ்தவம்' என்ற துதிநூலை இயற்றியிருக்கிறார் . அதில் ஸ்ரீராமநுசருடைய தரிசனத்தை தாம் அடையும் நாளைத் தந்தருளுமாறு வேண்டினார் . அவ்வாறே கூரத்தாழ்வான் விரைவில் திருவரங்கம் சென்று இராமாநுசரைக் கண்டு கண்ணொளியும் பெற்று மகிழ்ந்தார்

தமிழில் முருக இலக்கியமான கந்தபுராணத்தில் , ''முத்திதரு பேரழகர் திருமலை'' என்றும்' பழமுதிர்ச்சோலை' என்றும் இம்மலை சிறப்பிக்கப் படுகின்றது.

வைணவப் பெரு நூலாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் , பெரியாழ்வார் , ஆண்டாள் , நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் , பூதத்தாழ்வார் , பேயாழ்வார் ஆகிய அறுவர் இம்மலையையும் அழகரையும் பற்றிப் பாடிய பாடல்கள் நூற்றி இருபத்து எட்டு இருக்கின்றன.

பழம் தமிழ் இலக்கியமான பரிபாடலில் இளம்பெருவழுதியார் இம் மலையை ''மாலிருங்குன்றம் ''என்றும் இதனை மக்கள் தொழுகின்றனர் என்றும் கூறுகிறார் . பரிபாடல், 'இத் திருமலையை திருமாலின் திருமேனியாகக் கருதி இம்மலை நோக்கி மக்கள் தொழுகின்றனர்' என்றும் சிறப்பித்துக் கூறுகின்றது.

சிலப்பதிகாரத்தில் அழகர்மலை தீர்த்தங்கள்

இளங்கோ அடிகள் படைத்த சிலப்பதிகாரம் இம்மலையில் உள்ள திருமாலைப் பற்றியும் தீர்த்தங்களைப் பற்றியும் விரிவாக பேசுகின்றது. கண்ணகியுடன் மதுரைக்கு வந்து கொண்டிருந்த கோவலன், வழியில் கவுந்தியடிகளைச் சந்தித்து அழகர் மலையின் பெருமைகளையும் பற்றி அறிந்து கொள்கிறான் .

கவுந்தியடிகள் கோவலனிடம் ,

"அவ்வழி படரீர் ஆயின், இடத்து
செவ்வழி பண்ணிற் சிறைவண்டு அரற்றும்
தடந்தால் வயலொடு தண்பூங் காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்து செல்குவிர் ஆயின்" எனவும் ,

"இடப்பக்கமாக உள்ள காட்டு வழியே போனால் நீங்கள் திருமால் குன்றத்தையடைவீர்கள் . அங்கே ஒரு சுரங்கவழி இருக்கிறது. அவ்வழியில் மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. அவை 'புண்ணிய சிரவணம்' , 'பவஹாரிணி', 'இட்டசித்தி' என்பன. புண்ணிய சிரவணத்தில் நீராடினால் இந்திரனால் எழுதப்பட்ட ஐந்திர வியாகரணம் என்னும் இலக்கண நூலறிவை நீங்கள் பெறுவீர்கள் , பவஹாரிணியில் மூழ்கினால் பழம் பிறப்பைப் பற்றிய அறிவுண்டாகும் . இட்டசித்தியில் நீராடினால் நினைத்தவை எல்லாம் கைகூடும் . இச்சுரங்க வழியில் நீங்கள் செல்ல விரும்பி, இப்பயன்களை அடையக் கருதினால் , அம்மலையில் உள்ள திருமாலின் திருவடிகளை மனம் ,மெய் ,மொழி ஆகிய மூன்றாலும் தொழுது அம் மலையை மும்முறை வலமாக வரவேண்டும் ." என்று சொன்னதுடன், தொடர்ந்து

"பிறகு அம்மலையில் உள்ள சிலம்பாற்றின் கரையில் வரோத்தனம் என்ற ஒரு பெண் தெய்வம் உங்கள் முன் தோன்றி, 'இம்மைக்கும் , மறுமைக்கும் , மட்டுமன்றி எக்காலத்துக்கும் பேரின்பம் தருவது யாது?' எனக் கேட்பாள். அக் கேள்விக்கு நீங்கள் விடையளித்தால் அத்தெய்வம் உங்களுக்குச் சுரங்க வாயிலைத் திறந்துவிடும் பிறகு அதன் வழியே சென்றால் மற்றொரு இரட்டைக் கதவுடைய வாயில் தெரியும். அதனைக் கடந்து சென்றதும் , மற்றொரு தெய்வம் வந்து, 'அழியாத இன்பம் எது?' என்று கேட்கும். அதற்குரிய விடையை அளித்தால் அவள் உங்களை மேற்கூறிய மூன்று பொய்கைகளுக்கும் அழைத்துச் செல்வாள் ." எனவும் சொல்கிறார். மூன்று பொய்கைகளுக்கும் அடைந்த பிறகு "பிறகு நமசிவாய - பஞ்சாட்சரம் (ஐந்தெழுத்து) - , நமோ நாராயணா எனும் அட்டாட்சரம் (எட்டெழுத்து) ஆகிய மந்திரங்களில் இரண்டில் ஏதாவது ஒன்றை ஓதி, அப் பொய்கைகளில் மூழ்கினால், தவம் செய்தவர்களுக்கும் கிடைக்காத பலன்கள் உங்களுக்குக் கிட்டும் . அவற்றை நீங்கள் விரும்பவில்லை என்றாம மலை மீது நின்ற திருக்கோலத்தோடு எழுந்தருளியுள்ள திருமாலின் திருவடிகளைத் தியானியுங்கள். அப்பொழுது அவரது கருடக்கொடி கட்டிய கொடிமரம் உங்கள் கண்முன் தோன்றும். அவ்வளவில் உங்கள் பிறவித் துன்பம் நீங்கும். பிறகு நீங்கள் பரமபதம் அடைவது உறுதி என்ற துணிவுடன் மதுரைக்குச் செல்லலாம்." என்று முடிக்கிறார்.

"விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபில் புண்ணிய சரவணம், பவகாரணியோடு
இட்டசித்தி எனும் பெயர் போகி விட்டு நீங்கா விளங்கிய பொய்கை முட்டாச்
சிறப்பின் மூன்றுள ஆங்கு'

என்று மூன்று பொய்கைகள் இருப்பதாகவும் கவுந்தியடிகள் கூறுகிறார். அப்படி சிலப்பதிகாரத்தில் கவுந்தியாடிகள் சொல்லிய மூன்று தீர்த்தங்களும் எவை என்று

இப்போது தெரியவில்லை. இதன் மூலம் சிலப்பதிகாரத்திற்கு முன்பே ஆழகர் கோவில் அமைக்கப்பட்டது என தெரியவருகிறது.

முருகனும் அழகர் மலையும்

முருகனுக்குரிய ஆறு படை வீடுகளில் முருகனின் ஆறாம் படை வீடு சோலைமலை மேலிருக்கும் கோயில். நூபுரகங்கைக்குப் போகும் வழியில் முன்பு வேல் பொறித்த சிலை ஒன்றை மக்கள் வழிபட்டு வந்தனர். கல்லால் ஆகிய வேலுக்கு தனிச்சிறப்பு உள்ளது. அதுவே பழமுதிர்சோலை மலையாகிய ஆறாவது படைவீடு என்று வணங்கப்பட்டது.

வள்ளி , தெய்வானை, முருகன் ஒரே பீடத்தில் அருகருகே ஒரே கருவறையில் உள்ளனர். பழமுதிர்சோலையில் மூலவராக உள்ள முருகப்பெருமான் ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களும் கொண்டு நின்ற திருக்கோலத்தில் இருபுறமும் வள்ளி, தெய்வயானை இருக்க காட்சியளிக்கின்றார். ‘‘

‘ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுகம் ஆறிரண்டு விழியோனே
சூரர்கிளை மாளவென்மற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே!’
என்றும்

‘ஆயிர முகங்கள் கொண்ட நூபுர மிரங்கு கங்கை
ஆறமர லந்தலம்பு துறைசேர...
சோதியின் மிகுந்த செம்பொன் மாளிகை விளங்குகின்ற
சோலைமலை வந்துகந்த பெருமாளே...’

என்று நூபுரகங்கையையும் சோலை மலையையும் இணைத்து முருகனைப் பாடுகிறார் அருணகிரிநாதர்.

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் , ‘’பலவுடன் வேறு பல்துகிலின் நுடங்கி அகில் சுமந்து....

இழுமென இழிதரும் அருவிப், பழமுதிர் சோலை மலைகிழவோனே" என வளம் பொருந்திய சோலை மலையையும் அதில் உறையும் முருகனையும் வருணித்துள்ளார்.

ஔவைக்கு பழம் தந்த திருவிளையாடல்

முருகன் மேல் அதிக பக்தி கொண்டவர் ஔவையார் . மதுரை அருகே சென்று கொண்டிருக்கும் போது நீண்ட தூரம் நடந்த வந்த களைப்பில் ஒரு மரத்தடியில் சென்று அமர்கிறார். அப்போது மேலே ஒரு சிறுவன் இருந்தான். இதை கண்ட ஔவை 'சிறுவனே ! நீ இங்கே என்ன செய்கிறாய்? என்று கேட்க அச்சிறுவன் நான் ஆடு மேய்க்க வந்தேன் இங்குள்ள நாவல் பழம் மிகவும் சுவையாக இருக்கும் என்று பறிக்க வந்தேன் என்று கூறினான்.

முருகன் ஔவையிடம் , 'உனக்கும் ஒரு பழம் தரவா? என்று கேட்க ஔவையும் 'சரி, கொடு' என்று சொல்ல , அதற்கு அச் சிறுவன் 'சுட்ட பழம் வேண்டுமா? இல்லை சுடாத பழம் வேண்டுமா? 'என்று கேட்டான். அதற்க்கு அர்த்தம் தெரியவில்லை ஔவைக்கு, அதை அவனிடம் காட்டிக் கொள்ளாமல் 'சுடாத பழம்' என்று கூற, சிறுவன் மரத்தை ஆட்டினான். அப்போது கீழே விழுந்த பழத்தை எடுத்து மண்ணை ஊதிவிட்டு சாப்பிட முயன்ற போது, 'உனக்கு நான் சுடாத பழம் தானே கொடுத்தேன், அதை ஏன் ஊதி சாப்பிடுகிறாய்?' என்று கேட்டான் அச்சிறுவன்.

இதை கண்ட ஔவை 'நீ மிகுந்த புத்திசாலியாக இருக்கிறாயே ,நீ யார்? என்று கேட்க, அச் சிறுவன் சிரித்து கொண்டே முருகனாய் மாறியது ஔவையை வியப்பில் ஆழ்த்தியது

முருகன், ஔவையாரிடம், ''சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?'' என்று கேட்டு, திருவிளையாடல் நடத்தியது இந்த நாவல் மரத்தின் மேல் தான் என்பது நம்பிக்கை .ஏனைய நாவல் மரங்கள் விநாயக சதுர்த்தியின் போது பழுக்கும். இங்குள்ள நாவல் மரமோ கந்தசஷ்டியின் போது பழுக்கும் இயல்புடைதாம் .முருக பக்தர்கள் மலை ஏறி முருகனை தரிசிப்பதோடு கோயிலின் அருகில் இருக்கும் நாவல் மரத்தையும் தரிசித்து வருகிறார்கள் பக்தர்கள்.

இங்குள்ள முருகனின் கோயில் இருக்கும் மலை அடிவாரத்தில் திருமால் உறையும் அழகர் கோவில் உள்ளது. இது 108 திவ்ய தேசத்தில் ஒன்று ஆகும். இங்கு மருகன்

திருமுருகன் , மாமன் திருமால் அருகருகில் இருக்கிறார்கள் . மலை மேலே முருகன் குறிஞ்சிக் கடவுள், மலை அடிவாரத்தில் உள்ள காட்டில் திருமால், முல்லை நிலக் கடவுள் உறைவது பக்தர்க்கெல்லாம் பெருவரம்..

அழகர் மலைக் கல்வெட்டுகள் :

அழகர் மலையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சமணர் வாழ்விடங்களும், தமிழிக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. சமணர்கள் வாழ்விடங்களைப் பல்வேறு வணிகர்கள் அமைத்துத் தந்தனர் என்பதை இங்குள்ள தமிழிக் கல்வெட்டுகளால் அறியலாம். இத்துடன் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டால் 'அச்சணந்தி' என்னும் சமணத்துறவி இங்கு வாழ்ந்ததாக அறிய முடிகின்றது.

இங்கு மொத்தம் பதின்மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ஐந்து கல்வெட்டுக்கள் மதுரையை சார்ந்த வணிகர்கள் செய்த கொடை பற்றிக் கூறுகின்றன. இவற்றுடன் சேர்த்து பிற அனைத்துமே சமணத் துறவிக்குச் செய்து கொடுத்த படுக்கை குறித்தே பேசுகின்றன. இதில் படுக்கையைக் குறிக்கும் பாழி என்ற சொல் இடம்பெறாத கல்வெட்டுக்களும் உள்ளன. இச்சொல் இல்லாவிடினும் சமணர் படுக்கைகளிலேயே இக்கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றிருப்பதால் இவை சமண முனிவருக்கென அமைக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் என்று கொள்வது தவறாகாது.

ஓவியங்கள்

அழகர் கோவிலில் பல ஓவியங்களும் காணப்படுகின்றன. அவை செஞ்சாந்து கொண்டு வரையப்பட்டவை என்றாலும் கூட, அவை அனைத்தும் ஒரே காலகட்டத்தில் வரையப்பட்டவை அல்ல. ஓரிரு இடங்களில் சில ஓவியங்கள் கருப்பு நிறத்தில் வரையப்பட்டு காலத்தால் அழிந்து போன தடங்கள் உள்ளன.

இங்கே இருக்கும் ஓவியங்களில் மிகவும் சிறப்பான ஓவியம் ஒன்று உண்டு. ஒரு மனிதனை குனிய வைத்து ஒரு பெரிய வாளால் கழுத்தை வெட்டி பலியிடுவது போல் இருக்கும் ஒரு ஓவியம் . வாள் இருப்பதனால் இரும்புக் காலப் பண்பாடு என்று உறுதியாக சொல்லலாம். அதாவது ஏறத்தாழ 4000 வருடப் பழைமையை உறுதி செய்யலாம் .

ஆழ்வார்கள்

ஆழ்வார்கள் அழகர் கோவிலுக்கு வந்து மங்களாசாசனம் செய்திருக்கிறார்கள். அவர்களுள் அறுவர் சோலைமலையைப் பற்றியும் அழகரைப் பற்றியும் நூற்று இருபத்து எட்டு பாசுரங்களில் பாடியிருக்கிறார்கள் . அவையெல்லாம் நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்று சொல்லப்படுகிற வைணவர்களின் தமிழ் வேதத்தில் இருக்கின்றன. வைணவ ஆழ்வார்களுள் சிலரின் காலத்தை, கலியுகத்திற்கு முந்திய யுகங்கள் என்றும் சிலர் எண்ணுவதால் இந்தத் தலத்தின் பழமை உறுதியாகின்றது.

பெரியாழ்வாரும் திருமாலிருஞ்சோலையும் :

பெரியாழ்வார் மகள் ஆண்டாள்,

''எழில் உடைய அம்மனைமீர்!
என்அரங்கத்து இன்னமுதர்
குழல் அழகர் வாய் அழகர் கண் அழகர் கொப்பூழில்
எழு கமலப் பூ அழகர் எம்மானார்
என்னுடைய கழல் வளையைத் தாமும் கழல் வளையே ஆக்கினரே''

என்று வர்ணிக்கும் வண்ணம் மிகுந்த அழகுடையவர் அழகர்.

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் 'விஷ்ணு சித்தர்' எனும் பெரியாழ்வார். அவர் ஆண்டாளின் வளர்ப்பு தந்தை. ஆண்டாளை அரங்கனுக்கு அர்ப்பணித்த பின்னர் வில்லிபுத்தூருக்குத் திரும்பிச் செல்லவில்லை. தான் விரும்பிய திவ்விய தேசமான திருமாலிருஞ்சோலையில் தங்கி அழகருக்குப் பாமாலையோடு பூமாலையும் புனைந்து மகிழ்ந்தார்.

பெரியாழ்வார் தம்முடைய திருமொழியை நிறைவு செய்து அழகர்மலை கோயிலில் குடிகொண்டுள்ள இரண்டு கோலங்களைப் பார்த்தே திருப்பல்லாண்டு பாடினார் . அவருடைய நினைவிடத்தில் திருமண்டபம் எழுப்பி நந்தவனமும் அதைச் சுற்றிலும் அமைக்கபபட்டிருப்பதைக் காணலாம் .அழகர் மலையின் அழகினைப் பெரியாழ்வார் பலவாறு போற்றிப் பாடுகின்றார். அழகர் மலையும் வடவேங்கடம் போல ஏழு மலைகளாக அமைந்திருப்பதைக் காட்டுகிறார்.

'பல பல நாழும் கொல்லி பழித்த சிசுபாலன் தன்னை
அலை வலைமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை
குலமலை கோலமலை குளிர் மா மலை கொற்ற மலை
நீலமலை நீண்டமலை திரு மால் இரும் சோலை யதே'

அம் மலைகள்

1. அலங்காரன் மலை
2. குல மலை
3. கோல மலை
4. குளிர் மாமலை
5. கொற்ற மலை
6. நீல மலை
7. நீண்ட மலை

இந்த ஏழு மலைகளிலும் அமைந்த ஆறுகளையும் சுனைகளையும், பொழில்களையும் பெரியாழ்வார் ஆயிரம் ஆயிரமாகக் காட்டுகிறார்.

"ஆயிரமாறுகளும் சுனைகள் பல ஆயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்
சோலையதே"

அழகர் மலைக்கு அணியாகத் திகழும் நூபுரகங்கை என்ற சிலம்பாற்றினைச் சிறப்பாக வருணிக்கிறார் . தேவ மாதர்கள் பாதங்களில் அணிந்த சிலம்புகள் ஒலிக்கும் படி நூபுரகங்கையில் இறங்கிக் குடைந்து நீராடி மகிழ்கிறார்களாம்.

"சிலம்பார்க்க வந்து தெய்வ மகளிர்களாடும்
சிலம்பாறு பாயும் தென் திருமாலிருஞ் சோலையே"

என்று திருப்பல்லாண்டு பாடிய பெரியாழ்வார் அழகர் மலையில் வாழ்கின்ற குறிஞ்சி நில மக்களான குறவர்களும் அழகருக்குப் பல்லாண்டு பாடுவதைக் கேட்டு மகிழ்கிறார். குறிஞ்சிக் குறவர்கள் திணை நிலக் கடவுளான முருகனைப் போற்றாது அம் மலைக்குரிய தெய்வமானகள்ளழகரையே போற்றினர். நிலத்தை அகழ்ந்து கிழங்கைத் தோண்டியெடுத்து அதை அவித்து அழகருக்குக் காட்டி "உன் பொன்னடி வாழ்க' என்று வாழ்த்திய பிறகு அதை யாவரும் கூடிப் பிரசாதமாக மதித்து உண்டனர் என்பதை .

"புனைத்தினைக் கிள்ளிப் புது அவிகாட்டி உன்
பொன்னடி வாழ்க என்று
இனக்குறவர் புதியதுண்ணும் எழில் மாலிருஞ் சோலை எந்தாய் ''

என்று காட்டுகிறார்.

இக் குறவர் எழுப்பும் பல்லாண்டு ஒலி அழகர்மலை எங்கும் நிறைந்து கேட்கின்றதாம்
.

"எல்லாவிடத்திலும் எங்கும் பரந்து பல்லாண்டொலி
செல்லா நிற்கும் சீர் தென் திருமாலிருஞ் சோலையே"

என்பது பெரியாழ்வார் திருவாக்கு.

மலைவாழ் குறவர்கள் மட்டுமன்றிப் பறவைகளும் வண்டுகளும் கூடத் திருமால் திருநாமங்களைச் சொல்லிக் கூவுகின்றன.

"காலை எழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்
மாலின் வரவு சொல்லி மருள் பாடுதல் மெய்ம்மை கொலோ?
சோலை மலைப் பெருமான் துவராபதி எம் பெருமான்
ஆலினிலைப் பெருமான் அவன் வார்த்தை உரைக்கின்றதே" என்றும் ,

இங்கு வண்டுகள் பாடுவதை

"அறுகால வரிவண்டுகள் ஆயிரநாமம் சொல்லி
சிறுகாலைப் பாடும் தென் திருமாலிருஞ்சோலை சோலையே"

என்றும் பெரியாழ்வார் குறிப்படுகிறார்.

அழகர் மலையில் காவல் பூதங்கள் வாழ்கின்றன; அவை அழகருடைய பகைவர்கள் நுழைந்தால் அவர்களைக் கொன்று பலி கொடுத்து குருதியைப் பருகி விடும் என்னும் செய்தியினையும்

"சந்தப் புடைத்துச் செங்குருதி கொண்டு பூதங்கள்
அந்திப்பலி கொடுத்து ஆவத்தனம் செய் அப்பன் மலை"

என்ற வரிகள் மூலம் பெரியாழ்வார் காட்டுகிறார்.

நம்மாழ்வாரும் அழகரும் :

திருவாய் மொழியில் திவ்விய தேசவிடயமான முதல் பதிகம் பெற்றவர் அழகரேயாவார் . திருமலைக்குரிய பதிகங்கள் :

'கிளரொளியிளமை கெடுவதன்முன்னம்,
வளரொளிமாயோன் மருவியகோயில்,
வளரிளம்பொழில்சூழ் மாலிருஞ்சோலை,
தளர்விலராகில் சார்வதுசதிரே.'

'நண்ணா அசுரர் நலிவுஎய்த நல்ல அமரர் பொலிவுஎய்த
எண்ணாதனகள் எண்ணும் நல்முனிவர் இன்பம் தலைசிறப்ப
பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடி
தென்னா என்னும் என்அம்மான் திருமாலிருஞ் சோலையானே'.

என நம்மாழ்வாரைக் கொண்டு திருவாய்மொழியைப் பாடிய பெருமை பெற்றவர் அழகரே,

தமிழ் வேதத்தை உலகிற்குத் தந்தவர் திருமாலிருஞ்சோலை எம்பெருமான் அழகர் ஆவார். பாமர மக்கள் அழகரைக் கள்ளழகர் என்று அழைத்து வருவதற்கும் நம்மாழ்வாரே அடிகோலியவர் ஆவார் . நம்மாழ்வார் அழகரின் பேரழகை நெஞ்சைக் கவரும் கள்வன் என

"'வஞ்சக்கள்வன் என்று "கொஞ்சிப் பேசுகிறார் அடியார் நெஞ்சைக் கவரும் கள்வன்
அழகரே!

என்று போற்றுகின்றார்.

‘திருமாலிருஞ் சோலை என்றேன், என்னத் திருமால் வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்’ என

தன் நெஞ்சில் நிறைந்த திருமால் என்றும் நம்மாழ்வார் பாடுகின்றார்.

அரங்கன் திருக்கோயிலும் அழகர் திருக்கோயிலும்

இத்தலத்தின் தனிச்சிறப்பு – திருவரங்கத்தின் அரங்கன் திருக்கோயிலும் , அழகர் மலைக் கோயிலும் அநேக ஒற்றுமைகளைக். கொண்டுள்ளதாகும். இவ்விரு கோயில்களும் உயர்ந்த கோட்டை, மதிற்சுவர்களை உடையன. இரண்டு தலங்களிலுள்ள நெல் சேர்களும் ஒரே தோற்றமுடையன. சுதர்சன வழிபாடு இரண்டு கோயில்களிலும் நிகழ்கின்றன. இரண்டு கோயில்களிலும் உள்ள பிரதான வாயில்கள் ‘‘ஆரியபடாள் வாசல் ’’ என்று அழைக்கப்படுகிறது.

ஆரியபடாள் வாசல்

கோயிலொழுகு என்றநூலில், ஆரியபடாள்வாசல் குறித்த செய்திகள்காணப்படுகின்றன. முன்பொருமுறை இன்றைய வங்காளமான கௌட தேசத்திலிருந்து ஒரு மன்னன் ஆபரணங்களைத் திருவரங்கத்துக்கு க் காணிக்கைகளாக கொண்டு வந்தான் அந்த ஆபரணங்களைக் கோயிலில் உள்ளோர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் அவன் அவற்றைக் கோயில் வாசலிலேயே விட்டு விட்டு அவற்றைப் பாதுகாக்க சில அந்தணர்களை விட்டுச்சென்றான் .

காவல் பணி புரிந்த அந்தணர்கள் பலகாலம் அங்கேயே தங்கியிருந்தனர் காலப்போக்கில் அவர்கள் நடந்துகொள்வதைப் பார்த்து அந்த அணிமணிகளை அரங்கனும் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் காவலிருந்த வாசல் அவர்கள் பெயராலே ‘ஆரிய படாள் வாசல்’ என்றழைக்கப்பட்டது. அரங்கன் எப்போதெல்லாம் ஆரிய படாள் வாசலைக் கடக்கிறாரோ அப்போது காவல் அந்தணர்களுக்கும் கௌட தேச மன்னனுக்கும் மரியாதை செய்யப்படுகிறது. இது போலவே அழகர் மலையிலும் ஆரிய படாள் வாசல் ஒன்றுண்டு.

ஆரியன் மண்டபத்தில் கொடுங்கைகள் மற்றும் இசைத் தூண்கள் உள்ளன. இசைத் தூணின் உச்சியிலுள்ள சிங்கத்தின் வாயிலில், சுழலும் நிலையில் கல் உருண்டை உள்ளது. ஆனால் அதை வெளியே எடுக்க முடியாது.

பிரசாதங்கள்

இரண்டு கோயில்களிலும் பிரசாதங்கள் தயாரிப்பதும் , விளக்கிடுவதும் தனி நெய் கொண்டே நடைபெறுகின்றன .

திருவிழாக்கள்

திருவிழாக்கள் நடைபெறுகின்ற முறைகள் ஒன்றாகவே உள்ளது. ''கோயில் ஒழுகு'' முறை இரண்டு கோவில்களிலும் பின்பற்றப்படுகிறது.

கோட்டைப்பகுதிகள்

அழகர் திருக்கோயில் இரண்டு கோட்டைகளால் சூழப்பட்டுள்ளது. கோயில் அமைந்துள்ள வெளிக்கோட்டை அழகாபுரிக்கோட்டை எனவும் ,உட்கோட்டை இரணியன் கோட்டை எனவும் வழங்கப்படுகிறது.

வெளிக்கோட்டை- அழகாபுரிக் கோட்டை

இதற்குள் பண்டைக்காலத்தில் பிள்ளைப் பல்லவராயன் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட அந்தணர் குடியிருப்பு ஒன்று இருந்தது. அது ''சாமந்த நாராயணச் சதுர்வேதி மங்கலம் '' என்ற பெயருடன் விளங்கியது. வெளிக்கோட்டைப் பகுதியில் சாலையின் கீழ்ப்புறத்தில் தேர் மண்டபம் உள்ளது. அத்தேரின் பெயர் அமைந்த நாராயணன் என்பதும் தேரோடும் வீதிகளில் ஒன்றின் பெயர் 'தியாகம் சிறியான் திரி வீதி' என்றும் கல்வெட்டுகளால் அறிய முடிகின்றது .

உட்கோட்டை -இரணியன் கோட்டை

நாட்டுப் புறப்பாடல்கள் உட்கோட்டையை நளமகாராசன் கோட்டை என்று குறிப்பிடுகின்றன. ''**மதில்சூழ் '' சோலைமலை** என்று இத்தலத்தினைப் பெரியாழ்வார் பாடியதால் அவர் காலத்தில் இக்கோயிலைச் சற்றி ஒரு மதில் இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. இங்குள்ள வெளிக்கோட்டை கி.பி. *16* ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை அரசாண்ட வானாதிராயர்களால் கட்டப்பட்டது. பெரியாழ்வார் குறிப்பிடும் மதில் இரணியன் கோட்டை எனப்படும் உட்கோட்டை மதிலாகும் .

இரணியன் கோட்டைப் பகுதி

தேர் மண்டபத்தைத் கடந்து சென்றால் உட்கோட்டையின் தெற்குவாசலான இரணியன் வாசலை அடையலாம் . இவ்வாசலை கடந்து உள்ளே நுழைந்தால் இடப்புறம் இருப்பது யானை வாகன மண்டபம் ஆகும். இதன் வடக்கே இராஜகோபுரம் அமைந்திருக்கிறது. இக்கோபுரவாசலில் உள்ள கல்வெட்டுகளில் கி.பி.*1518* ல் எழுந்த விசயநகர மன்னர் கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டே காலத்தில் முந்தியதாகும் . எனவே இக்கோபுரம் *16*ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டு இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இக்கோபுரவாசலை எப்போதும் அடைக்கப்பட்டு இருக்கும் இதற்கு முன்னர் பக்கச் சுவர்களோடு கூடிய இரட்டைக் கதவுகள் உள்ளன. இவையே பதினெட்டாம் படிக் கருப்பண்ணசாமியாக வழிபடப்படுகிறது. இதன் எதிரில் உள்ள பதினாறு கால்மண்டபம் ஆண்டார் மண்டபம் அல்லது சமய மண்டபம் எனப்படும் .

ஆடி, சித்திரை திருவிழாக்களில் இக்கோயில் ஆச்சாரியர் ஆண்டார் இம் மண்டபத்தில் வீற்றிருப்பார். இதற்கு வடபுறத்தில் கொண்டப்ப நாயக்கர் மண்டபம் உள்ளது. இங்கிருந்து மேற்கே திரும்பினால் வண்டிவாசல் என்ற வாசல் காணப்படுகிறது. இதன் வழியாக மேற்கு நோக்கிச் சென்றால் எதிராசன் திருமுற்றம் என்று வழங்கப்படும் பரந்த வெளியை அடையலாம் .

எதிராசன் திருமுற்றம்

எதிராசன் திருமுற்றம் என்பது ஸ்ரீ ராமானுஜரின் பெயரிட்டு வழங்கப்படுகிறது. இம்முற்றத்தின் நடுவில் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. பங்குனி உத்திரத்தில் இங்கு திருக்கல்யாணம் நடைப்பெறுகிறது.இம் மண்டபத்தில் விசயநகர மன்னர் காலச் சிற்பங்கள் அணிசெய்கின்றன. இத் திருமுற்றத்தில் மடங்கள் பல சமயப் பணியாற்றிய சிறப்புடையது .அவற்றுள் குறிப்பிடத்தக்கது இராமானுசர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட திருமாலிருஞ்சோலை ஜீயர் மடம் உள்ளது. இந்த நூற்றாண்டில் முற்பகுதி வரை தொடர்ந்து பல ஜீயர் பட்டங்களை ஏற்று பணிசெய்து வந்துள்ளனர்.

தொண்டைமான் கோபுரமும் சுந்தரபாண்டியன் மண்டபமும்

திருக்கல்யாண மண்டபத்தை அடுத்துள்ள தொண்டைமான் கோபுரம் செல்வத்தூர் காதியந்தர் மகனான தொண்டைமான் கட்டியது என்று கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இந்தக் கோபுரவாசலை அடுத்து உள்ளே காணப்படும் மண்டபத்தை சுந்தரபாண்டியன் கட்டினான் என்றும் இவனுக்கு பொன் வேய்ந்த பெருமாள் என்ற பெயர் இருந்ததாகவும் கல்வெட்டு தெரிவிக்கின்றது .

படியேற்ற மண்டபம்

கொடிக்கம்பத்தை அடுத்து கருட மண்டபம் , ஆரியம் மண்டபம் உள்ளன . இதற்கு படியேற்ற மண்டபம் என்று பெயர் வழங்கப்படுகிறது. இந்த மண்டபத்தை தோமராச அய்யன் மகனான இராகவராஜா என்பவர் கட்டியதாகும்.

மகா மண்டபம்

படியேற்ற மண்டபத்தை அடுத்துள்ள முனையதரையன் திருமண மண்டபம் இதற்கு அலங்காரத் திருமணமண்டபம் என்றும் ஒரு பெயர் வழங்கப்படுகிறது. இம்மண்டபத்தைக் கட்டியவன் மிளலைக்கூற்றத்து நடுவிற்கூறு புள்ளூர்க்குடி முனையதரையனான பொன்பற்றியுடையான் மொன்னைப் பிரான் விரதம் முடித்தப்பெருமாள் என்று கல்வெட்டுகளால் அறியப்படுகிறது.

இராய கோபுரம்

வசந்த மண்டபத்திற்குக் கிழக்கே சற்று தொலைவில் கட்டி முடிக்கப்படாமல் அரைகுறையாக ஒரு கோபுரம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. இதிலுள்ள ஒரு கல்வெட்டு விசயநகர மன்னர்களின் ஆறவீடு வமிசத்து அரசர்களைக் குறிப்பிடுகிறது. இதன் காலம் கி.பி.1646 ஆகும் .எனவே கி.பி.16ம் நூற்றாண்டு தொடங்கப்பெற்று பாதியிலேயே நின்று விட்டது என்று அறியலாம் . இதனை இராய கோபுரம் என்று அழைப்பார்கள்.

பதினெட்டாம்படிக் கருப்பணசாமி

கருப்பணசாமி என்னும் தெய்வம் கள்ளர்களுக்கு மிகவும் முக்கியமானது. இக்கோயிலில் பதினெட்டாம்படிக் கருப்பணசாமி வழிபாடு பெரிதாகக் கொண்டாடப்படுகிறது . இத்தெய்வம் வடக்கிலிருந்து கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் இதற்கு வடக்கு நோக்கி நின்றே பூஜைகள் செய்வார்கள்.

கருப்பணசாமியின் பல வித வடிவங்கள் உள்ளன ,பெரிய கருப்பன் ,சிறியகருப்பன் ,சண்டைக்கருப்பன் ,தோட்டிக்கருப்பன் , கும்மட்டிக்கருப்பன் ,பழைய கருப்பன் ஆகிய பெயர்களில் கருப்பண்ணசாமி வணங்கப்படுகிறார் .

பல வித வடிவங்களில் உள்ள அனைத்து கருப்பண தெய்வங்களுக்கும் தலையான தெய்வம் அழகர் மலையில் உள்ள பதினெட்டாம்படிக் கருப்பணசாமியே. இவருக்கு இங்கு கிருஷ்ண புத்ரன் என்றும் ஒரு பெயர் உண்டு. ஆனால் இவருக்கு இங்கே உருவம் இல்லை. இங்கு பதினெட்டாம்படி கோபுரக் கதவுகளையே கருப்பண்ணசாமி தெய்வமாக எண்ணிப் பூசைகள் நடக்கும். மற்ற இடங்களில் இவர் கைகளில் ஒரு கொக்கியும், கத்தியும், கதாயுதமும், ஈட்டி முதலியவையும் இருக்கும். காலில் செருப்பு அணிந்திருப்பார். இவரது தரிசனம் பயங்கரமாகவும், யுத்த பாவனையிலும் இருக்கும். இவரது பக்தர்கள் இவருக்கு மேலே சொன்ன பலவிதமான ஆயுதங்களையும் தொட்டி, செருப்பு போன்றவற்றை நேர்த்திக் கடனாகக் கொடுப்பார்கள்.

கோயிலில் உள்ள பதினெட்டாம்படி கதவுகளுக்குச் சந்தனம் , குங்குமம், கற்பூரம் முதலியவை பூசி, மாலை, புஷ்பம் முதலியவற்றால் அலங்கரித்துப் பூஜை செய்வார்கள்.

பொங்கல் , வடை, தேங்காய் முதலிய நெய்வேத்தியங்கள் இவருக்குப் படைக்கப்படும். விபூதி பிரசாதம் எல்லோருக்கும் கொடுக்கப்படும் . இப் பூசாரிகள் கோயில் பட்டர்கள் அல்லர் . குயவர் குலத்தைச் சேர்ந்த பூசாரி ஒருவர் தேங்காய்களை உடைத்து விபூதிப் பிரசாதம் கொடுப்பார் . இப் பதினெட்டாம்படிக் கதவு பிரம்மோற்சவ காலத்தில் சிறப்பு தரிசனத்துக்கு மட்டும் திறக்கப்படும். சில சமயங்களில் ஏதாவது பிரமாணம் செய்ய விரும்புகிறவர்களுக்காவும் கூட அது திறக்கப்படும் . ஆகையால் அழகர் கோயிலுக்குப் பிரதான வாசலாகிய இப்பதினெட்டாம்படி வாசல் பொதுவாக மூடப்பட்டே இருக்கும் .

பதினெட்டாம் படி கோயிலுக்கு வடக்கே உள்ள வண்டிவாசல் என்பதுதான் கோயிலுக்குள் போவதற்குள்ள வழக்கமான வழி, பல வழக்குகள் , விவகாரங்கள் முதலியவை இப்பதினெட்டாம்படி வாசலில் பிரமாணம் செய்து, தீர்க்கப்படுவது இப்பொழுதும் வழக்கமாக இருக்கிறது. தினந்தோறும் நூபுரகங்கையிலிருந்தே அழகருக்குக் கொண்டு வரப்படும் அபிஷேக தீர்த்தம் முதலில் இப்பதினெட்டாம் படியானிடம் வைக்கப்பட்டு அத் தீர்த்தம் மிகவும் பரிசுத்தமாக நூபுரகங்கையில் இருந்தே கொண்டுவரப்பட்டது என்று சத்தியம் செய்யப்பட வேண்டும் . பிறகுதான் அது அழகரது திருமஞ்சணத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இப் பதினெட்டாம்படியைப் பற்றி ஒரு கதை உண்டு. ஒரு சமயத்தில் மலையாளத்தைச் சேர்ந்த அரசன் ஒருவன் இவ்வழகர் மலையில் உள்ள சுந்தரராஜரைத் தன் தேசத்திற்கு எடுத்துக் கொண்டுபோய் வைத்துப் பூசை செய்ய நினைத்தான். அழகாபுரிக்கோட்டை அதிகக் காவலுடன் இருந்ததால், அவன் அழகரை எடுத்துக் கொண்டுப் போக முடியவில்லை. ஆகையால் அவன் ஒரு தந்திரத்தால் அழகரைக் கொண்டு போக வேண்டுமென்று எண்ணினான். ஆகையால் அவன் தன்னிடமிருந்த மந்திரத்திலும் தந்திரத்திலும் கைதேர்ந்த 18 பேர்களை இவ்விடத்திற்கு அனுப்பி எப்படியாவது அழகரைக் கொண்டுவரும்படி சொன்னான். அவர்கள் இங்கே வந்து தம் மந்திர சக்தியால் ஒருவர் கண்ணிலும் படாமல் அழகர் விக்கிரகத்தைக் கொண்டுபோக முயற்சி செய்தார்கள் . ஆனால் இது பலிக்கவில்லை. ஆகையால் அவர்கள் தங்களுடைய மந்திர சக்தியால் அழகருடைய கலைகளை (சக்தியை) இழுத்து வேறொரு விக்கிரகத்தில் வைத்து, தம்நாட்டில் அதை அமைக்க முயற்சி செய்தார்கள். ஆனால் அழகர் கோயிலில் இருந்த சில மந்திர தந்திர சாத்திர நிபுணர்களாகிய பட்டர்கள் இந்த சூழ்ச்சியைக் கண்டுபிடித்து, அந்தப் பதினெட்டுப் பேர்களையும் , பிரதான கோபுரவாசலில் பதினெட்டுப் படிகளின் கீழ் வைத்துப் புதைத்துவிட்டார்கள் .

அதன் பின் அந்த சூழ்ச்சிக்காரர்களுக்கு உதவியாக வந்த ஒரு தெய்வம் இனிமேல் தானும் அந்தக் கோபுர வாசலில் இருந்து காவல் காத்து கோயில் சொத்துகளை பத்திரமாக கவனித்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டு, அதற்காகத் தனக்குத் தினந்தோறும் அழகரின் அர்த்தஜாம நிர்மால்ய நைவேத்தியங்களைக் கொடுக்கவேண்டும் என்று பட்டர்களைக் கேட்டுக்கொண்டது. அதன்படி இப்பொழுதும் அத்தெய்வத்திற்கு அங்கே நிர்மால்ய நைவேத்தியம் கொடுக்கப்படுகிறது.

பதினெட்டாம்படி கருப்பண்ணசாமிக்கு உருவம் இல்லை. மூடப்பட்ட கதவு, குடம் குடமாய் ஊற்றி பூசப்பட்ட சந்தனம், கதவை அலங்கரிக்கும் அழகிய நிலை மாலை என கம்பீரமாக காட்சி தருகிறார் கருப்பண்ணசாமி. மிகப்பெரிய அரிவாள் மட்டும் உள்ளது. ஆண்டுதோறும் , ஆடி பவுர்ணமியை முன்னிட்டு அழகர் கோவிலில் உள்ள பதினெட்டாம்படி கருப்பண்ண சாமியின் சன்னதி கதவுகள் திறக்கப்பட்டு சந்தனம் சாத்தும் நிகழ்ச்சி நடைபெறும்.

அழகர் கோயிலை விட்டு வெளியே அழகர் எழுந்தருளும் போதெல்லாம் பதினெட்டாம்படிக் கருப்பண்ணசாமிக்கு முன் சேவை நடத்தி கற்பூர தீபாராதனை செய்யப்படுகிறது. திரும்பி உள்ளே எழுந்தருளும் போதும் இவ்வாறு செய்யப்படுகிறது.

ஒவ்வொரு நாளும் இரவில் அழகர் கோவிலைப் பூட்டி, சாவியை இந்தப் பதினெட்டாம்படிக் கருப்பனிடம் கொண்டு வைத்து விடுவார்கள். மறுநாள் காலை வரும் பட்டர் வந்து சாவியை எடுத்துக்கொண்டு செல்வார். இன்றும் அழகர், மதுரையில் நிகழும் மீனாட்சி கல்யாணத்துக்காகப் புறப்படும்போது அழகர் அவர் அணிந்துள்ள நகைகளின் பட்டியலை இக்காவல் தெய்வத்தின் முன்பு படித்துக் காட்டுவார்கள். அழகர் திரும்பும்போது, மீண்டும் அப் பட்டியலை கருப்பண்ணசாமியின் முன் படித்துக் காட்டுவார்கள் கோயிலையும் கோயில் சொத்துக்களையும் பராமரிக்கும் காவல் தெய்வமாக இவர் விளங்குகிறார். 'அரங்கன் சொத்து, அழகர் அங்கவடிவுக்கும் காணாது' என்ற சொலவடை மதுரைப் பகுதிகளில் உள்ளது. அழகர் கோயில் சொத்துகள் பெரும் களஞ்சியத்தைப் போன்றவை. கள்ளழகர் தங்கத்தால் ஆனவர். இப்படிப்பட்ட பெரும் செல்வத்தை காவல் காத்து வருகிறார் கருப்பசாமி.

இத்தெய்வத்தின் முன் ஒருவரும் பொய் சொல்லவும் துணியமாட்டார்கள் . ஆகையால் , பெரிய வழக்குகள் விவகாரங்களில் சம்பந்தப்பட்டவர்கள் உண்மை அறிய சத்தியம் செய்வார்கள். நீதிமன்றத்தார் வழக்கில் வாதி , பிரதிவாதிகளை கடைசி நேரத்தில் கூட இக் கருப்பணசாமி சந்நிதியில் சத்தியம் செய்யச் சொல்லி உண்மையைக் கண்டு பிடித்துக் கொள்ளும் வழக்கம் அண்மைக் காலம் வரை இருந்தது. கருப்பணசாமி சாமி கோயிலின் கதவுகள் ஒரு நிமிடம் மட்டுமே ஆண்டுக்கு ஒரு முறை திறந்து மூடப்படும்.

ஆன்மீக பின்புலம் இல்லாத மக்களுக்கும் கூட அழகர் என்றால் உள்ளம் கவர் கள்வன் தான்.

கதைகளின் வஞ்சம்

முனைவர் மெய் சித்ரா
தலைவர், தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், ஆங்காங்

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். (குறள் 676)

செயலை முடிக்கும் வகையும், வரக்கூடிய இடையூறும், முடிந்த போது கிடைக்கும் பெரும்பயனும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.
(மு வரதராசன்)

ஒரு காலத்தில் கதைகளை விரும்பும் ஒரு பையன் இருந்தான். அவனது பெயர் டோங் சின். ஒவ்வொரு இரவும் உறங்கும் போது அவனுக்குப் பிடித்த குடும்ப ஊழியரான பாக் என்பவரிடம் கதைகளைக் கேட்டான்.

டோங் சின் ஒரு நல்ல பையன். ஆனால் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. அவன் கேட்ட கதைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. அவற்றைத் தன்னிடமே வைத்துக் கொள்ள விரும்பினான். அதனால் ஒவ்வொரு இரவும் கேட்டுவிட்டு, "பாக், எனக்கு ஒரு வாக்குறுதி கொடுங்கள்," என்பான்.

"அது என்ன, சின்ன முதலாளி?" என்று பாக் கேட்டான்.

"என்னைத் தவிர வேறு யாரிடமும் இந்தக் கதைகளைச் சொல்லமாட்டாய் என்று வாக்கு கொடு. அவை இந்த அறையிலேயே தங்கும் என்று உறுதி கொடு."

"சரி, சின்ன முதலாளி," பாக் ஒரு பெருமூச்சுடன் கூறினான். "நான் வாக்கு கொடுக்கிறேன்."

ஆண்டுகள் சென்றன, டோங் சின் வளர்ந்தான். அவனுக்கு 15 வயதாய் இருந்தபோது, அடுத்த பள்ளத்தாக்கில் உள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அதே வயதுடைய மணப்பெண்ணை அவனுக்குத் தேர்ந்தெடுத்தார் அவனது தந்தை. வரவிருக்கும் திருமணத்தால், வீட்டில் உள்ள அனைவரும் உற்சாகமாய் இருந்தனர்.

கொரியாவில் அனைத்து மகன்களும் மகள்களும் திருமணம் ஆகும் வரை முடியைப் பின்னலிட்டுக் கொள்வர். மணமான பிறகு உச்சிக்கொண்டைப் போட்டுக் கொள்வர். அதனால், திருமணத்திற்கு முந்தைய இரவில், டோங் சினின் தந்தை தனது மகனின் நீண்ட

பின்னலைக் கழற்றினார். பின்னர் அவர் தனது தலைமுடியைப் போலவே இறுக்கமான உச்சிக்கொண்டையைப் போட்டார். அவரது மகனின் தலையில் மேல் முடிச்சு, குத்துவதற்காய் ஒரு துளையுடன் கூடிய மண்டை ஓட்டுத் தொப்பி ஒன்றை வைத்தார். அதற்கு மேலாய், மிகவும் லேசான, குதிரை முடி கண்ணி தொப்பியை வைத்தார்.

டோங் சின் மிகவும் பெருமைப்பட்டான். பல வருடங்களாய் அவன் இந்தத் தருணத்திற்காய் காத்திருந்தான். இப்போது அவன் ஒரு வாலிபனாய் ஆவதால்!

கடைசியில் திருமண நாளும் வந்தது. அதிகாலையில், டோங் சின் மற்றும் அவனது தந்தை மணமகள் வீட்டு விழாவிற்குச் செல்ல ஆயத்தமாயினர். மணமகள் வீட்டிற்கு அழைத்து வரப்படும் அடுத்த நாள் கொண்டாட்டத்திற்கு உதவுவதிலும் ஆயத்தமாவதிலும் அனைவரும் மும்முரமாய் இருந்தனர்.

எல்லோரையும் போல பாக் பணிகளைச் செய்த வண்ணம் இருந்தான். ஆனால் அவன் விரைந்து சென்றபோது, அவர் டோங் சின் அறையைக் கடக்க வேண்டியிருந்தது. அவன் திகைக்கும் வகையில், அறைக்குள், பல குரல்களின் முணுமுணுப்பு கேட்டது.

"இது என்ன? விசித்திரமாயுள்ளது," என்று அவன் தனக்குத்தானே கூறிக் கொண்டான். "சின்ன முதலாளி இப்போது அங்கு இல்லை, வேறு யாரும் இருப்பதற்கும் சாத்தியமில்லை."

அவன் காகித ஜன்னல் வரை சென்று, கவனமாய் ஒரு சிறிய துளையைச் செய்து, எட்டிப்பார்த்தான். அவன் அரண்டு போனான்.

காற்றில் ஆவிகள் நிரம்பி வழிந்தன—நூற்றுக்கணக்கில்! ஒன்றுடன் ஒன்று மேலும் கீழும் சுற்றி வந்தன. அறையில் பறப்பதற்கும் இடம் இல்லாத வகையில் பல ஆவிகள் திரண்டிருந்தன. அவை சிறிதும் மகிழ்ச்சியுடன் இருக்கவில்லை!

"மௌனம்!" ஆவிகளில் ஒன்று அழைத்தது. "ஒரே நேரத்தில் பேசுவதை நிறுத்துங்கள், இல்லையெனில் நாம் எதையும் செய்ய முடியாது."

முணுமுணுப்பு மறைந்தது. "அதுவும் சரி தான்," மற்றொரு ஆவி கூறியது. "இன்று பையனின் திருமணம், என்ன செய்வது என்று நாம் தீர்மானிக்க வேண்டும்."

"நாம் பழிவாங்க வேண்டும்!" என்றது இன்னொரு ஆவி. "கதைகளாகிய நம்மையெல்லாம் இந்த அறைக்குள் கட்டிப் போட்டதற்கு அவன் தண்டிக்கப்பட வேண்டும்."

பாக் மீண்டும் அரண்டு போனான். "இவை கதைகள்!" அவன் திகைப்புடன் கூறிக் கொண்டான். "அறையில் தங்கி இருப்பவை!"

"ஆம், அவன் தண்டிக்கப்பட வேண்டும்" என்று மற்றொரு ஆவி கூறியது. "ஆனால் எப்படி?"

"எனக்கு ஒரு யோசனை இருக்கிறது," மற்றொரு ஆவி கூறியது. ''நான் ஒரு விஷக் கிணறு இருக்கும் கதை. நான் ஏன் என் கிணற்றைச் சாலையோரம் வைக்கக் கூடாது? அவன் தண்ணீரைக் குடித்தால், மரணமடைவான்."

"அற்புதம்!" என்றது இன்னொரு ஆவி. ''நான் விஷம் கலந்த செம்புற்றுப் பழங்களைக் கொண்ட கதை. அவன் குடிக்கவில்லை என்றால், நான் அவற்றைச் சிறிது தொலைவில் சாலையோரமாய் வைக்கிறேன்.''

"நல்ல சிந்தனை!" என்றது இன்னொரு ஆவி. "நான் ஒரு சிவந்த எரியும் கங்கைக் கொண்ட கதை. வழியில் அவன் சாப்பிடாமலும் குடிக்காமலும் இருந்தால், மணமகள் வீட்டில் அவன் அடியெடுத்து வைக்கும் மிதியடியில் அதை வைப்பேன். அது அவனைப் பயங்கரமாய் எரித்துவிடும்!''

"இவற்றைச் செய்யலாம்," மற்றொரு ஆவி. "ஆனால் அவன் உங்கள் அனைவரிடமிருந்தும் தப்பித்துவிட்டால், நான் ஆயத்தமாய் இருக்கிறேன். நான் ஒரு கொடிய பாம்பைக் கொண்ட கதை. நான் அதை மணமகள் தூங்கும் பாயின் கீழ் மறைப்பேன். அவர்கள் படுக்கைக்குச் செல்லும்போது, அது இருவரையும் கடித்துக் கொன்றுவிடும்!

"இல்லை!" பாக் கத்தினான். கதவை நோக்கிப் பாய்ந்து திறந்தான். ஆனால் அங்கு இருந்தது. . . ஏதுமில்லை.

"நான் அதைக் கற்பனைச் செய்து பார்க்க முடியாது," என்று அவன் கூறினான். "அவை இன்னும் இங்கே இருக்க வேண்டும், என்னால் அவற்றைப் பார்க்க முடியவில்லை. ஆனால் - சின்ன முதலாளி? சின்ன முதலாளியை நான் காக்க வேண்டும்!''

திருமண ஊர்வலம் ஏற்கனவே கூடியிருந்த சாலைக்கு அவன் விரைந்தான். மணமகள் மகிழ்ச்சியுடன்திரும்பிச்செல்வதற்காய், நான்கு வேலைக்காரர்கள்தூக்கும்அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு - இரண்டு நீண்ட தூண்களுக்கிடையே வைக்கப்பட்டு இருந்தது. டோங் சின்னும் அவனது தந்தையும் சிறிய வெள்ளைக் குதிரைகளின் மீது அமர்ந்திருந்தனர். அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு, ஒரு வேலைக்காரன் முன்னால் நின்று கொண்டிருந்தான்.

பாக், டோங் சின் குதிரையின் கடிவாளத்தை வாங்கிக் கொண்டு, "இன்று உங்கள் குதிரையை நான் வழிநடத்துவேன், சின்ன முதலாளி!" என்று கூறி அந்த வேலைக்காரனை வெளியேற்றினான்.

"பாக்!'' என்றார் தந்தை. "உள்ளே போ! நாளைக்கு ஆயத்தமாக நீ இங்கே தேவை!"

"தயவுசெய்து, முதலாளி!" என்று பாக் கெஞ்சினான். " சின்ன முதலாளியின் குதிரையை அவரது திருமண நாளில் வழிநடத்த வேண்டும் என்பது என் அன்பான விருப்பம்!"

"பரவாயில்லை அப்பா?" என்று டோங் சின் கூறினான். "பாக் எங்களுடன் வருவதை நான் விரும்புகிறேன்."

"ஓ, சரி," என்று அவனது தந்தை முணுமுணுத்தார். பின்னர் டோங் சின் முன்னால் மற்றும் அவரது தந்தை பின்னால் செல்ல. அவர்கள் வரிசையாய் நின்று வெளியேறத் தொடங்கினர்.

அது வசந்த காலம். மலைகளின் மீது சாலை இளஞ்சிவப்பு, சிவப்பு மற்றும் வெள்ளை அசேலியாக்களுடன் வண்ணமயமாய் இருந்தது. சூழல் சூடாய் இருந்தது. டோங் சின் சாலையில் ஒரு கிணற்றைக் கண்டதும் நிம்மதியடைந்தான்.

"பாக், எனக்குத் தாகமாய் இருக்கிறது. அந்தக் கிணற்றிலிருந்து எனக்குக் குடிக்கக் நீர் கொண்டு வாருங்கள். அங்கே நீருக்காய் ஒரு சுரைக் கரண்டி இருக்கிறது பாருங்கள்.''

"சுரைக் கரண்டி!" என்றான் பாக் திகில் நிறைந்த குரலில். ''இல்லை, சின்ன முதலாளி! உங்கள் திருமண நாளில் நீங்கள் ஒரு பொதுவான சுரைக் கரண்டியிலிருந்து குடிக்க கூடாது! நாம் மணமகளின் வீட்டை அடையும் வரை காத்திருங்கள். அங்கு நீங்கள் பீங்கான் குடுவையில் குடிக்கலாம். அவன் வேகமாய் குதிரையுடன் கிணற்றைக் கடந்தான்.

டோங் சின் ஆச்சரியப்பட்டான். கட்டளைகளை அலட்சியம் செய்யும் வேலைக்காரனின் துணிவை! ஆனால் அவன் எதுவும் பேசவில்லை.

சிறிது நேரம் கழித்து, அவர்கள் ஒரு செம்புற்றுப் பழம் கொண்ட வயலுக்கு வந்தனர். "பாக், எனக்குத் தாகமாகவும் பசியாகவும் இருக்கிறது. இந்தச் செம்புற்றுப் பழங்களில் சிலவற்றை எனக்குத் தேர்ந்தெடுங்கள்.''

"இவை?" என்றான் பாக் அவநம்பிக்கை தொனியில். ''சின்ன முதலாளி, அவை மிகவும் சிறியவை! உங்கள் திருமண நாளில் நீங்கள் மிகப்பெரிய, சாறு நிறைந்த செம்புற்றுப் பழங்களை மட்டுமே உண்ண வேண்டும். உங்கள் மணமகள் வீட்டில் உங்களுக்குச் சிறந்தது கிடைக்கும்," என்று பதட்டத்துடன் கூறி விட்டு, அவன் அங்கிருந்து விரைந்து சென்றான்.

டோங் சின் திகைத்துப் போனான். பின்பக்கத்திலிருந்து அப்பா அழைப்பதைக் கேட்டான், "என்ன நடக்கிறது அங்கே?"

"ஒன்றுமில்லை, தந்தையே," டோங் சின் திரும்பக் கூறினான். அவன் பாக்கின் பக்கம் திரும்பி, ''என்ன செய்கிறாய்? நீ கீழ்ப்படியவில்லை என்பதை என் தந்தை உணர்ந்தால், உன்னை அடித்து விடுவார்!''

"என்னை நம்புங்கள், சின்ன முதலாளி," பாக் மெதுவாய்க் கெஞ்சினான். "தயவுசெய்து என்னை நம்புங்கள்!"

இறுதியாய் அவர்கள் மணமகளின் வீட்டை அடைந்தனர். அங்கு அவரது தந்தை அவர்களை வாயிலில் சந்தித்தார். வழக்கம் போல், இரண்டு வேலைக்காரர்கள் டோங் சின் கீழே இறங்குவதற்கு ஒரு மிதியடியை வெளியே கொண்டு வந்தனர். ஆனால் கால்கள் படும் முன்னரே, பாக் ஒரு மூலையைப் பிடித்து இழுத்தான். டோங் சின் மண்ணில் விழுந்ததால் மணமகளின் தந்தை திகைத்தார்.

"இந்த மிதியடி அழுக்கு!" பாக் கத்தினான். அதை வேலையாட்களுக்கு முன் பிடித்துக் காட்டி, தூக்கி எறிந்தான். " சின்ன முதலாளியின் திருமண நாளில் மிதியடியைக் கொண்டு வர உங்களுக்கு என்ன துணிச்சல்!"

வேலையாட்கள் மணமகனைத் தூக்கி நிறுத்தி, அவனது கால்களைச் சுத்தம் செய்யத் துவங்கினர். டோங் சின் அதிர்ச்சியில் இருந்தான். மேலும் அவனால் தனது தந்தையின் முகத்தில் புயல் மேகங்களைக் காண முடிந்தது. ஆனால் அவர்களால் மற்றவர்கள் முன் எதுவும் பேச முடியவில்லை.

அவர்கள் தோட்டத்திற்குள் சென்றனர். அழகான நெய்த துணியால் மூடப்பட்ட ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதன் மையத்தில் ஒரு சிறிய மேசையில், மெருகிடப்பட்ட மர வாத்து, விசுவாசத்தின் சின்னமாய் வைக்கப்பட்டு இருந்தது.

தருணம் வந்ததும், டோங் சின் மேடையில் தனது இடத்தில் அமர்ந்தான். மை ஹீ என்ற மணமகள், பச்சை நிற மணப்பெண் உடையில் தோட்டத்திற்குள் அழைத்து வரப்பட்டாள்.

டோங் சின் தனது வருங்கால மனைவியைப் பற்றிய முதல் பார்வை அது! அவளது சாந்து பூசப்பட்ட முகம் தந்தம் போல வெளிறியிருந்தது. மெல்லிய கோடிட்ட புருவங்கள் பட்டாம்பூச்சி இறக்கைகள் போல வளைந்திருந்தன. அவளது கருங் கூந்தல், எண்ணெய் தடவிப் பளபளப்பாய் காணப்பட்டது. கூந்தல் சுழல்கள், பட்டைகள், அலைகள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நகைகள் மற்றும் பிரகாசமான வண்ண நாடாக்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு தலைக்கவசம் இருந்தது.

மை ஹீ மேடையில் ஏறி டோங் சினை எதிர்கொண்டாள். அவள் மிகவும் அழகாய் இருப்பதாய் அவன் நினைத்தான். ஆனால் அவன் சிரிக்க பயந்து, பதட்டமாய் இருந்தான். சிறிது நேரம் கழித்து, அவள் அமைதியாய் நான்கு முறை அவனை வணங்கினாள். பிறகு அவன் நான்கு முறை வணங்கினான்.

விழா நிறைவுற்றது. டோங் சின் திருமணம் செய்து கொண்டார்!

நாள் முழுவதும், டோங் சின் விருந்து மற்றும் பொழுதுபோக்குகளை அனுபவித்தான். ஆனால், பெண்கள் விடுதியில் தனி விருந்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட மை ஹீயை இன்னும் அதிகமாய்ப் பார்க்க அவன் ஆர்வமாய் இருந்தான்.

அன்று இரவு வெகுநேரம், விருந்தினர்கள் சென்றதும், அந்த இளைஞன் கடைசியாய் மணமகளின் அறைக்கு அழைத்து வரப்பட்டான். உள்ளே நுழைந்து மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் வெட்கத்துடன் நின்றான்.

மை ஹீ, இன்னும் தனது திருமண உடையில், வழக்கப்படி ஒரு மூலையில் அமைதியாய் மண்டியிட்டாள். டோங் சின் அருகில் வந்து வணங்கியபோது அவள் பதட்டத்துடன் சிரித்தாள்.

"உங்களைச் சந்திப்பதில் நான் பெருமைப்படுகிறேன்," என்று அவன் கூறினான். "உங்கள் உதவியுடன், நான் ஒரு தகுதியான கணவனாய் இருக்க முயல்வேன்."

அப்போது, கதவு பரந்து திறந்தது. ஒரு நீண்ட சமையலறைக் கத்தியுடன் பாக் நுழைந்தான். "சின்ன முதலாளி கவனமாய் இருங்கள்!"

மை ஹீ அலறி துள்ளிக் குதித்தாள். டோங் சின் அருகில் இருந்தான். "பாக்! பாக்! உடனே கிளம்பு!''

ஆனால் பாக் கேட்கவில்லை. உறங்கும் பாயில் விரைந்து சென்று எடுத்தான். அங்கே ஒரு பாம்பு கிடந்தது. முறுக்கிக் கொண்டு, சீண்டியது. பாக் அது இறக்கும் வரை, அதை மீண்டும் மீண்டும் குத்தினான்.

பின்னர் பாக், திரும்பி வாயடைத்து நின்ற டோங் சின் முன் மண்டியிட்டு, "சின்ன முதலாளி, இந்தப் பயனற்ற வேலைக்காரனின் துடுக்குத்தனத்தை மன்னியுங்கள்."

அதற்குள் சத்தம் கேட்டு மற்றவர்கள் உள்ளே ஓடி வந்தனர். "பாக்!'' டோங் சின் தந்தை கத்தினார். "இந்தக் கோபத்தின் அர்த்தம் என்ன?"

"அப்பா," டோங் சின், பாம்பைக் காட்டி, "பாக் எங்கள் உயிரைக் காப்பாற்றியுள்ளார்!''

பின்னர் பாக் கதை ஆவிகள் மற்றும் அவர்களின் பழிவாங்கும் திட்டங்கள் அனைத்தையும் கூறினான். "ஒரு வயதான வேலைக்காரன் சொல்வதை யாரும் கேட்க மாட்டார்கள். எனவே சின்ன முதலாளியை நானே பாதுகாக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்" என்று அவன் கூறினான்.

"இது எல்லாம் என் தவறு," டோங் சின் கூறினான். ‘‘கதைகளை எனக்குள்ளேயே வைத்துக் கொள்ள விரும்பியவன் நான். ஆனால் இனி இல்லை. இந்த இரவிலிருந்து, என்னால் முடிந்த போதெல்லாம், யார் கேட்பார்களோ அவர்களுக்குச் சொல்வேன். பாக், நீங்களும் சொல்வதாய் உறுதியளிக்கிறீர்களா?''

"சரி, சின்ன முதலாளி," பாக் புன்னகையுடன் கூறினான். "நான் வாக்கு கொடுக்கிறேன்."

**

அத்துடன் கதை ஆவிகளின் கதை முடிகிறது. ஆனால் இப்போது நீங்கள் அதை அறிந்திருக்கிறீர்கள், அதை வேறு ஒருவரிடம் சொல்லுங்கள் - அல்லது கதை உங்கள் மீது கோபப்படலாம்!

திருக்குறள் வழி குறிப்பு

டோங் சின்னின் ஊழியரான பாக் செயலை முடிக்கும் வகை, வரக்கூடிய இடையூறு, முடிந்த போது கிடைக்கும் பெரும்பயன் ஆகியவற்றை ஆராய்ந்து செயல்பட்டதை இக்கதையில் நாம் காணலாம்

காதலியின் கனவுகளில் காகிதக் கப்பல்கள்

.ஒர மொழியின் இரு வரியில்
இருண்டு போய் கிடந்த
நினைவுகளின் குளிர் போர்த்திய காதலுக்கு
நெஞ்சில் சொற்கள் ஊறுகிறது.

விவரிக்கத் தவறிய
உலர்ந்து போன உணர்வுகளை
மனங்களின் மூச்சில்
முடித்து வைத்திருக்கிறேன்.

பொய்யைத் தேடிச் சீண்டிய கனாவில்
பூத்த அமைதியை முத்தமிட்டதில்
கவிப்பாடல் ஒன்று கவிழ்ந்து கிடக்கிறது.

உன்னைக் காண பழுத்துக்கிடக்கும் கண்களைக்
கவலையுதறி நதியோரம் கழுவி
காயம் பயின்ற காகிதமொன்றை
கசக்கிக் கப்பலாக்கினேன்.

ஒருவேளை காற்றுக்கும்
நடுஜாமத்தில் நான் நனைந்து நடந்த
மௌனத்தின் அர்த்தம் தெரிந்திருக்கக் கூடும்.
உன் விருப்பம்போலவே நீ அதிலேறி
கரைகடந்து சென்றுவிடு என்னைவிட்டு.

---ஜோ

ஜெர்லின் பிறிஷா, கன்னியாகுமரி

வீதிகளில் உலாவும் மனித மனங்கள்

த.ஜான்சிபால்ராஜ்
திருநெல்வேலி.

உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகள் ஒருவனுக்குக் கிடைக்கும் அளவைப் பொறுத்தே அவனது வாழ்க்கைமுறையும் அமைய முடிகிறது.

அத்தேவைகளுள் உணவு முதன்மையானது. அதனைக் குறைந்தபட்ச அளவாவது பெறத்தக்க அளவில் வருமானம் உடையவர்களே வறுமைக் கோட்டில் இருப்பவர்;அதிலும் குறைவான வருமாய் பெறும் நிலையிலிருப்போர் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்கள் என்று வரையறுத்து வைத்திருக்கின்றோம்.

இவ்வரையறை இருப்பிட வசதியோடு ஓரளவு மானம் மறைக்க ஆடையுமுடைய அனைவருக்கும் பொருந்தும். ஆனால் நம் நாட்டில் அடிப்படைத் தேவைகள் எதுவும் இன்றி, தெரு/ சாலை ஓரங்களையே வாழிடமாகவும், வழிப்போக்கர்களின் கருணையையே அன்றாட வயிற்றுக்கு

உணவாகவும் கொண்டு உயிர்வாழ்ந்து கொண்டிருப்போரை எந்த வரையறைக்குள் அடக்குவது?!

அத்தகைய ஆதரவற்றோருக்குக் குடும்ப அட்டையோ அல்லது ஆதார் அட்டையோ..இருப்பிட சான்றுகளில்லாததால் எடுக்க முடிவதில்லை. இதனால் தங்களுக்குக் கிடைக்கும் வேலைகளைச் செய்வதற்கான அனுமதிகள் பொதுமக்களால் மறுக்கப்படுகின்றன.

காலங்காலமாகச் சாலையோரங்களில் வறுமையையே உயிரோட்டமாக வைத்துக் கொண்டிருக்கும் இத்தகையோரை நாள்தோறும் எத்தனை எத்தனை கல்வியாளர்கள், அரசியல் பிரமுகர்கள்,அதிகார வர்க்கத்தினர், ஆட்சியாளர்கள் அறிவியலாளர்கள், கோடீஸ்வரர்கள்....என்று தங்களது பயணப்பாதைகளில் கண்டும், காணாமல் சென்று கொண்டிருக்கிறோம்....!?

தெருவீதிகள், சாலையோரங்கள்,மேம்பாலங்களின் அடிப்பகுதிகள், பேருந்து நிலையங்கள்.... போன்ற இடங்களில் உயிர்வாழும் இவர்கள், குடும்பங்களாகவும்

தனிமனிதர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுள் மனநலம் பாதிக்கப்பட்டவர்களும் அடங்குவர். சிலர் உணவிற்காக மட்டும் சாலையோரங்களில் பகல்நேரங்களைக் கழித்து விட்டு தற்காலிக இருப்பிடங்களுக்குச் செல்கின்றனர்.

பெருந்தொற்றுக் காலம்

கொரோனா பெருந்தொற்று காலங்களில் இத்தகையோரது நிலமை மிகவும் பரிதாபகரமானதாக இருந்தது. ஆட்கள் நடமாட்டமற்ற சாலைகளில் உணவிற்காகத் தத்தளித்த இந்த மக்களைத் தன்னார்வத்தொண்டர்கள் பலரும் ஆங்காங்கே உணவளித்துப் பாதுகாத்த நிலையும் உண்டு. ஒட்டுமொத்த மனித இனத்தையும் அழிக்கத் துணிந்த அக்கொடுந்தொற்றின் போராட்டத்தினிடையேயும் "மனிதம் செத்துவிட வில்லை" என்ற வாக்கியம் உயிர்பெற்றதை இத்தகையப் பண்பாளர்கள் நிரூபித்தனர்.ஆனாலும் சாமானியர்களே பொருளாதார குறைச்சலில் மூழ்கி தவித்தபோது இம்மக்களின் நிலமையை விளக்க வேண்டியதே இல்லை.

உணவற்று உயிரிழக்க நேரிட்ட போது அத்தகையோரைத் தங்களது பாதுகாப்பில் வைத்து பராமரித்து, பின்னர் அதிக எண்ணிக்கையைச் சமாளிக்க முடியாமல் அரசின் உதவியோடு அவர்களை உரிய காப்பகங்களில் வைத்துப் பராமரித்த நற்காரியங்களும் நடந்திருக்கின்றன (திருமதி.அஸ்விதா,சமூக சேவகி,தனியார் மனநலமற்றோர் காப்பகம்,கோவில்பட்டி.)

ஆதரவற்ற பெண் குழந்தைகள்

சாலையோரங்களில் தங்கும் பெண் குழந்தைகளின் நிலமையை எண்ணிப்பார்ப்போரை ஆழ்ந்த வேதனை மூடிக் கொள்ளும்.! உலகம் சுற்றும் காமுகர்களின் பார்வையில் இவர்களின் கதி என்னாவது?, யாரை இவர்களுக்கு காவலாக்குவது!? உணவு வேட்கையில் பகலில் இரந்து வாழும் அக்குழந்தைகளின் பெற்றோர் அல்லது சுற்றத்தார் தனியொரு குழந்தையின் நலனில் ஆழ்ந்த அக்கரையோ அதீத அக்கரையையோ வைத்துக் கவனித்துக் கொண்டிருக்க முடியாது.

ஆடை விலகக் காத்துக் கிடக்கும் சில வீணர்களின் உடற்பசிக்கு இலக்காகும் இப்பிஞ்சுகளைக் காக்கத் தவறுகிறது அதிநவீன போக்கில் சென்று கொண்டிருக்கும் இச்சமூகம்.

மூடி மறைக்கும் அவலம்

இந்நிலையில் தேசிய குழந்தைகள் கண்காணிப்பு ஆணையம் *(NCPCR)* ஒரு ஆன்லைன் கண்காணிப்பு போர்ட்டலை *(பால் ஸ்வராஜ் Bal Swaraj (COVID-Care link))* உருவாக்கியுள்ளது.

அத்தளத்தில் "2022 ஜனவரி 11 அன்று உள்ள தரவுகளின்படி நாடு முழுவதும் 5401 குழந்தைகள் தங்களது குடும்பங்களுடன் சாலையோரங்களில் வசிக்கின்றனர், 4148 குழந்தைகள் பகலில் சாலையோரம் தங்கி இரவில் அருகிலுள்ள குடிசைப்பகுதிகளுக்கு அவர்களது குடும்பங்களுடன் திரும்புகின்றனர், 396 குழந்தைகள் ஆதரவின்றி சாலையோரங்களில் தனியாக வசிக்கின்றனர். இவர்களின் மொத்த எண்ணிக்கை 9945 ஆகும்". என்ற தகவல் உள்ளது.

இதில், "2022 ஜனவரி 11 படி உள்ள தரவுகளின் படி தமிழ்நாட்டில் 134 குழந்தைகள் தங்களது குடும்பங்களுடன் சாலையோரங்களில் வசிக்கின்றனர், 43 குழந்தைகள் பகலில் சாலையோரம் தங்கி இரவில் அருகிலுள்ள குடிசைப்பகுதிகளுக்கு அவர்களது குடும்பங்களுடன் திரும்புகின்றனர், 14 குழந்தைகள் ஆதரவின்றி சாலையோரங்களில் தனியாக வசிக்கின்றனர். இவர்களின் மொத்த எண்ணிக்கை 191" என்றும் தெரிவிக்கிறது.

இந்தத் கணக்கெடுப்பில் எந்த அளவு உண்மைத் தன்மை இருக்க முடியும் என்பதை ஆய்ந்தறிதலே நன்று.

தமிழ்நாடு முழுவதிலும் வெறும் 14 குழந்தைகள் மட்டுமே சாலையோரம் தனியாக வசிக்கின்றனர் என்பது ஏற்கத் தக்கதா? சென்னையில் மட்டுமே கண்ணுக் கெட்டும் பகுதிகளில் உணவின்றி அலைந்து திரியும் ஆதரவற்ற குழந்தைகளை எண்ணினால் நூற்றுக் கணக்கில் செல்லும்! பிறகு இதை எப்படி ஏற்பது? வெறும் 14 குழந்தைகள் என்றால் அவர்களை சரியான காப்பகங்களில் மீட்டுச் சேர்க்கும் பணியை மிக எளிதாக மேற்கொண்டு ஆதரவற்ற குழந்தைகளே இல்லை என்ற கணக்கை எளிதில் காண்பிக்கலாமே!?

திருநெல்வேலி, கோவை, திருச்சி, மதுரை போன்ற பெருநகரங்களில் உணவிற்காகவே கையேந்தும் குழந்தைகளின் எண்ணிக்கை கணக்கிலடங்காது.

இந்நிலையில் காப்பகங்களிலும் பெண் குழந்தைகளுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லாத நிலமை இருப்பதை ஊடகச் செய்திகள் அம்பலப்படுத்துகின்றன.

இன்னும் வெளித்தெரியாமல் அடங்கி கிடப்பவை அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது.

அதிகரிக்கும் குற்றங்கள்

சமீபத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரபல நடிகையான மாரிக்கண்ணு என்ற மாரியம்மாளின் கதை சமூக வலைதளங்களில் வைரலானது பரிதாபமான உண்மை. தனது நடிப்பாற்றலால் ஜனாதிபதியால் பாராட்டப்பட்டவர் என்ற தகவலும் அவரது திறமைக்குச் சான்றாக தெரிய வந்தது.

மனநலம் பாதிக்கப்பட்டு அழுக்கடைந்த ஆடையோடு அடையாளம் தெரியாத அளவு அவரது தோற்றம் மாயமாகியிருந்தது மிகவும் வேதனையான காட்சி. திரைப்படங்களிலும் நாடகங்களிலும் முக்கிய வேடங்களில் நடித்த இவர் எவ்வளவு பேரும் புகழுடனும் வாழ்ந்திருப்பார்...!தனது சம்பாத்தியத்தால் தனது குடும்பத்தைச் செல்வச் செழிப்போடு காத்திருப்பார்... ஆனால் ஏதோ ஒரு சூழ்நிலையால் யாருமற்ற நிலையில் நிலைக்குலைந்து நடுத்தெருவில் உயிரை மட்டுமே சுமந்து கொண்டு அலைந்து திரிகிறார் என்பதை காணும்போது... நம்பிக்கையற்ற எதிர்காலம்தான் சிந்தையில் விரிகின்றது. வாழ்கை அனுபவங்களால் சேகரித்து வைத்த நம்பிக்கைகள் பொத்தல் பையில் போட்ட சில்லரைகளாகச் சிலுசிலுவென்று விழுந்து தொலைகின்றது...!

அந்தப் பெண்ணை மீட்டு உரிய வழியில் காப்பகத்தில் சேர்த்த தன்னார்வல தொண்டர்களால் இந்நிலமை வெளிக்கு வந்தது.

ஆம் .... இந்த மாரியம்மாளைப் போலவே ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரு நகரங்கள் முதல் சிறு கிராமங்கள்வரை பெண்களும் ஆண்களும் கந்தலான ஆடைகளுக்குள் எலும்பு கூட்டில் அடைபட்ட தங்கள் உயிரை சுமந்தபடி தங்களையே மறந்து சிரித்தபடியும் அழுதபடியும் ஆதரவற்று அலைகிறார்கள்.

சாலையோரங்களில் அலையும் நாய்கள், மாடுகள், பன்றிகள், பறவைகளைப் போன்றே இத்தகைய மனிதர்களையும் எண்ணி சர்வசாதாரணமாக கடந்து போய்கொண்டே தான் இருக்கிறோம் நாமும்...! ஏன் இப்படி அலைகிறார்கள்... இவர்கள் மழையிலும் குளிரிலும் என்ன செய்வார்கள்? உணவுக்காக இத்தகையோர் பிச்சை கூட எடுப்பதில்லை. மிருகங்களைப் போல கையில் கிடைத்தவற்றை வயிற்றுக்குள் தள்ளி, கிடைத்த இடத்தில் விழுந்து உறங்கி எழுகிறார்கள்.

இவர்களுள் பெண்களின் நிலைமை மிகக் கொடுமையானது. கால்போன போக்கில் நடந்து சென்று இரவில் மரத்தடியிலும் குப்பைகளுக்குள்ளும் உறங்குகிறார்கள். பேருந்து நிலையங்களிலும் படுத்துக் கொள்கிறார்கள். வீடு புகுந்து பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்யும் கீழ்மையானோர் இங்கு வாழ்ந்து கொண்டிருக்க

....சாலையோரங்களில் உறங்கும் இப்பெண்களின் நிலமையை நினைத்துப் பார்க்கவே வேதனிக்கின்றது மனம்.

விழிப்புணர்வு அவசியம்

தமிழகத்தில் மாவட்டங்கள் தோறும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மனநலம் பாதிக்கப்பட்டோர்களுக்கான அரசு மற்றும் அரசு சாராத தொண்டு நிறுவன

காப்பகங்கள் இருக்கத் தான் செய்கின்றன. ஆனாலும் அக்காப்பகங்களால் பராமரிப்பிற்குள் கொண்டுவர முடியாத அளவு மனம் பேதலித்தோர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது என்பதே உண்மை.

இதற்கு மிக முக்கியமான காரணம் மன நலம் பற்றின சரியான அறிவு மக்களிடம் இன்னும் ஏற்படவில்லை என்பது தான்.

தங்கள் வீடுகளில் மனநலம் பாதிக்கப்பட்டு அவர்களது செயல்களில் மாற்றங்கள் ஏற்பட்டு விடும்போது அதை புரிந்து கொள்ள முடியாமல் உடனே பேய், பிசாசு, செய்வினை. என்று எண்ணி சரியான மருத்துவச் சிகிச்சைக்கு உட்படுத்தாமல் மன வியாதியை மேலும் அதிகமாக்கி விடுகிறார்கள்.

மேலும் ,உற்றார் உறவினர்கள் கேவலமாக நினைப்பார்கள் என்ற பிற்போக்கான எண்ணத்தால் வீட்டிற்குள்ளேயே அடைத்து வைத்து பில்லிசூனியம், மாந்த்ரீகம் என்ற பெயரில் கொடுமைப்படும் அவல நிலை இன்றும் கிராமங்கள், நகரங்கள் என்று நம் நாட்டில் எங்கும் இருந்து கொண்டுதான் இருக்கின்றது.

சில அறிவிலிகள், தான் பெற்றப்பிள்ளை என்றும் பாராமல் தாங்கள் விரும்பாத சாதி மற்றும் மதம் மீறி காதலில் விழுந்து விட்டால் மாநிலங்களைத் தாண்டி பிற மாநிலங்களில் மனநலமற்றோர் வாழும் காப்பகங்களிலோ அல்லது நடுத்தெருவிலோ விட்டு விடுகிறார்கள். பின்னர் எந்தவகையிலாவது குணமடைந்து தங்கள் விலாசங்களைக் கூறும் போதுதான் இத்தகைய கவலைக்குரிய உண்மையான தகவல்கள் தெரியவருகிறது.

இன்னும் சிலர் காப்பகத்தாரின் அரவணைப்பு மற்றும் மருத்துவ சிகிச்சை ஆகியவற்றிற்குப் பிறகு குணமடைந்து விட்டாலும் அவர்களை வந்து அழைத்துக் கொண்டு போக மறுக்கவும் செய்வதாக அதன் பொறுப்பாளர்கள் கூறுகின்றனர். இதற்கு அவர்களைச் சார்ந்தோரின் அறியாமையே முதல் காரணமாக இருக்கிறது. குறிப்பாக,எங்கோ சென்று இத்தனை வருடங்களுக்குப் பிறகு வீட்டிற்கு வரும் பெண்களைச் சுற்றத்தார் என்ன நினைப்பார்கள்....!? இத்தனை நாட்கள் இவள் எப்படி, எங்கே, இருந்திருப்பாள்? என்ற மற்றவர்களின் மௌனப் பார்வைகளுக்கும், பேச்சுகளுக்கும் அஞ்சியே ஆகும்!

அந்நிலையில், "பாதிக்கப்பட்டோரின் மனநிலை எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே மிகவும் வேதனையாக இருக்கும். குணமாகி மனம் தெளிந்து சுயநினைவை அடைந்த பிறகு, வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படாதோர் இத்தகைய காப்பகங்களில் இருப்பது மிகுந்த கொடுமை.(திரு.அனிஸ், மனநல ஆலோசர்,தனியார் மனநலகாப்பகத்தின் பொறுப்பாளர்,திருநெல்வேலி)

பெரும்பாலும் கைவிடப்படுதல் , புரிந்து கொள்ளாமை, திடீர் அதிர்ச்சி சம்பவங்கள், தோல்வி, மரபு வழி நோய்... போன்ற பல காரணங்கள் தான் இத்தகைய மனநல பாதிப்பிற்குப் பெருங்காரணங்களாக இருக்கின்றன.

இவையன்றி பிற மாநிலங்களிலிருந்து கொத்தடிமைகளாக சில தொழில் நிறுவனங்களில் பணிக்கென்று வந்து பின்னர் ஏதாவது காரணங்களினால் வெளியேற்றப்பட்டவர்களும் இதில் அடங்குவர்.

பிச்சை எடுக்கும் சிறுவர்களைப் போதை பொருட்கள் விற்க செய்தல் போன்ற சமூக தீங்கான செயல்களில் ஈடுபடுத்தி பணம் சம்பாதித்து விட்டு, பின்னர் அவர்களால் கைவிடப்பட்டவர்களும் எங்கு செல்வதென்று தெரியாமல் சாலையோரங்களில் சுற்றி அலைகின்றனர்.

பாலியல் கொடுமைக்கு உள்ளாகி மனம் பேதலித்தப் பெண்களின் எண்ணிக்கையே அதிகம்.!

இத்தகையோர் உயிரை உடலுக்குள் வைத்துக் கொண்டு சாலையோரங்களிலும் வீதிகளிலும் உலாவித் திரிகிறார்கள். நாமும் நம் சாலைகளில் தாராளமாக சுற்றித் திரியும் நாய், மாடு , ஆடு, கோழி போன்றவையும் மனம் பேதலித்த இவர்களும் ஒன்று என்ற மனப்பான்மையை பெற்று விட்டோம். இது மனித வரலாற்றில் மாற்றம்பட முடியாத ஒன்றாக எண்ணி மனதை மடங்கடித்த கண்டு கொள்ளாமல் ஒதுங்கிச் செல்கிறோம்.

இந்நிலை மனிதம் குறைந்து வருவதை அறிவிக்கும் மிகக் கொடிய குறியீடு. ஆங்காங்கே தன்னார்வலர்களும் அரசின் அனுமதியோடு காப்பகங்களையும் மருத்துவத்தையும் அளித்து பாதுகாத்து வந்தாலும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்பப் பெருகிதான் வருகிறது இத்தகையோரின் எண்ணிக்கைகளும், அவர்களுக்கு நேரிடும் அவலங்களும்!!

ஒவ்வொரு தனிமனிதனும் இத்தகைய ஆதரவற்றோர் மீது தங்களது பார்வையோடு கவனத்தையும் செலுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்க முயலாமல் போனால்..

நாம் அன்றாடம் பார்க்கும் வீதிகள் இனி மனநலம் மிகுந்தவர்களால் மட்டுமே நிறைந்திருக்கும்.அரசும் இதில் கூடுதல் கவனம் செலுத்தி ஆதரித்தால் மட்டுமே இந்நிலை மாறும்.

தனம்மா பாட்டி

முனைவர் வி.கலாவதி
தமிழ்த்துறைத் தலைவர்.
உதவிப்பேராசிரியர் இராஜபாளையம் இராஜூ க்கள் கல்லூரி

தனம்மா பாட்டி எண்பத்தி நான்கு வயதானாலும் தள்ளாடி தள்ளாடி அம்மியில் சாந்து அரைத்து மணக்க மணக்க குழம்பு வைத்து தாத்தாவிற்கு மதிய உணவு பரிமாறும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். தாத்தா கரடு முரடான குரலில் பாட்டியிடம் பேசினாலும் இருவருக்குமான அன்பை பார்ப்பவர் புரிந்து கொள்ள முடியும். ரேஷன் வாங்க போன தாத்தா வராவிட்டால், வீட்டுக்கும் வாசலுக்கும் குட்டிப்போட்ட பூனை மாதிரி பாட்டி எட்டி எட்டி பார்த்து முணு முணுத்துக் கொண்டிருப்பாள். இந்த மனுசன் இன்னும் வரலையே... எங்க போயி தொலைஞ்சாரோ... என்று முணங்கிக் கொண்டு ரேஷன் கடைக்குச் சென்றவர்கள் யாரேனும் திரும்பி வந்தால் இந்த மனுசன பாத்தீங்களா? என்று விசாரித்துக் கொண்டே இருப்பாள்.

தாத்தா சர்வோதயாவில் வேலை பார்த்தவர். அவருக்கு வரும் பென்சன் பணத்தில் சிக்கனமாகக் குடும்பம் நடத்தும் தனம்மா பாட்டி இரண்டு தெரு அளவிற்கு வீட்டைக் கட்டி வாடகைக்கு விட்டு வரும் வருமானத்தை சேமித்து வைத்திருக்கிறாள். இந்த தம்பதிக்கு ஒரு மகள். பெயர் கல்யாணி. தனம்மாதனது அண்ணன் மகனுக்கு கல்யாணியைத் திருமணம் செய்து வைத்திருந்தாள். அன்னியத்தில் கட்டிக் கொடுத்தால், நாளை பின்ன நம்மை கண்டு கொள்ள ஆளில்லையே என எண்ணினாளோ எண்ணவோ தெரியாது. ஆனால் எப்பொழுதும் யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாது என்பதில் தெளிவாக இருப்பாள். எது கடையில் வாங்க வேண்டும் என்றாலும் தானே சென்று வாங்கி வருவாள். மாடியில் குடியிருக்கும் மகளை எதிர் பார்க்க மாட்டாள். காலையில் எழுந்தவுடன் இருபக்க வாசலையும் தாத்தா கூட்டித் தெளித்து விடுவார். கோலம் போட வரும் தனம்மா பாட்டி படியில் தண்ணீர் தேங்கியிருந்தால் தாத்தாவை வைது தீர்த்து விடுவாள். காலை சிற்றுண்டி முதல் இரவு உறக்கம் வரை விறகடுப்பைப் பயன்படுத்தி பழக்கப்பட்டவள் தனம்மா பாட்டி. எத்தனை வசதி இருந்தாலும் ரேஷன் அரிசியில் தான் மதிய உணவும் சிற்றுண்டியும் செய்வாள். இவர்கள் இருவரும் சத்தமாகப் பேசிக்கொண்டாலே போதும் மாடியில் இருக்கும் மகளும் மருமகனும் கேட்டால், சம்பந்தமில்லாமல் தனம்மா பாட்டியையும் தாத்தாவையும் ஊருக்கே கேட்கும் மைக்செட் போல திட்டி தீர்த்து விடுவார்கள். இவர்கள் சத்தம் கேட்டால் பாட்டியும் தாத்தாவும் அமைதி ஆகி கதவைச் சார்த்திக் கொண்டு வெளியே மாலை வரை வர மாட்டார்கள்.

கல்யாணி தம்பதிக்கு குழந்தை இல்லாததால் கல்யாணியின் கணவன் லெட்சுமணனின் தம்பிக்குப் பிறந்த மூன்றாவது பெண் குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தனர். அவளைப் படிக்க வைத்து மென்பொருள் நிறுவனத்தில் பணியமர்த்தி அழகு பார்த்தனர். அவளுக்கான மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்த கல்யாணி தம்பதியினர் எப்படிப்பட்ட மாப்பிள்ளையைத் தேர்வு செய்தனர் என்பதை எல்லோருக்கும் கேட்கும் படியாகவே பேசிக் கொண்டதுதான் ஆச்சரியம்.

எல்லா வசதியும் நம்மகிட்ட இருக்கு, வர்ற பையன் கூட பிறந்தவங்க யாரும் இல்லாம, அப்பா அம்மா மட்டும் இருக்கிற வீடா, வசதி குறைவா இருந்தா தான் நம்ம பொண்ணு பின்னாடி குட்டி போட்ட பூனை மாதிரி சுத்தி சுத்தி வருவான்னு தேடி தேடி அப்படியே ஒரு நல்ல பையனா பார்த்து கல்யாணம் பண்ணி வெச்சுட்டாங்க. சரி நம்ம கதாநாயகன் தாத்தா, பாட்டி கதைக்கு வருவோம்.

தனம்மா பாட்டி தள்ளாத வயதிலும் தன் உறவுக்காரர்களைப் பார்த்து வீடுகளில் யார் வீட்டு விசேசமாக இருந்தாலும் தவறாமல் கலந்து கொள்வார்கள். அதிலும் பாட்டி கருப்பாக, குட்டையாக (பூ விழுந்த கண்கள்) தலை நிற்காமல் ஆடிக் கொண்டே பேசும் இயல்புடையவள் அப்படி விசேச வீடுகள் என்ன நடந்தது யாரெல்லாம் வந்தார்கள் வரவில்லை யென்று புறம் பேசுவதில் கெட்டிக்காரி. தாத்தாவுக்கு காது கேட்காது பேசினாலும் போட்டிருக்கும் கண்ணாடிக்கு மேலே விழித்து விழித்துப் பார்த்துக் கொண்டே பேசாமல் போய் விடுவார்.

ஒருநாள் பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் வாங்கி கட்டிக் கொண்டது தான் மிச்சம். வீட்ல சும்மா இருக்க முடியாம.... சமஞ்ச பொண்ணு மாதிரி தலைய வெளியில நீட்டி வேவு பார்க்குறது தான் வேலையா, என்று ஏசித் தள்ளிவிட்டாள். அன்றிலிருந்து பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் பாட்டி பேசாமல் தானே இருக்க வேண்டும் என்று நினைப்போம். ஆனால் மறுநாள் காலையில என்ன? இன்னும் வாசல் தெளிக்க வில்லையா என்று பாட்டி கேட்டாள். பேசாமல் இருக்க முடியுமா? பக்கத்து வீட்டுப் பெண் "தெளிக்க போறேன்னு" பதில் பேசிவிட்டாள்.

இந்த பாட்டிக்கு என்ன சொன்னாலும் புரியாது என்று, முணுமுணுத்துக் கொள்ள மட்டுமே அவளால் முடிந்தது. மழைக்காலம் என்றால் பாட்டிக்கு ஆஸ்துமா வியாதி அதிகமாகி விடும். அந்த சமயத்தில் மட்டும் வெளியே வரமாட்டாள். தாத்தா வெளியே வந்தால் பாட்டி எங்கே என்று எல்லோரும் விசாரிப்பது வழக்கம். ஆனால் நாம் கேட்கும் கேள்விக்கு தாத்தா சரியாக பதில் சொல்லவே மாட்டார். பாவம் அவர் என்ன செய்வார் காது கேட்காதே. இதனால் தான் என்னவோ மகள், மனைவி, மருமகனிடம் திட்டு வாங்கிக் கொண்டே இருக்கிறார். பாட்டி தான் ஆஸ்துமா வியாதி நேரங்களில் வெளியே வரமாட்டாள். தாத்தா காலைக்கடன் கழிக்க கையில் தடியுடன் கம்மாய் பக்கம் போய் விடுவார். சொன்னாலும் வீட்டில் இருக்கும் கழிவறையைப் பயன்படுத்த மாட்டார். தண்ணீர் அதிகம் செலவாகுமாம். காந்தியவாதி கொள்கை பின்பற்றக் கூடியவர். அதனால்

தான் அவரின் பக்கத்து வீட்டுப்பெண் தன் பிள்ளைகளுக்கு அவரை காந்தி தாத்தா என்றே அறிமுகம் செய்து அவ்வாறு அழைக்கவும் பழக்கப்படுத்தி இருந்தாள்.

கருப்பாக இருக்கும் தனம்மா பாட்டியை சிவப்பாக இருக்கும் அழகான காந்தி தாத்தா அந்த காலத்தில் விரும்பி தான் திருமணம் செய்தாராம். இந்த அழகான முதியோருக்குள் இருக்கும் புரிதல் இன்றைய தலைமுறைக்கு இருந்தால் விவகாரத்து கேட்டு நீதிமன்றம் செல்ல மாட்டார்கள். அவர்களைப்பார்த்தால் வாழ வேண்டும் என்று ஆசை வரும். அப்படிப்பட்ட முதிய தம்பதிகள்.

ஒருநாள் தன் உறவினருக்கு உடல்நிலை சரியில்லை என்று கேள்விப்பட்ட பாட்டி பார்த்து விட்டு மகளுடன் திரும்பி வரும்போது சாலையில் தடுமாறி விழுந்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மகள் மருத்துவரிடம் காட்டி விட்டு வீட்டிற்கு வந்தவுடன் 3000 ரூபாய் செலவு என்று புலம்பி தள்ளிவிட்டாள். இன்னும் 3 முறை வந்து கட்டு மாற்றிப் போட வேண்டும் என்று மருத்துவர் சொல்லி இருந்தார். தன் வேலையைத் தானே செய்து பழக்கப்பட்டவள் பாட்டி. ஒரு நாள் கூட கடை உணவு என்றாலும் பிடிக்காது. தன் ஆடைகளை யாரையும் தொடக் கூட விடமாட்டாள். எந்த வேலைக்கும் யாரையும் எதிர்பார்க்காமல் வாழ்ந்தவள். இன்று மகள் திட்டிக் கொண்டே எல்லா பணிகளையும் செய்வது அவளுக்கு பிடிக்கவில்லை. படுத்தே கிடப்பது, எந்த வேலையும் செய்யாமல் சாப்பிடுவது, எவ்வித உறுத்தலை அவளுக்கு தந்திருக்கும் என்று உழைத்து சாப்பிடும் வர்க்கத்துக்கு மட்டுமே புரியும். கையில் அடிப்பட்ட வலியைக் கூட 84 வயதிலும் பொருத்துக் கொண்டாள். ஆனால் மனம் படும் வலி தாத்தாவுடன் பகிர்ந்து கொள்ளாமல் பற்களை இறுகக் கட்டிக் கொண்டாள். உடல், நரம்புகளை அடக்கிக் கொண்டாள் எனவும் சாப்பிடாமல் கண்களை மூடிவிட்டாள் என்பதை தாத்தாவிடம் யாரும் சொல்லாமலே புரிந்து கொண்ட தாத்தா தனம்மா பாட்டியின் கைகளை பிடித்துக் கொண்டு எல்லாம் என்னிடம் சொல்வாய். போகிறேன்னு மட்டும் ஏன் சொல்லவில்லை என்று ஒரு வார்த்தையுடன் அவளின் இறப்பை ஏற்றுக்கொண்டார். எப்படி அவரால் ஜீரணிக்க முடிந்ததோ அவரே அறிவார்.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

கேள்வியும் பதிலும்

சசிகலா விஸ்வநாதன்

பாண்டியன் எக்ஸ்பிரஸ் மாம்பலம் தாண்டும் போதே மாலினி விழித்துக் கொண்டாள். மதுரை போகும் போது இருக்கும் உற்சாகமும், மலர்வும் திரும்பி சென்னை திரும்பி வரும்போது சுத்தமாக இல்லை. இங்குதான், அவளுடைய அரசு பணி இருக்கிறது. அவள் சென்னைக்குத்தான் திரும்ப வேண்டியுள்ளது. இல்லத்தில், அவளை எவர் எதிர்பார்க்கிறார்கள்;அவள் கணவரைத் தவிர.

அவளை எதிர்பார்க்கின்றன; அலுவலக கோப்புகளும்; இன்றைய பகுப்பாய்வுகளும். அவளும்,மாத இறுதி ஊதியத்தை... அவளையும் விட அவள் குடும்பம்! மாலினியை உயிர்ப்போடு வைத்திருக்கும் ஒரே விஷயம்; அவளது அலுவல். அதிலும் அவளுக்கு பல பிரச்சனைகள் உண்டு. அவைகள் எவர்க்கும் நிகழ்வதே. அவைகளை அவள் எதிர் கொள்ளுவாள் ; அவள் போக்கிலும்; அதன் போக்கிலும். இப்படி யோசித்துக் கொண்டு இருக்கையிலேயே, ரயில் எக்மோர் ஸ்டேஷனில் நின்றது. அவசரமில்லாமல் நிதானமாக இறங்கினாள். மதுரைக்கு பாண்டியன் ரயிலில் போகும் போதெல்லாம்; அப்பா 'மதுரை சந்திப்பு' எனும் ஃபோர்டு அருகிலேயே நின்றிருக்கும் காட்சி நினைவில் வந்து போயிற்று. ஒரு நாளும் வாசு அவளைக் கூட்டிப் போக ஸ்டேஷனுக்கு வந்ததே இல்லை. மதுரை போகும் போது ரயிலடிக்கு வந்து வழியனுப்பியதும் இல்லை. காலையில் அலுவலகம் கிளம்பும் போதே பயணம் சொல்லிக் கொள்வதுதான் வழக்கம். இந்த முறை மட்டும், அவர் வர வேண்டியிருந்தது, அலுவலக வேலையின் நிர்ப்பந்தத்தினால். காலை ஆறு மணிக்கே அவள் அலுவலகம் வரவேண்டிய கட்டாயத்தில் இருந்தாள்,மாலினி. அதனால் வாசு, மாலினியின் பயண பைகளை எடுத்து வந்து எக்மோர் ஸ்டேஷனில் சந்தித்து கொடுப்பதற்காக, வந்திருந்தார். கூடவே ஒரு "க்ராண்ட் ஸ்வீட்ஸ்" இனிப்புகள் அடங்கிய சிறு டப்பா.ரயில் கிளம்பிக் கொண்டிருந்த சமயம்; ஓட்டமும் நடையுமாய் மாலினி வண்டியில் ஏறும் கணம்; ஒரு நன்னீர் பாட்டிலையும் கையில் கொடுத்தார்.

அவசரத்தில்; அவள். அலுவலகத்திற்கு தயாராகி வெளியே வந்தவளுக்கு, அதிர்ச்சி காத்திருந்தது.

மாலினியின் அத்தை," நீ கேட்கப் போகிறாயா? நான் கேட்கட்டுமா?" என்று அலுவலகத்திற்குக் கிளம்பிக் கொண்டிருந்த வாசுவைப் பார்த்து கேட்க; வாசு இந்த தாக்குதலை எதிர்பார்க்கவில்லை; என்பது அவர் கலவர முகமே காட்டிக் கொடுத்தது." "அம்மா! ஆஃபீஸ் போகிற நேரத்தில், என்ன பேச்சு? சாயங்காலம் பார்த்துக் கொள்ளலாமே; என்று சற்றுக் கடுப்பாகச் சொன்னார். மாலினிக்கு இந்த

விவகாரத்தை இப்போதே முடித்துவிட ஒரு பிடிவாதம் வந்தது. நாள் முழுவதும் இதையே யோசித்துக் கொண்டு ஆஃபீஸ் அலுவலில் ஈடுபட முடியாது." யாராவது ஒருத்தர் கேளுங்கள்; இப்போதே கேட்டுவிடுங்கள்." என்று மாலினி சொல்லவும், " விடு, மாலினி! வாகிளம்பலாம்" என்று விஷயத்தை எளிதாக்க முயன்றார். கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் கொழுந்தன், மது " நீயே கேளும்மா! அவன் கேட்கவே மாட்டான்" என்று தூண்டுதல் போடவும், கையை இடுப்பில் வைத்து முன்னே வந்த அத்தை கண்ணை உருட்டி விழித்து மாலினியை நேரிடையாகப் பார்த்து, கேட்ட கேள்வி இதுதான்" நீ போன வெள்ளிக்கிழமை எவனோட ஒட்டி ஒரசிண்டு ஸ்கூட்டரில் போயிட்டு இருந்தே; வாசுவுக்கு இந்த மானக்கேடு தெரியுமா?" என்பதே ஆகும்.

ஒரு கணம், அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பிறகு புரிந்தது. வெள்ளியன்று அலுவலகத்தில் வேலை முடிய மிகவும் தாமதமான படியால், அலுவலகத்தில் வேலை செய்யும் சின்னையன்

ஸ்கூட்டரில் மாலினியை எக்மோர் ஸ்டேஷனில் கொண்டுவந்து விட்டார். அதை மது பார்க்க நேர்ந்துள்ளது. அதுதான் இப்போது பூதாகரமாக வெடித்துள்ளது. வெறும் வாயை மெல்லுபவர்க்கு, சுவைக்க அவல் கிடைத்தது போல், ரயில் கிளம்பும் சமயம் அதை வாசுவிடம் மாலினி சொல்ல இயலவில்லை. இன்று காலை இந்த விஷயம் வெடிக்கும் வரை, அது அவளுக்கு நினைவிலேயே இல்லை.

மாலினிக்கு எங்கிருந்தோ வந்தது; அந்த கோபமும், தைரியமும். சற்றுக் குரலை உயர்த்தி எதிர் கேள்வி கேட்டாள். " இந்த கேள்வி யாரிடமிருந்து எனக்கு வருகிறது; . உங்களிடமிருந்தா; அத்தை? இல்லை மது ! உன்னிடமிருந்தா? வாசு! நீங்கள்தான் கேட்கிறீர்களா? ஒவ்வொருவருக்கும் தனியான பதில் இருக்கிறது என்னிடம்; யார் கேட்கிறீர்கள் என்பதைப் பொருத்து" என்று கேட்கவும் மூவரும் நிலை குலைந்து போனார்கள். ஒரு பேச்சும் இல்லாமல் வாசு, மாலினி பின்தொடர, அலுவலகத்திற்கு கிளம்பினான். அலுவலகத்திலிருந்து அன்று மாலை மாலினி சின்னையனுடன் ஸ்கூட்டியில் வீட்டு வாசலில் வந்து இறங்கியது அவள் புக்ககத்தாருக்கு வியப்பை அளித்தாலும், அவள் மேல் ஒரு அச்சத்தையும் உருவாக்கியது.அதற்குப் பிறகு அதைப்பற்றி பேச எவரும் துணியவில்லை.

பொந்திடை மலர்ந்த பூக்கள்

விதீயா மனோகரீ

ஆசிரியர்:கவிஞர் லஷ்மி
வெளியீடுபடைப்பு பதிப்பகம்

கவிஞன் எழுதுவதும் வாசகன் படிப்பதும் ஒன்றல்ல. ஒவ்வொரு வாசகனின் கவித்துவ மனமும் தனக்குத்தானே வேறொரு கவிதையை எழுதிக்கொள்கிறது. கவிஞன் சொல்லக்கருதும் பொருளுக்கும் அதை வெளிப்படுத்தும் அவனுடைய சொற்களுக்கும் உள்ள உறுதியான, உண்மையான பிணைப்புமட்டுமே வாசகனை ஈர்க்கமுடியும் என்பார் புதுமைப்பித்தன். அவ்வண்ணமே பொந்திடை மலர்ந்த பூக்கள் எனும் இத்தொகுப்பில் கவிஞர் லஷ்மி வெகு எதார்த்தமாக தன் உள்ளத்து உணர்வுகளைகவிதையாக வடித்துள்ளார். எவ்வித அலங்காரங்களும் மேற்பூச்சுகளும் இல்லாமல் ஆழ்மன உணர்வுகளை சொற்களில் இறக்கி வைத்திருக்கிறார். அச்சொற்கள் வாசகர் உள்ளத்தை ஊடுருவும் திறன்மிக்கவை. அதனால் கவிஞர் லஷ்மிபொந்திடைவைத்தமலர்கள்ஒவ்வொன்றும்கவிதையாகமலர்ந்திருக்கின்றன.

வாழ்வின் இடர்பாடுகளுக்கிடையில் கவிமனதைத் தக்க வைத்துக்கொள்வதென்பது மிகப்பெரிய ஆசுவாசம். வாழ்வின் அத்துணை இடர்பாடுகளையும் கவிதைகளுக்குள் இறக்கி வைத்துவிடமுடியும் என்கிற நம்பிக்கை அதனினும் பெரிய ஆசுவாசம். அந்த ஆசுவாசம் கவிஞர் லஷ்மியின் கவிதைகளில் இருக்கின்றது.அந்த ஆசுவாசம் தான் பலரை எழுதவும் இயங்கவும் வைக்கிறது. தனிமைத்துயரைப் போக்கிக் கொள்ளக் கிடைத்த துணையென கவிதை எப்போதும் இருக்கிறது. தனிமையின் வெந்தணலை ஆற்றும் சக்தி காலைக்கு, கவிதைக்கு இருக்கிறது. தனது மனதை மொத்தமுமாக கவிதையிடம் இறக்கி வைத்திருக்கிறார் கவிஞர்.
எப்போதும் புத்தகங்களிடமும், கவிதைகளிடமும் தன்னை ஒப்புக்கொடுத்துக்கொள்ளும் லஷ்மி எனும் கவிஞருக்கும், வாசகருக்கும் என் வாழ்த்துகள்.
இரா.பூபாலன்
கவிதைகள்
ISBN 978-93-90913-33-6
9 789390 913336
₹120
padaippu.com
பொந்திடை மலர்ந்த பூக்கள் | லஷ்மி | படைப்பு பதிப்பகம்
பொந்திடை
மலர்ந்த பூக்கள்
லக்ஷ்மி

தனிமைத் துயர் பெருகி நிற்கும் வேளையில் கவிதை என்பது துக்கங்களைத் தூர நிறுத்தி சிறு ஆசுவாசமளிக்கும் ஒரு தூக்க மாத்திரைப் போன்றது என்று சிலவேளைகளில் நான் எண்ணுவதுண்டு. ஆழ்மனத் தேடல்கள், தவிப்புகள், தனிமைத்துயர், உறவுகள், காதல், சமூகம்சார்ந்தஅக்கறையுணர்வுஇவற்றையெல்லாம் தனக்குள்ளே தேடித்தேடி கண்டடைந்திருக்கிறார் கவிஞர் . அவரின் தேடல்கள் கவிதைகளாகப் பூத்திருக்கின்றன; அன்பின் மொழியாகிக் கனிந்திருக்கின்றன.

"ஒரு பக்கம் தைக்க மறுபக்கம் கிழிந்து தொங்கும் வாழ்க்கை" என்ற கவிஞரின் குரல் மற்றொரு கவிதையில் "நெருநல் உளளொருவன் இன்றில்லை" எனும் மனிதவாழ்வின் நிலையாமைத் தத்துவத்தை;

"நீர்க்குமிழிகளாக மிதக்கிறது வாழ்க்கை
நீயும் நானோ
என்றேனும்
தொலைந்து விடப் போகிறோம்"
என்கிறார்.

காதலையும் தன் தனிமைக்குள் வரச்சொல்லி அணைத்துக் கொள்கிறார் கவிஞர்,

"நீ எனக்கானவன்
என்று நினைவில்
குறிக்கிடும் சிலர்
உன்னைப் பங்கிட்டுக்கொள்ளப்
போராடுகின்றனர்
விட்டுவிடுவேனா

நான் அனிச்சம்பூ
நான் வானத்து நட்சத்திரம்

என் தனிமைக்குள் வந்துவிடு
இரவில் மின்னும் தாரகையாய்
தனித்திருந்துவிடுவோம்."

அவரே காதலுணர்வு குறித்து மற்றொரு இடத்தில்,

"குப்பைகளிலும்
சாக்கடைகளிலும்
மரம் செடி கொடி
புதர்களிலும்
குழந்தைகளை எறிந்து விடாமல்
உண்மையாக இருக்கும் வரை
காதல் உயிர்மைதான்"

என்று ஒழுக்கமே மனித வாழ்வின் முக்கிய அம்சம் என்பதை சொல்லிச் செல்கிறார்.

பாசாங்கற்றப் பெண் மனத்தின் பரிதவிப்புகளைக் கூறுமிடத்து,

"அவளும் சிரிக்கிறாள்
அழுகிறாள்
காதலிக்கிறாள்
மனைவியாகிறாள்
தாயாகிறாள்
பெண்மையின் முழுமை
அவளின் அறியாமையில்

இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது" என்கிறார்.

மனத்தின் அடியாழத்தில் புதைந்து கிடக்கும் நினைவுகளை கிளறி எடுத்தால் என்ன கிடைக்கும்? அதைத்தான் சொல்கிறது இக்கவிதை...

"சமையலறை என் வியர்வைத் துளிகளைப் பற்றி
கதை பேசிச் சிரிக்கிறது
எல்லாமே என்னோடு இருக்கையில்
உறவுகள் மட்டும் எங்கோ
தூரத்தில் சுயநலங்களாக

எனக்குத் தெரியும்
கதவுகளைத் தாண்டி என் உலகம்
இல்லையென"

இப்படி அக உணர்வுகளைக் கவிதையாக்கித் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ள கற்றிருக்கிறார் கவிஞர் லஷ்மி.

தன் மௌனத்தை உள்ளுக்குள்ளேயே அழுத்திக்கொள்ளும் கவிஞர், அப்பாவின் நினைவுகளில் கரைகிறார்; மனம் பிறழ்ந்தவனுக்கும், யாசகனுக்கும் பரிந்து பேசுகிறார்.

"பிணம் என்று யாரையும்
நினைக்காதீர்கள்
அவர்கள் படுத்திருக்கிறார்கள்
நாம் நடந்துகொண்டிருக்கிறோம்".

என்று வலிமையான உண்மையை எளிதாகச் சொல்லி நகர்கிறார்.

ஒரு பெண்ணாக, பெண்ணின் வலியை உணர்ந்து எழுதியிருக்கிறார் கவிஞர்.

"எப்படி வேண்டுமானாலும்
அவள் புதைக்கப்படலாம்
பலாத்காரத்தால்
நம்பிக்கையைச் சிதைத்து
தூக்கியெறியும் காதலால்
பாலியல் சீண்டல்களால்

சாதிகளின் காலடியில்
மிதிப்பட்டு
தண்டவாளத்தில் கிடக்கும்
காதலனின் உடற்துண்டுகளால்

தாலி, மெட்டி, ஹிஜாப், முக்காடு
தான் மட்டுமே சுமக்கும் நிர்பந்தத்தால்
ஏதோ ஒன்று
அவளை புதைத்துக் கொண்டுதானிருக்கிறது."

என்று பெண்ணினத்தின் துயரெழுதும் கவிஞர் வாழ்வின் மறுபக்கத்தையும் உணர்ந்தவராதலால், வெதுவெதுப்பான அன்பு வளையத்திற்குள் எப்பொழுதும் துடித்து உருண்டு புரளும் உயிராய் வாழ்தல் இனிது என்கிறார்.

எல்லோரையும் அரவணைத்து, எல்லோருக்கும் அன்பைக் கொடுத்து, வாசிப்பையும் எழுத்தையும் நேசிக்கும் கவிஞர் லஷ்மி இப்படைப்பின் வழியாக நம் மனக்கதவைத் தட்டியிருக்கிறார். மெல்லத் திறக்கும் கதவுகள் பொந்திடை மலர்ந்த பூக்களின் வாசத்தை நுகரலாம், திளைக்கலாம்!.

படைப்புகள் தொடரட்டும். வாழ்த்துகள் கவிஞர் லஷ்மி!
அன்புடன்
வித்யா மனோகர்
வல்லினச் சிறகுகள்

அன்னை இல்லம்

எங்கோ ஒரு மூலையிலிருந்து
வீட்டிற்குள் வரும் தீய்ந்த வாசனை
ஏதோ ஒரு வீட்டில்
உடைந்தெழும் பாத்திர சத்தம்
எங்கோ ஒரு குழந்தையின்
அம்மா என்று அழைக்கும் ஒலி
சாலையில் கடந்து செல்லும் போது
சாப்பாடு தயாரா என்ற குரல்
ஆசுவாசப்படுத்தி உறங்கும் காலைப் பொழுதின்
வெளிச்சங்களென புகுந்த வீட்டிற்கு சென்றபின்

அன்னை இல்ல மடியில்
இப்படி ஒவ்வொன்றும்
அவளின் மன சமநிலையை
இறக்கும் வரை உறங்க விடுவதில்லை.

– கார்த்திகா கவின் குமார்
பேராசிரியை, திருச்சி

Hutha
Health Care Products

நலம்..தரம்..சுவை..! இதுவே எங்கள் தாரகமந்திரம்.

மசாலா வகைகள்

*மஞ்சள் தூள்
*தனி மிளகாய் தூள்
* பிரியாணி மசாலா
* 4 in 1 புளிக்குழம்பு மசாலா
* சாம்பார் மசாலா
*மட்டன் & சிக்கன் பெப்பர் தொக்கு மசாலா
* மருந்துக் குழம்பு மசாலா
* முடக்கற்றான் ரசப் பொடி
*மட்டன் & சிக்கன் குழம்பு மசாலா

ஹெல்த் மிக்ஸ்

* ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* கர்ப்பிணிகளுக்கான ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* டயாகேர் ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* பீட்ரூட் ஊட்டச்சத்து மால்ட்

பொடி வகைகள்

* பிரண்டை இட்லிப்பொடி
*பருப்பு சாதப்பொடி
*கொள்ளுப்பொடி

சைவ தொக்கு வகைகள்

* புளியோதரை தொக்கு
* கோங்குராத் தொக்கு
* தக்காளித் தொக்கு
* மல்லித் தொக்கு
* பூண்டு தொக்கு
* முருங்கைக் கீரை சூப்
* வத்தக்குழம்பு தொக்கு
*லெமன் சாதத்தொக்கு
*பிரண்டைத்தொக்கு

பிரசவ லேகியம் (On Order)

கோதுமை இடியாப்பம் மாவு

அசைவ தொக்கு வகைகள்

*வஞ்சிரக் கருவாட்டுத் தொக்கு
*மாசிக் கருவாட்டுத் தொக்கு
*இறால் தொக்கு

Mfg & Marketed by:
HUTHA HEALTH CARE PRODUCTS
Chromepet, Chennai - 600044
PH: 9025303765